
# மணப்பிரசவம்



எஸ்.முத்துமீரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பிரசவம்

சிறுகதைத் தொகுதி

Dr. ஜாபிர்
கௌரவ தலைவர் இலக்கிய பேரவை
நிந்தவூர்.
என் உள்ளம் நிறைந்த
அன்பு வாழ்த்துக்களுடன்
அன்பளிப்பு.

11/07/2021.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிறவெளியீடுகள்-01

**தென்றல் வெளியீடு. தென் இந்தியா**

**உருவகக்கதைகள்**
உருவக்கதைகள்-1982.

**மீராஉம்மா நூல் வெளியீட்டக வெளியீடுகள்**

**கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம்**
கட்டுரைத் தொகுதி-1991

**முத்துமீரான் கவிதைகள்**
கவிதைத் தொகுதி-1993

**முத்துமீரான் சிறுகதைகள்**
சிறுகதைத் தொகுதி-1993

**கருவாட்டுக் கஸ்ஸா**
கவிதைத் தொகுதி-1993

**கக்கக்கனிய**
சிறுகதைத் தொகுதி-2007

**என்னடா கொலமும் கோத்திரமும்**
சிறுகதைத் தொகுதி-2008

**தணல் வெளியீடு**

**கிழக்கிலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள்**
கட்டுரைத் தொகுதி-1991

## ஆசிரியரின் பிறவெளியீடுகள்-02

**ஆசிரிய வெளியீடுகள்**

**கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள்**
கட்டுரைத் தொகுதி - 1997

**இயற்கை**
உருவகக் கதைகள-1999

**இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள்**
கட்டுரைத் தொகுத- 2007

**மானிடம் உயிர் வாழ்கிறது**
சிறுகதைத் தொகுதி

**அன்னைல் வருவானா?**
கவிதைத் தொகுதி- 2008

**இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள்**
கட்டுரைத் தொகுதி- 2011

**கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்**
கட்டுரைத் தொகுதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பிரசவம்

சிறுகதைத் தொகுதி

எஸ். முத்துமீரான்

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Print - 2021

**Manapirvasam**

© S. Muthumeeran

ISBN 978-624-00-1083-2

Page Setting & Cover Design by
Memonkavi

Published by
S. Godage & Brothers (Pvt) Ltd.
661/665/675, P. de S. Kularatne Mawatha, Colombo 10, Sri Lanka.

Printed by
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya, Sri Lanka.

23175/7273/250

முதற் பதிப்பு: 2021

**மனப்பிரசவம்**

© எஸ். முத்துமீரான்

ISBN 978-624-00-1083-2

கணனிப் பதிவு மற்றும் அட்டை வடிவமைப்பு
மேமன்கவி

வெளியீடு
எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்
675- பி. டி. எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு - 10.

அச்சகம்
சதுர அச்சகம்
69- மொரதாஸ் பிளேஸ், வெல்லம்பிட்டி.

23175/7273/250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

மறைந்தும் என் வாழ்வில் மறையாமல்

என்னோடு என்றும் பிரியமாக வாழும் என்

பெற்றோர்கள் இருவருக்கும் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**மு. சிவலிங்கம்**

**ப**டைப்பாளர் எஸ்.முத்துமீரான் நம் நாட்டு இலக்கியத் தளத்தில் கவிஞனாக, கதாசிரியனாக அடையாளமாகியுள்ளவர். கலை வாழ்க்கையில் நாடக ஆசிரியராக அறியப்பட்டவர். சமூக அரசியல் நோக்கில் விமர்சகராக முன் நிற்கின்றவர். சொந்த வாழ்க்கையில் நீதியைத் தேடும் சட்டவாதியாக தொழில் புரிகின்றவர். ஒட்டு மொத்தமாக ஒரு சமூகவாதியாக எம்மத்தியில் நிமிர்ந்து நிற்கின்றவர். இந்த நிமிர்வே முத்து மீரானின் படைப்புலக அடையாளமாகும்.

இவரது எழுத்துக்கள் தனது சமூகநிலையை அதன் பண்பாடுகலாசாரத்தை ஊடுருவிப் பார்க்கின்றன. இந்த ஊடுருவல் மூலம் சமுதாயக் கூறுகளை இனங் காணுகின்றார். சமூக விரோத சக்திகள் இவரது கதையுலகில் நையப் புடைக்கப்படுகின்றன. பாமர மக்கள் எழுச்சிப் பெறுவதற்கு, அவர்களது அறியாமையை கிண்டல்..குத்தல்.. நையான்டி மூலம் இடித்துக் காட்டப்படுகின்றன.

முத்துமீரானின் படைப்பு நிலைப்பாட்டை அவரது சில வரிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**"நான் ஒரு கிராமத்தான். என் கிராமத்தில் அன்றாடம் நான் தரிசிக்கின்ற கள்ளம் கபடமற்ற ஏழைகளின் உணர்வுகளும், உள் உந்தல்களும் தான் எனது கதைகள். அவை கற்பனை ஜாலங்கள் காட்டும் குப்பைகளல்ல.. அவை மானிடத்திற்கு ஒளியூட்டி மனித**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேயத்தை புடம் போடும் என் ஆத்மாவின் ராகங்கள்"** இந்த நிலைப்பாட்டுடனேயே நண்பர் முத்துமீரானின் படைப்புக்கள் வாசகர் மத்தியில் வலம் வந்துக் கொண்டிருக்கின்றன. இப்படைப்பாளன் தனது எழுத்தில் சித்திரம் காட்டும் இஸ்லாமிய கிராமிய உலகம் வியப்புக்குரியது. அந்த உலகத்தின் கதை மாந்தர்கள் வாழ்வாதாரமற்று- வறுமைக்குள் வாடும் துயரங்களே பேசு பொருளாகின்றன. அவர்களது பாமரத் தனங்கள், அவர்களது ஏமாளித்தனங்கள், எடுத்துரைக்கப்படுகின்றன. அவர்களது வாய்மொழி நடையிலேயே கதைகள் நகர்த்தப்படுகின்றன.

பல கதாபாத்திரங்கள் கிராமத்துக்கே உரிய நகைச்சுவை உணர்வாக பட்டப்பெயர்கள் சூட்டப்பட்டு பூனை பல்லனாக, ஒன்றனை பீங்கானாக நடமாடுவது அம்மக்களின் அங்கதச் சுவைகலந்த வாழ்க்கை அழகைக் காட்டி நிற்கின்றது. வீட்டுப் பிராணிகளான நாய் பூனைகளை அரவணைப்பது கிராமத்து ஜீவாதாரத்தில் அதி முக்கியமான கால்நடைகளை உற்றத் துணையாகக் காட்டுவது, காகங்கள் கரைந்து தொல்லைகள் கொடுப்பதைக்கூட விட்டு விடாது சக உயிரினங்களுடன் வாழும் வாழ்க்கையைச் சித்திரிப்பது யாவும் முத்துமீரான் தன்னை தன் பூர்வீக மண்ணோடு பிணைத்துக்கொண்டதை காட்டி நிற்கின்றது. அதே நேரம் அம்மக்கள் ஏழ்மையில் இரந்தும், சக மனிதனுக்கு உதவ முன் வரும் மனப் பொக்கிஷங்களை, அவர்களது பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களை பறைசாற்றி தன் எழுத்தில் காட்டுவதே அக் கிராமத்து மண் வாசனையாகக் கமழுகின்றது.

இந்த தொகுப்பில் பல கதைகள் அவற்றை சான்று பகிர்கின்றன. **மணப்பிரசவம், பேத்த மீன்கள, கக்கக் கனிய**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கதைகள் நினைவில் நிற்கின்றன. இத் தொகுப்பு ஏந்தி நிற்கும் கதைகள் அனைத்தையும் பிரலாகித்துப் பேசுவதை விட வாசகர்களே அவற்றை உள் வாங்கி உணரும் போதுதான் இப் படைப்பாளரின் இலக்கிய கோட்பாடுகளை விளங்கிக் கொள்ள முடியும்.

முத்துமீரானின் கதையுலகம் மானுட நேயத்தை சுமந்து நிற்கின்றது. சமூகத்தின் பலரக இழிவு மனிதர்கள் இப்படைப்பாளனின் கண்டனக் குரலிலிருந்து தப்ப முடிவதில்லை. எதிர்ப்பு இலக்கியங்களுக்கு முத்துமீரான் இலக்கணமாகியுள்ளவர். இலங்கை தமிழ் இலக்கிய தளத்தில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பெரிதாகப் பேசப்படாத எரியும் பிரச்சினையான கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பற்றியும், அவர்களது வாழ்க்கை பற்றியும் இலக்கியக் குரலாக முத்துமீரானின் படைப்புகளே ஓசைகள் எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

கடற்தொழிலை அதைபற்றி ஆழ்ந்து படித்தவராக, அனுபவப்பட்டவராக இவரது எழுத்துக்கள் பேசுகின்றன. அடை மழை காலங்களில் கடலின் நிலைமை, கடலுக்குப் போக முடியாத மீனவர் நிலைமை, கடலில் மீன்களின் நடமாட்டத்தை தடை செய்யும் வாடை, நீரோட்டம், மீன்கள் குவிந்து வருவதாக ஆர்பரித்து அது கடல் பன்றிகளின் நடமாட்டமென ஏமாறும் மீனவர்கள், சுனாமிக்குப் பின் ஏற்பட்ட வங்கக் கடல் வாழ் உயிரினங்களின் நிலை, கடல் திரவியங்களை நம்பித் தவிக்கும் மீனவர்களின் ஏமாற்றங்கள், கடல் சீற்றத்தால் கொள்ளை போகும் உயிரழிவுகள் அரச நிவாரணங்களற்ற அவர்களது பட்டினி வாழ்க்கை யாவும் உலகலாவிய மட்டத்தில் விசாலித்துப் பார்க்கும் சில கதைகள் இத் தொகுப்பில் கொதித்துக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மக்களின் சமூக வாழ்க்கைப் பார்வையில், கிராமத்தவர்கள் தங்களது பாமரத்தனங்களால் ஏற்படுத்திக் கொள்ளும் கலாச்சாரப் பண்பாட்டுக் குறைகளைச் சுட்டிக் காட்டுவதிலும், அரசியல்வாதிகளை, மௌலவிமார்களை, பள்ளி நிர்வாகிகளை, அவர்கள் செய்யும் தவறுகளை பார்த்துக் கொண்டு மௌனித்திருப்பவர்களுக்கப்பால், அவை பற்றி பேசவிரும்பா, ஏனைய படைப்பாளிகளுக்கப்பால் தனித்து நின்று சுட்டிக் காட்டும், தட்டிக் கேட்கும் துணிச்சல்காரனாக இந்த எழுத்துப் போராளி ஓர் முற்போக்குவாதியாக, ஒரு புரட்சிக்காரனாக வாசகர் மத்தியில் புலப்படுகின்றார்.

இன்றைய தமிழ் இலக்கியப் படைப்புலகில் தங்கள் புலமையை காட்ட ஏகப்பட்ட தமிழ் இலக்கிய படைப்பாளர்கள் மத்தியில் இன்றைய யதார்த்தத்துக்கப்பால் புனைவு இலக்கியம் படைக்கும் எழுத்தாளர் மத்தியில் பொழுதுபோக்குக்காக வாசகனை குஷி படுத்தும் ரசனை எழுத்தாளர்கள் மத்தியில், இலக்கியச் சட்ட வரம்புகள் என்று மொழியியல், நடையியல், அழகியல், பின் நவீனம் என இலக்கிய அட்டூழியங்கள் புரிபவர்கள் மத்தியில், விமர்சன யதார்த்தவாத பார்வையில் ஆதங்கப்பட்டு, எழுத்துச் சிந்தனைகளை இன்றைய வாசகப் பரம்பரையினருக்கு இன்று வரை வழங்கிக் கொண்டிருக்கும் பன்முகப் படைப்பாளி முத்துமீரான் இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருமையோடு பேசபபடுவார்.

நமது நாட்டுத் தமிழ் இலக்கிய செல்நெறிகளுள் நாட்டாரியலை அடிநாதமாகக் கொண்டு கணிசமான படைப்புக்களைத் தந்த பெருமையை நிந்தவூர் அல்-ஹாஜ் எஸ்.முத்துமீரான் பெறுகிறார் என்பது படைப்புலகம் அறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகும். கிராமிய படைப்புலகில் இவர் முதல் நிலை கொண்டுள்ளார் என்பதும் இன்னுமொரு சிறப்புக்குரிய விடயமாகும்.

கிராமத்து அடிநிலை முஸ்லிம் மக்களின் இயற்பண்புகளை எடுத்துக் காட்டுகின்ற சிறுகதைகளையும், அம்மாக்களின் தாய்மைக் கீதங்களான தாலாட்டையும் வாழ்வியல் உவமைகளை உபவாக்கியங்களை கருத்தாழத்துடன் கிண்டலாக, நையாண்டியாகக் கூறும் பழமொழி பொக்கிஷங்களையும் சேகரித்து வெளிக் கொணர்ந்த ஆய்வு படைப்புக்களிலும் முத்துமீரான் பெரும் பணியாற்றியுள்ளார் எனலாம். பொதுவாகவே நாட்டாரியல், நாட்டார் இலக்கியம் என பேசும் போது, அவைகளின் வியாக்கியானங்களாக பாடல்களை மட்டுமே முன் நிறுத்துகின்ற மரபு இன்று வரை இருந்து வருகிறது. இம்மரபை தகர்த்தெறிந்து புது வியாக்கியானங்கள் தந்தவர்களுள் கரிசல் காட்டு இலக்கியங்கள் படைத்த கி. ராஜநாராயணன், பொன்னீலன் இவர்களுடன் கவிஞர் வைரமுத்து போன்றோர்களை நினைவுறுத்தலாம்.

இவர்கள் நாட்டார் கதைகள் நிறையவே தந்தவர்கள். நாட்டார் மண் வளச் சொற்களோடு கதைகள் புனைந்தவர்கள்.

இத்தமிழ் நாட்டுப் படைப்பாளர்களுக்கப்பால், இலங்கையில் நிறையவே கிராமிய மணங் கமழும், கதைகளை தந்தவரும், வட்டார மண்வள சொற்களுக்கு முக்கிய இடமளித்தவருமாக முத்துமீரான் பேசப்படுகிறார்.

இப்படைப்பாளரின் வழியாக கிராமிய இலக்கியம் என்றால் அவை பாடல் இலக்கியம் மட்டுமல்ல, கதை இலக்கியங்களாகவும் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி எழுதி வருபவரும் இவரேயாவார். 2010 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது **"ஒப்பாரி கோச்சி"** சிறுகதை தொகுப்புக்கு அணிந்துரை பெறுவதற்காக மூத்த எழுத்தாளர் கி. ராஜநாராயணனின் பாண்டிச்சேரி இல்லத்துக்கு சென்றிருந்தேன். இலங்கை இலக்கியங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்த போது, **"மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்"** என்ற எனது தொகுப்பை அவரிடம் வழங்கிய போது, அவர் அந்நூலை பெருமையுடன் பெற்றுக் கொண்டு, என்னிடம் கேட்ட முதல் கேள்வி **"நிந்தவூர் படைப்பாளர் முத்துமீரான் அவர்களை அறிவீர்களா...?"** என்பதாகும்.

அவர் எனது மிக நெருங்கிய இலக்கிய நண்பர் என்று பதிலளித்தேன் இந்தியாவில் வானமாமலை போன்று பல பேர்கள் நாட்டார் இலக்கியங்களில் நாட்டம் கொண்டு எழுதியிருந்தாலும், நாட்டுப்புற மக்களின் தாலாட்டு பாடல்களை தனித்துவமாக எவரும் எழுதவில்லை என்ற ஒரு முறைபாடு உள்ளது. அந்தக் குறைபாட்டை உங்கள் நாட்டு நிந்தவூர் வாசியான முத்துமீரான் நிவர்த்தி செய்துள்ளார் என்றார்.

இக்கூற்று கி.ராவினது மட்டுமல்ல இலங்கை கிராமிய இலக்கியங்களில் கிராமத்து தாய்மார்களின் பாமர உணர்வுகளில் தாய்மை எப்படி வெளிப்படுகிறது என்பதை அவர்கள் பாடிய பாடல்களைத் தேடிப் பிடித்து, தொகுப்பாக்கிய பெருமை மீரானைச் சேரும். கிராமிய இலக்கிய விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எழுதி வந்தாலும், இலங்கை இலக்கியப் பரப்பில் இவரது படைப்புகள் வியந்து பேசப்படாமைக் குரிய நிலைமை வருத்தத்துக்குரியதாகும்.

இத்துயரத்துக்கான காரணம் பிரதேச இலக்கியங்கள் பரஸ்பரம் வாசிப்பவர்களுக்கு நாட்டம் இல்லாது போனதேயாகும். இதற்குரிய காரணங்கள் வட்டார மொழிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள், மண் வள உரையாடல்கள், முறையே வேறு பிரதேச மக்களின் மேலோட்டமான வாசனைக்கு புரியாமல் இருப்பதேயாகும். இலக்கிய ஆர்வலர்களும், படைப்பாளிகளும் கூட பிரதேச இலக்கியங்களில் சிரத்தை கொள்ளாத நிலை நாம் அறியக்கூடிய தொன்றாகும். இன்று வடபிரதேச இலக்கிய படைப்புகளுக்கென்று விமர்சனங்கள் நிறையவே உள்ளனர். அவர்கள் ஏனைய பிரதேச இலக்கிய படைப்புகளைச் சிரத்தையோடு விமர்சனம் செய்ததாக அறிய முடியவில்லை. அது போன்று மலையக, இஸ்லாமிய இலக்கியங்களுக்குள்ளும் அவ்வப்பகுதி விமர்சகர்களுக்கிடையே நாம் காணக்கூடியதாக விருக்கின்றது. இந்த "தன் வீட்டறிவு" தகர்க்கப்பட்டு, விசாலித்த பார்வைக்குச் செல்லாவிட்டால், ஒட்டு மொத்த இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி முழுமையாகப் பேசப்படாமல் போய்விடும்.

**"முத்திமீரான் சிறுகதைகள்", "மானிடம் சாகவில்லை", கக்கக் கனிய", "என்னடா கொலமும் கோத்திரமும்"** போன்று நான்கு சிறுகதைத் தொகுப்புகளும் வெறுமனே கிழக்குப் பிரதேச முஸ்லிம் மக்களின் சமுதாயப் பிரச்சனைகளை மட்டும் பேசவில்லை. அம்மக்களின் உள்ளக வாழ்க்கையின் இன்பியல் அழகுகள் பற்றியும் துயரங்களின் பாமரத் தன்மையான ஏக்கங்களும் இயலாமையும் இணைந்து நிற்கும் நிலைமைகளுக்கு எதிரான குரலும் அப்படைப்புகளில் எழுந்து நிற்கின்றன. கதைகளில் குமிழியிடும் சமூகச் சாடல்கள் விரல் நீட்டிக் காட்டுகின்ற சமூகக் குற்றங்கள் ஆகியவற்றை அவதானிக்கின்ற போது மீரான் ஓர் எழுத்துப் போராளியாகவும் அடையாளம் காணப்படுகிறார். சில படைப்புகளில் கடற்தொழில் புரியும் உழைப்பாளர்களின் கஷ்டங்கள், தொழிலில் ஏமாற்றங்கள், மீன் வியாபாரிகளின் கொடூரமான வர்த்தகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டல்கள் எடுத்துக் காட்டப்பட்டு. அவர்களின் மீட்சிக்கான உரத்த குரல்கள் ஒலிக்கின்றன. சமூகத்தின் தாழ்நிலை மக்களை ஏமாற்றி உயரும் சமூக விரோத கும்பல், போலி மனிதர்கள் பற்றிய விமர்சனப் பார்வைகள் சில கதைகளில் தோலுரித்துக் காட்டுகின்றன. மக்களைப் பற்றி எழுதும் எழுத்தாளன், அம்மக்களுக்குரிய மொழி நடையில் எழுதும் போது தான் அவர்களால் ஆகர்ஷிக்கப்படுகின்றான்.

கதை இலக்கியங்கள் கதை மாந்தர்களை அணுகிக் கொள்ளும் போதுதான் படைப்பு ரகசியங்கள் வெளியில் தெரிகின்றன. அப்படைப்புக்கள் வெற்றி பெறுகின்றன. மக்களைப் பாடும் படைப்புக்கள் யாவும் மக்கள் இலக்கியமாக அங்கீகரிக்கப்படுகிறன. ஒரு படைப்பாளன் சர்வாதிகாரியாக இருக்கும் பட்சத்தில் தான், அவரது எழுத்துக்கள் மக்களுக்கென உருவெடுக்கின்றன.மீரானின் கிராமியக் கதைகள் யாவும் மக்களின் வாழ்க்கையை அவதானிக்க விரும்புகின்ற சமூகவாதிகளுக்கு உண்மைத் தகவல்களை அழகியலோடு தருவதற்கு காத்திருக்கின்றன.

கதையுலகில் சில படைப்பாளர்கள் கூறி வருகின்ற கருத்து நிலைப்பாடுகளையும் இங்கு அறிவது அவசியமாகின்றன. “மனித விடுதலை... அது சார்ந்த மனித மகிழ்ச்சி... இதுவே இலக்கியத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். **“வலுவான சமூகச் செய்திகள் இல்லாத கதைகள் வெறும் கதைகளே”** என்பது எழுத்தாளர் பொன்னீலனின் வாதமாகும்.

**“சிறுகதைகளின் அடி நீரோட்டம் சமூக மேன்மை கருதி. சமூக விமர்சனம் செய்வதாக அமைய வேண்டும்.”** என்பது தோப்பில் முகமது மீரானின் கூற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளர் முத்துமீரான், சிறுகதைப் படைப்புகளுக்கப்பால் காத்திரமான மரபுக் கவிதைகளையும், புதுக் கவிதைகளையும் எழுதி வருபவர். **"முத்துமீரான் கவிதைகள்", "கருவாட்டு கஸ்ஸா", (கருவாடு சுமந்து விற்கும் கதீஜா என்ற பெண்) "அண்ணல் வருவானா"** போன்ற கவிதைகள் சிறந்த படைப்புகளாகும். உருவகக் கதைகளிலும் படைப்பாளர் தனது தனித்துவத்தைக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இறை பக்தி, இயற்கை, நீதிக் கதைகள் போன்றவை உருவகக் கதைக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

தற்கால இலக்கிய சூழலில் முத்துமீரானின் படைப்புக்கள் யாவும் தனித்துவமாக நின்று படைப்புலகைப் பேசுகின்றன. இவரது படைப்புக்கள் சில பாடப் புத்தகங்களில் பதியப்பட வேண்டிய பெறுமதி கொண்டவை எனலாம். முத்துமீரானின் எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவரவேண்டுமென மக்களை நேசிக்கும் வாசகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் முஸ்லிம் தமிழ் மீனவர்களின் வாழ்வியலில் மணம் கமழும் வார்த்தைகளில் அவர்தம் கதை சொல்லும் ஈழத்து கதை சொல்லிகளில் இவர் தனித்துவமானவர். இத்தொகுப்பில் அமைந்துள்ள புனைப்பிரதிகளில் கிழக்கு மண்ணின் முஸ்லிம் தமிழ் மீனவ மக்களின் வாழ்வியலில் மணம் கமழும் வார்த்தைகளால் அவர்தம் கதைகளை சொல்லி இருக்கிறார் என்ற வகையில், நண்பர் முத்துமீரானின இத்தொகுப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

-மேமன்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எஸ். முத்துமீரான்

நானும் என் இலக்கியங்களும் பூரணமாக கிராமத்தை நேசிக்கும் பண்பும், பக்குவமும் உள்ளதை நீங்கள் தரிசிக்கலாம். என்றும் என்னோடு வாழும், என் கிராமத்து மக்களின், வாழ்வும் அவர்களின் வாழ்வியலும் என் இலக்கியப் படைப்புகளில், சதா பேசும் பண்புள்ளவைகளாக இருப்பதை பார்க்கலாம். இவ்வுண்மையை நீங்கள் அறிந்து, என்னை நேசித்து உதவ வேண்டுகிறேன். இந்நூல் வெளிவர சதா, என்னை நச்சரித்து நூல் வெளியிட வழியையும் காட்டி அணிந்துரை வழங்கி உதவிய என் இனிய நண்பரும் சிறந்த நாவலாசிரியரும், சிறுகதையாசிரியரும் நாட்டாரியலாளருமான மலையகம் வாழ்த்தும் மு. சிவலிங்கம் அவர்களுக்கும் என் அன்பு நண்பரும் கவிஞரும் முற்போக்காளருமான மேமன்கவி அவர்களுக்கும் இந்நூலை தட்டச்சின் மூலம் பொறித்துதவிய தம்பி ஏ. ஆர். ஹசன் முகம்மட் அவர்களுக்கும் சரிபிழை பார்த்து, ஆலோசனைகள் அருளிய முகம்மது ஜபறுல்லா சாஹிப் அவர்களுக்கும் என் நன்றிகள்.

இந்நூலை மிகச் சிறப்பாகவும் வடிவாகவும் வெளியிட்டுத் தந்த கொழும்பு கொடக்கே ஸ்தாபனத் தலைவருக்கும் ஸ்தாபனத்திற்கும் மற்றும் அதன் ஊழிய நண்பர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | |
|---|---|
| பேத்த மீன்கள் | 21 |
| முதியான் கண்டுத் தயிரு | 30 |
| சட்டத்திர கொதறத்த என்னெண்டு செல்லுவன் | 39 |
| லண்டன் மாப்புள | 48 |
| பூனக் குட்டி செத்து பெயித்துகா | 57 |
| ஊடு ஒறங்கிப் பெயித்து | 65 |
| ஒரு கிராமம் அழுகிறது | 74 |
| ஸக்காத் | 81 |
| மனிதர்கள் வாழ்கிறார்கள் | 90 |
| கக்கக்கனிய | 98 |
| மனப்பிரசவம் | 109 |
| மாமிர இட்டும | 119 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேத்த மீன்கள்

உலகை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் பனியை, விடியல் துரத்திக் கொண்டிருக்கிறது. மீனவர்கள் கடலுக்குள் போக முடியாமல், வலைகளை தோணிகளில் ஏற்றி வைத்துக் கொண்டு, கடற்கரையில் சோகமுடன் நிற்கின்றனர். சிலர் வாடிகளுக்குள் குந்திக் கொண்டிருக்கின்றனர். மார்கழி மாத மாரிக் கடல் மலை போன்ற அலைகளை ஆவேசத்துடன் உமிழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆவேசத்துடன் எழும்பி வரும் அலைகளில் பேத்த மீன்கள் அகப்பட்டு, கரையில் உயிரிழந்து கிடக்கின்றன.

பேத்த மீன்களை சாப்பிடாமல், பார்த்துப் பார்த்து காகங்கள் கத்திக் கொண்டிருக்கின்றன. காகங்களின் சப்தத்தில் சிந்தை குலைந்த நாயொன்று, செத்துக் கிடக்கும் பேத்த மீனடிக்கு வந்து மீனை முகர்ந்து பார்த்து விட்டு, கத்திக் கொண்டிருக்கும் காகங்களை விரசி விரசித் துரத்திக் கொண்டிருக்கிறது.

உலகில் யாருக்குமே தேவையற்று அனாதையாகக் கிடக்கும் பேத்த மீனை, அலைகள் தள்ளுவதும் இழுப்பதுமாகக் கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் காற்று அமைதியாக வீசிக் கொண்டிருக்கிறது. கரையில் நிற்கும் மீனவர்கள், கடலில் ஏதாவது மீன் கறுப்படிக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

வாடிக்குள் சில மீனவர்கள் நாயும் புலியும் விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கின்றனர். விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த பச்சத்தண்ணிர பரன்காலன் செல்லப்புள்ள,

'டே தம்பி! செலயிமான், என்னடாம்பி லாவு ஒன்ட அல்லசெல்ல பெரிய கொழப்பமாம் மெய்யா?"

என்று கொற பீடியை இழுத்து, அதன் புகையில் இன்பம் கண்டு கொண்டிருக்கும் பாணிக்குரச்சிர சுலைமானிடம் கேட்கிறான். செல்லப்பிள்ளையின் கேள்வியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தவன் போல்

"மெய்தான் காக்கா....அந்த மகிரக் களரிய என்னென்டு செல்லுவன். லாத்தாட புரிசனக் கூட்டிக்கு தங்கச்சி ஓடிற்றாள். ஒலகம் நல்லாக் கெட்டுப் போச்சி..... மச்சானக் கூட்டிக்கு ஓடின தங்கச்சிக்கு, இப்தான் பதினாறு வயசாம்...சீ! என்ன குடும்பம். வாப்பாவும் உம்மாவும் தலையில அடிச்சிக்கு கொளர்ராங்க. நாம என்ன செய்யிற, லாவு அவகிட ஊட்ட தேசாதி தேசம்...."

என்று சொல்லிவிட்டு, சுலைமான் பீடியை மீண்டும் இழுத்துக் கொண்டிருக்கிறான். அப்பொழுது, நாயும், புலியும் விளையாடிக் கொண்டிருந்த திருவிடத்திர செய்யது,

"இப்ப இதெல்லாம் பெரிசில்ல. பள்ளிக்கொடத்துல படிக்கிற புள்ளய புத்தியறியாமலே கூட்டிக்கு ஓர்ரான்கள். ஆரிட்டயிம் இப்ப ஈமான் இஸ்லாம் ஒழுங்கா இல்ல. மானம் ரோசம் ஒழுங்கா இரிந்தா இப்பிடியெல்லாம் நடக்குமா? இதெல்லாம் இப்ப, பணக்காற ஊடுகளுக்குள்ளதான் கூடுதலா நடக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்டைக்கண்டைக்கு கையக் கசக்கித் திங்கிற ஏழயள்ள ஊடுகள்ள எல்லாம் மானம் மரியாதயோடத்தான் இரிக்கிதுகள். இதெல்லாத்திக்கும் காரணம் பணமும் பெருமையும்தான்" என்றுக் கூறிவிட்டு விளையாட்டில் மூழ்கிக் கொண்டிருக்கிறான்.

வெள்ளாப்பை விரசிவிட்ட மகிழ்ச்சியில், சூரியன் கடலைக் கலக்கி வெளியில் வருகிறான். அப்பொழுது, நவிச்சாள்ள அயாத்திர மகன்காதர், தன் காடை நிறச் சாறனால் கழுத்து வரை போர்த்திக் கொண்டு கடற்கரையோரத்தால் நடந்து வருகிறான். அவன் பின்னால் பீடிப் புகை அவனை துரத்தி வருகிறது. நடந்து வந்த காதர், பேத்த மீன் செத்துக் கிடக்கும் இடத்தடிக்கு வந்து அதைச் சுற்றி சுற்றி கத்திக் கொண்டிருக்கும் காகங்களைத் துரத்தி விட்டு

'கடல்ல கழிவு பேத்த மீன், ஊரில கழிவு ஓலக்க உதுமான்"

என்று கூறி பீடியை உசாராக இழுக்கிறான். கடற்கரையோரத்தில் செத்துக் கிடக்கும் பேத்த மீன்களை அலைகள் கடலுக்குள் இழுப்பதும் கரையில் தள்ளுவதுமாக இருக்கின்றன. காகங்கள் சதா பறந்து பறந்து கத்திக் கொண்டிருக்கின்றன. கடற்புள்ளுகள் அலைகளுக்குள் சிக்கித் தவித்து வரும் சின்ன மீன்களை கொத்திக் கொண்டு பறப்பதில் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. கடற்பேத்தை மீன்களைப் பார்த்து குதுகலிக்கும் காகங்களில் இரண்டு ஒன்றோடொன்று புணர்ந்து, மண்ணில் விழுந்து புரண்டு எழுந்து பறக்கின்றன. கடற்கரையில் ஓடித்திரியும் நண்டுகளை நாய் பிடிப்பதற்கு விரசிக் கொண்டிருகிறது.

சூரியன் சூடாகிக் கொண்டிருக்கிறான். காதர் போர்த்திக் கொண்டிருந்த சாறனை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, வாடிக்குள் போகிறான். நண்டுகளைப் பிடிக்கத் துரத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த நாய் காதரைப் பின்தொடர்ந்து கொண்டிருகிறது. வாடிக்குள் வரும் காதரைப் பார்த்து பூனப்பல்லன்ட மையதின்

'என்னடம்பி பேத்த மீன்களோட பேசிப் போட்டு வாறியா? வாட நீருக்கு தாக்குப் புடிக்க ஏலாம, பேத்த மீனெல்லாம் செத்து வரிகிது.. கடல்ல வாட நீரோடினால், பேத்த மீனெல்லாம் கரைக்குத்தான் வரும். கனக்க மீனெல்லாம் வந்திரிக்கா" என்று கேட்கிறான்.

'ஓம் காக்கா, கரயெல்லாம் ஒரே மீனாத்தான் கெடக்கு காகங்களும் திங்காம செத்த மீன்கள பார்த்துப் பாத்து கத்திக்கி கெடக்கு. இவன் கொக்கிச்சான்ட நாயும் கூட, அதுகளத் திங்காம மோந்து போட்டு எனக்குப் பின்னால வருகிது. ஏன் காக்கா, இந்தப் பேத்த மீன்கள நாய், காகங்கள் திங்கிறெல்லியா?"என்று காதர் கேட்கிறான்.

அதற்கு, வாடிக்குள் கிழிந்த வலைகளை பொருத்திக் கொண்டிருந்த சாளவாயன்ட சமுறுதீன் 'இதெல்லாம் அல்லாட கொதறத்துத்தான் பேத்த மீன்கள ஒருவரும் எடுக்கிறெல்ல. எங்கிட வலயில பட்டாலும் அதுகள எடுத்து வெளிய எறிஞ்சிருவானுகள். அதிலயும் மாரி காலத்துலதான் பேத்த மீன்கள் அதிகமாகச் சாகிற. எல்லாரும் செல்லுவாங்க அந்த மீன் நஞ்சி மீனெண்டு. எல்லா மீனும் அல்லாட படைப்புத்தான்" என்று சொல்லிவிட்டு கிழிந்த வலைகளைப் பொருத்திக் கொண்டிருகிறான்.

வாடியெல்லாம் சோகமயம். தொடர்ந்து மப்பும் மந்தாரமாக இருப்பதால் மீனவர்களின் முகமெல்லாம் வேதனையோடு போராடிக் கொண்டிருக்கின்றன. சுமார் இரண்டு கிழமையாக, மழையினால் தோணிகள் கடலுக்கு போகவில்லை. அடை மழையினால் ஊரெல்லாம் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம். மக்களை பசி, பட்டினி வாட்டிக் கொண்டிருக்கிறது. இன்றுதான், ஓரளவிற்கு ஓயாது பெய்து கொண்டிருந்த மழை, தலை சாய்ந்து, சூரியன் சிரிக்கிறான். சூரியன் சிரித்தாலும், வானம் மழைக்கு கேரிக் கொண்டுதான் இருக்கிறது. வாடை நீர் கடலில் ஓடிக் கொண்டிருப்பதனால் மீன்களின் நடமாட்டம் குறைவாக இருக்கிறது. சின்ன நண்டுகள், கடற்கரையோரத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றன.

'அல்லாட கொதறத்த என்னன்டு செல்லுவன்...இஞ்ச, ஆருக்கும் தேவையில்லாத பேத்த மீனுகள அள்ளிக் கொட்றான். மனிசன்ர பஞ்சம் பசியத் தீக்கிற மீனுகள நல்லா ஒழிச்சிப் போட்டான். ஏதோ குஞ்சு குறுமானுகள்ள பசியப் போக்குகிறத்திற்கு அஞ்சாறு கூட கீரி, மீனுகளத் தரக் கூடாதா..? என்ர வாப்பா இந்தக் கடல்ல, ஒரு மீன் கறுப்பயிம் காணல்லியே. இல்லாட்டி இந்த மாசத்தில, மீன் கிள கிளயா கடலெல்லாம் அல மோதும்....இந்தச் சுனாமி வந்து போனதிற்கு பொறகு, மீன் புடி வட்றுப்பாக அழிஞ்சி பெயித்து...அந்தக் காலத்தில ஒரு சூட மீன் பொரியலோட, ஒரு பானச் சோத்த திண்டு போட்டு எழும்பலாம். அவளவு மணமும் ருசியுமா இரிக்கும்..." என்று தன் குறைகளை வேதனையோடு சொல்லிக் கொண்டு, பாலகப்பட பக்கீர் பேத்த மீன்கள் செத்துக் கிடக்கும் இடத்திற்கு வருகிறான். செத்துக் கிடக்கும் பேத்த மீன்களை, காகங்கள் வட்டமிட்டு வட்டமிட்டுக் கத்திக் கொண்டிருக்கின்றன. கடல்வாட நீருக்கு தாக்குப் பிடிக்க முடியாமல், ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது. பக்கீரைப் பின் தொடர்ந்து வாடிக்குள் படுத்துக் கிடந்த கூள்வாயன்ட குழந்தை, வாரிச்சுறுட்டிக் கொண்டு, டேய் தம்பேய்! அன்னா கடல்ல கறுப்படிக்கிதிரா... தூரத்தில சூடல் கௌ கொதிச்சி வருகிதிரா... அதுக்கு மேலாலால புள்ளுகளும் அடிச்சி வாரத்தப் பாருங்கடா...! என்று கத்தியபடி கடலோரத்திக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வருகிறான். குழந்தையின் பின்னால் வாடிக்குள் இருந்த எல்லா மீனவர்களும் ஓட்டமும் நடையுமாக கடலோரத்திற்கு வருகிறார்கள். வந்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நெற்றியடியில் கைகளை மறைத்து வைத்துக் கொண்டு, கடலில் கொதிச்சி வரும் மீன் கூட்டத்தைப் பார்க்கின்றனர்.

அப்பொழுது, மீன்கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மீனவர்களில் ஒருவன் 'அன்னா கொதிச்சி வாற சூடக்கெள இல்ல... அது கடல் பண்டிகள் கொதிச்சிப் போகிது..." என்று கூற, அதை கரத் தண்டயல் ஆடுகால்வீறான் உறுதிப்படுத்துகிறான். ஓடிவந்த மீனவர்கள் சோகமுடன் மீண்டும் வாடிக்குள் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ஒருவருக்கும் தேவையில்லாத பேத்த மீன்கள் கரையொதுங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்து கட்டயெண்ட மம்மூசி

"என்ன செய்யலாம், எல்லாம் நம்முட தலயெழுத்து...லாவு புள்ளயளுக்கு பசிக்கு குடுக்க ஒண்டுமில்லாம, கஞ்சி காச்சிக் குடுத்த.. இன்டைக்காவது கடல்ல என்னயாவது கெடச்சா, அரிசக்கிரிச வாங்கி, பகலைக்கு சோறாக்கி குடுக்கலாமெண்டு நெனச்சிக்கி வந்த. எல்லா நெனப்பிலயிம் அல்லா, மண்ணைப் போட்டிட்டான். வாறதெல்லாம் பேத்த மீனாத்தான் வரணுமா...? இதுக்குள பாரக்குட்டி, அறுக்கிளா மீன்களா வரக்கூடாதா. போயும் போயும் காகங்கள் கூடத்திங்காத பேத்த மீன்களா கர ஒதுங்கணும்"

என்று தன் நிலையை எண்ணி வேதனையோடு சலித்துக் கொள்கிறான். காகங்கள் பேத்த மீன்களைப் பார்த்து ஓயாமல் கத்திக் கொண்டிருக்கின்றன. வாடிக்கு ஓரத்தில் படுத்துக் கிடந்த நாய், மீனவர்களின் ஆரவாரத்தில் எழும்பி மீண்டும் செத்துக் கிடக்கும் பேத்த மீன்களை சுற்றிச் சுற்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து பறந்து கத்திக் கொண்டிருக்கிறது. காகங்களை விரசிக் கொண்டிருக்கும் நாயைப் பார்த்து

"என்ன செய்யலாம், ஒண்ட பசிக்காவது இந்தப் பேத்த மீன்கள் ஒதவாம பெயித்தே...! நாங்க என்ன செய்யிற, எல்லார்ர வயிறும்தான் காஞ்சி கெடக்கு... என்ர ஊட்டயிம் ஒல வெச்சி ரெண்டு நாளாப் போச்சி. எத்தின தியாலம்தான் மையறுக் கிழங்க அவிச்சிக்கி திங்கிற...? அதுக்கும் இப்ப ஆனவில குதிரவெல விக்கானுகள். பள்ளக் காட்டுக்குள்ள செஞ்ச மய்யறுக் கிழங்கு சேனயெல்லாம், வந்த வெள்ளத்தில அழிஞ்சி பெயித்தாம்... காலம் காலமாக அள்ளித்தாற கடலும், கிள்ளித்தாறத்திற்கும் மனமில்லாமக் கெடக்கு. எல்லாரையிம் அந்த அல்லாதான் காப்பாத்தனும்." என்று கட்டயென்ட மம்மூசி கடவைப் பார்த்து அனல் போன்ற பெரு மூச்சை விடுகிறான். அவனுக்குப் பக்கத்தில் நிற்கும் வள்ளுக்கடியன்ட வதக்கு,

"இன்னா அடிக்கிற வாடக்காத்து நிண்டாத்தான், கடல்ல நீரோட்டம் கொறயிம்... நீரோட்டம் நிண்டா, மேலுக்கு இரிக்கிற மீனெல்லாம் கரைக்கு வந்தால்தான் நாங்க தோணிகள கடலுக்கு தள்ளலாம்..." என்று தன் மீன்பிடி அனுபவத்தை புடம் போட்டுக் கொண்டு வாடியை நோக்கிப் போகிறான். கடல் வித்தையில ஓடித்திரியும் நண்டுகளைப் பிடிப்பதற்கு, நாய் அங்குமிங்கும் ஓடித்திரிகிறது.

கடலில் கூட்டமாய்ப் போன கடற் பன்றிக் கூட்டத்தை பார்த்து ஏமாந்து போன மீனவர்கள் எல்லோரும் வாடிக்குள் மீண்டும் போய் குந்திக் கொண்டிருக்கின்றனர். வானம் மேகக் கூட்டங்களுக்குள் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. கடற்கரையில் தேனீர்கடை வைத்திருக்கும் திருக்கன்ட உதுமான் வாடிக்குள் வருவதைக் கண்ட காதர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்ச இப்ப ஆரிட்டயிம் காசிகீசி ஒன்டுமில்ல.. மனிசன் மீன்பிடி இல்லாமத் தவிச்சிக்கு கிடக்கான். கூதலுக்கு குடீக்க ஒரு கொற வீடியும் இல்லாமக் கெடக்கு...மனிசன் கெடக்கிற நெலமயளப் பாத்திக்கு நீ கடன் அறவிட வாறாய்...இனி, கடலுக்குள்ள தோணி தள்ளி மீன்புடிச்சாதான் **காசி...**" என்று கூறுகிறான்.

வாடிக்குள் குந்திக் கொண்டிருந்த எல்லோரும் ஏகமனதாக ஆமோதிக்கிறார்கள். 'நான் என்னடப்பா செய்யிற? எனக்கு கடன் தந்த கடக்காரன் என்னப் போட்டு தெள்ள கொட்றான" என்று கூறியபடி உதுமான் போகிறான். அவன் போகும் போது 'தம்பேய் அப்படித் தெள்ள கொட்றவன்தான்டா பணக்காரன். ஏழையள்ள கஸ்ரநஸ்ரம் தெரியாம, லாவும் பகலும் எறச்சிக் கறியோட சோத்தத் திண்டிக்கு, கொறட்ட உர்றான் பாரு அவனுக்குத்தான் இப்ப காலம்.... அவனுகளத்தான் நம்முட ஊரான், பள்ளிக்கு தலைவனா வைப்பாகள். இல்லாட்டி எம்பி ஆக்குவானுகள். இந்த நாசமத்துப் போன ஊரானுகள் அழிஞ்சாத்தான், அல்லா கடல்ல மீனயிம் தருவான்.." என்று வால்முட்ற வதக்கு கூற, அவன் பக்கத்தில் இருந்த பக்கீரு அவனைக் கட்டிப் பிடித்து கொஞ்சுகிறான். வானம் மழைக்காக கெக்கரிக்கிறது.

அப்பொழுது அலவாங்கு மீரான்ட அகமது அவசரமாக வாடிக்குள் வந்து தம்பேய் நம்முட பாதுக்கிளிசாட பாத்துராத்தா லாவு மவுத்தாப் பெயித்தா. அவக்கு கபுறு வெட்டணும். ரெண்டு மூணு பேரு வாங்க வாப்பா. ஒதவி ஒத்தாச இல்லாத மனிசி... கவன் புடவ வாங்கக் கூட காசி இல்லாமத் தவிச்சிக்கி இரிக்காங்க..." என்று கூறி அழைக்கிறான். மறுகணம், 'கணக்கப்புள்ள மாமா நம்முட சங்கத்தில இருக்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்புக்காசில இருந்து ரெண்டாயிரம் ரூபாக் காசெடுத்து, பாத்து ராத்தாடமய்யத்து அடக்கிற செலவுக்கு கொடுங்க..." என்று சதக்கிட மம்மது கூற, அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டு, கபுறு வெட்ட மய்யத்துப் புட்டிக்கு போகிறார்கள். கணக்க பிள்ளை அவசரமாக காசி கொடுக்க, பாத்து ராத்தாவின் வீட்டிற்கு போகிறார். பேத்த மீன்கள், யாருக்கும் தேவையில்லாமல் அநாதையாகக் கிடக்கின்றன.

## மண் வளச் சொற்களும் - விளக்கமும்

| | |
|---|---|
| கபுறு | - குழி |
| கபன் | - மரணித்தவர்களை சுற்றி அடக்கும் சீலை. |
| பேத்தமீன் | - உடம்பில் விசமுள் உள்ள பெருத்த மீன். |
| மய்யத்து | - மரணித்தவர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதியான் கண்டுத் தயிரு

பத்து வருடங்களுக்கு முன், இறந்து போன, எங்கள் மூத்தப்பாவின் வருடக் கத்தம், மோதினை எதிர்பார்த்து, சாப்பாட்டு வேலைகளை, என் தாயாருடன் பயிந்து, நிஷா எல்லோரும் யந்திரம் போல் செய்து கொண்டிருக்கின்றனர். பெரிய பள்ளி, புதிய நிர்வாகத்திற்கும், பழைய நிர்வாகத்திற்கும் இடையில் சண்டையாம். ஊரெல்லாம் இதைப் பற்றித்தான் கதைக்கிறார்கள். இதற்கிடையில், வெள்ளிக்கிழமைகளில் பள்ளியில் ஜும்மாப் பிரசங்கம் செய்வதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை என்று புதிதாக ஓதி வந்த மௌலவிமார்களுக்கும், பழைய மௌலவிமார்களுக்கும், பெரிய போட்டியாம். உச்சியில் பொழுது, கொதிக்கிறது. எங்கள் மூத்தம்மா வாசலில் போட்டிருக்கும் ஊஞ்சலில் சின்னத்தம்பியை மடியில் வைத்து, ஆட்டிக் கொண்டிருக்கிறா. எப்படியாவது தன் கணவரின் வருடக்கத்தத்தை ஒழுங்காக ஓதிவிட வேண்டுமென்பதில் அவக்கு, தணியாத ஆசை. கத்தத்தை நல்லபடி ஓதி, இறந்து போன தன் கணவருக்கு சொர்க்கத்தை இறைவனிடம் வாங்கிக் கொடுக்க, லெப்பையையும், மோதினையும் எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் லெப்பையும் மோதினும் வரவில்லை. வாசலில் நிற்கும் வாழை மரத்திலிருந்து காகங்கள் கத்திக் கொண்டிருப்பதைப் பொறுக்க முடியாமல், எங்கள் நாய் பொட்டு, குரைக்கிறது.

அப்பொழுது, லோளாப் பக்கீர்ர மகன் ஒன்னரப் பிங்கான் செயிலாப்தீன் வருகிறான். இவனொரு மனநோயாளி இவனுக்கு பெற்றோர்கள், உறவினர்கள் இருக்கிறார்கள். சின்ன வயதிலேயே இவன், மனநோயாளியாகி விட்டதால் அவனை இவர்கள் ஒழுங்காகப் பார்ப்பதுமில்லை, கவனிப்பதுமில்லை, சில நேரங்களில், இவனுக்கு கிடைக்கும் பிச்சைக் காசை சேர்த்து இவன் தாயிடம் கொண்டு போய் கொடுத்து விட்டு வருவான். சதா, காடை நிறச் சாறனுடன் ஒரு பச்சை நிற ரீசேட்டைப் போட்டுக் கொண்டு, ஒன்னரைப் பிங்கான் என்னும் பட்டத்தோடு ஊரெல்லாம் அலைந்து திரியும் இவனுக்கு நிரந்தர இருப்பிடம் கிடையாது. பசித்தால் உரிமையோடு எவருடைய வீட்டிலாவது போய்ச் சாப்பிட்டு விட்டு, நித்திரை வந்தால் எந்த இடத்திலாவது போய்த் தூங்குவான். இவனை யாரும் விரட்டுவதுமில்லை, துன்புறுத்துவதுமில்லை. சுமார், இருபது வயது மதிக்கத்தக்க இவன் மேல் எல்லோருக்கும், இனம் புரியாத ஒருவித பாசம். வாசலில் வந்து நிற்கும் செயினுலாப்தீன் ஊஞ்சலில் இருக்கும் மூத்தம்மாவைப் பார்த்து தன் காவி நிறப் பற்களைக் காட்டி சிரிக்கிறான். அவனைப் பார்த்து எங்கள் சின்னத் தம்பி கையை ஆட்டி, ஆட்டி குதிக்கிறான். மூத்தம்மா 'செயினுலாப்தின்! கனகாலத்திற்கு பொறகு, நோன்புப் பெருநாளைக்கு கனக்க காசெல்லாம் சேந்திக்கா...? எல்லாத்தயிம் வெச்சிரிக்கியா இல்ல உம்மாட்ட கொண்டு போய் குடுத்திட்டியா? ஒனக்கென்ன ராசா மகன். போற எடமெல்லாம் சோறு, நித்திர வந்த எடமெல்லாம் படுக்க. குடுத்து வெச்சவன். ங்.... உள்ளுக்குப் போய் இரி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்டைக்கு அப்பாட வரிசக் கத்தம் ஓத நம்முட பெரிய பள்ளி மோதினும் லெப்பையிம், லுகரத் தொழுது போட்டு வருவாக" என்று அன்பாக கூறிவிட்டு, மெதுவாக ஊஞ்சல ஆட்டித் தம்பியை தூங்க வைத்துக் கொண்டிருக்கிறா.

செயினுலாப்தின் எங்கள் வீட்டு விறாந்தையில் வந்து குந்திருந்து, அவனுடைய மடியிலிருந்து வீடி ஒன்றை எடுத்து பற்ற வைத்து சந்தோசமாகப் புகையை, மூக்கால் விட்டுக் கொண்டிருக்கிறான். "ச்சா...! லாத்தாட எறச்சிக்கறிர மணம், மூக்கப் பொக்கிதுகா... எனக்கு ஒன்னரப் பிங்கான் சோறும், ஒரு கோப்ப எறச்சிக் கறியும் தந்திரனும். எறச்சிக் கறி திண்டு கனகாலமாப் போச்சி. எனக்கு எறச்சிக் கறியென்டா உசிருகா... எறச்சிக்குள்ள மய்யறுக் கிழங்கும் போட்டு ஆக்கினா, சும்மா அள்ளிட்டு கொள்ளி கொத்தும்.... அதிலயும் பள்ளக்காட்டு கெழங்கென்டா செல்லத் தேவெல்ல..." என்று செயினுலாப்தின் சொல்லி முடிப்பதற்கிடையில், அடுப்படியில் கறி சமைத்துக் கொண்டிருந்த என் "ஓங்கா...! ஒன்ட ஒன்னரப் பிங்கான் சோத்தையிம், ஒரு கோப்ப எறச்சிக் கறியையும் உடமாட்டாய். ஊருக்க அடிக்கிற பஞ்சம் ஒனக்கெங்க தெரியப் போகிது..." என்று சொல்லி விட்டு, சமையலில் யந்திரமாகி விட்டா.

அப்பொழுது, எங்கள் வீட்டுப் பிள்ளையாக எங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கும்ஹாய்ளயம்பிவருகிறான். வந்தவன் 'என்ர வாப்பா! பெரிய பள்ளியடிய ஒரே சனமாகக் கெடக்கு... புதிசா வந்த ரஸ்டிப் போட்டுக்கும், பழைய ரஸ்டி போட்டுக்கும் செரியான சண்டையாம்..... லிஸ்ருப் போட்ட எம்பிமாரெல்லாம் கொழும்பிலயாம். ஊரு சனமெல்லாம் எம்பிமாருக்கு பாடுகேடா ஏசிக்கி நிக்கானுகள்.... லெப்பையையிம் மோதினயிம் கெதியா வரச் செலல்லிப் போட்டு வந்திரிக்கன்... ஒலகம் கெதியா அழியிற காலம். சுறுக்கா வரப் போகிது...." என்று சொல்லியபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள் வருகிறான். வந்த எளயம்பியைப் பார்த்து செயினுலாப்தின் 'கத்தமெனடா, லெப்பையும் மோதினும் பாஞ்சுழுந்து வருவாக...ஒலகத்தில கத்தமும், பாத்தியாவும் குடுக்கிற ஆக்கள் இருக்கு மட்டும், அவகளுக்கு மட்டும் கோழிக் கறிக்கும் சோத்துக்கும் பஞ்சமில்ல. எங்களப் போல ஏழயளுக்குத்தான் எல்லாத்துக்கும் பஞ்சம்" என்று சொல்லி வீடியை உறுஞ்சி இழுகிறான். வீட்டுக்குள் வந்த எளயம்பி செயினுலாப்தினைப் பார்த்து 'இதார்ரா? கனகாலத்திற்கு பொறகு நம்முட அஞ்சி ரூபாக் குத்தி வந்திரிக்கு..." என்று கூற 'காக்கா... பிளேன்டி குடிக்க, ஒரு அஞ்சி ரூபா குத்திரிந்தா தாகா" என்று செயினுலாப்தின் கேட்கிறான். 'டேய் நீ இந்த அஞ்சி ரூபா குத்தியையும், ஒன்னரப் பிங்கான் சோத்தையும் ஒரு நாளும் உடமாட்டியா? ரெண்டு மூணு ருபா காசி, புழுக்கையாருக்கு ஒரு நாளும் ஒத்துவராது....ஊரில மனிசன் ஒரு சதக் காசிக்கு ஆத்தக்கட்டி இறைக்கான்..அவ்வளவு பஞ்சமா இரிக்கு" என்று சொல்லி, எளயம்பி அடுப்படிக்குள் போகிறான்.

எளயம்பியின் கதையை கணக்கெடுக்காமல், சோற்றை எதிர்பார்த்து, செயினுலாப்தின் குந்திக் கொண்டிருக்கிறான். எங்கள் வீட்டுப் பூனை அவனுக்கு பக்கத்திலிருந்து கத்திக் கொண்டிருக்கிறது. கத்தும் பூனையைப் பார்த்து 'ங்.. கத்தாத, சோறு வரட்டும்.... எறச்சிர எலும்பெல்லாத்தையிம் ஒனக்குத்தாறன். என்ன ஒன்ட வயிறும் வத்தினாப் போல கெடக்கு...! லாவு சோறு திங்கெல்லியா? அவன் இவனுக்கு கத்தம் குடுகிறென்டா செல்லத் தேவல்ல அள்ளி அள்ளிக் குடுப்பாக... இவனுகள் ஓதிற கத்தம் பாத்தியா? மௌத்தான ஆக்களுக்கு கெடக்கையா போகிது...?" என்று செயினுலாப்தின் பூனையோடு பேசிக் கொண்டிருக்கிறான். அவனுடைய பேச்சைக் கேட்டு பூனை வாசலுக்கு போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சலில் இருந்த மூத்தம்மா, "என்னடம்பி! இன்னம் லெப்பயையிம் மோதினயிம் காணல்ல...? கத்தம் பாத்தியான்டா ஒரு நிமிசம் கூட சொனங்கமாட்டாங்க... பள்ளில பெரச்சின பெரிசாப் பெயித்தோ..?" என்று கேட்டு முடிப்பதற்கிடையில், மோதினும் லெப்பையிம் பத்திப் பதறி வருகிறார்கள். இவர்களைக் கண்ட மூத்தம்மா 'வாங்க காக்கா... இன்டக்கி ஓரமாச் சொணாங்கிற்றீங்க... என்ன பள்ளில பெரிய கொளப்பமா? என்று கேட்டு முடிப்பதற்கிடையில் 'அந்த நெருப்ப ஏன் புள்ள கெழப்புறாய்.... அல்லாட பள்ளிக்குள்ள இப்ப, பெரிய செயித்தான் எல்லாம் வந்து படுத்துக் கிடக்கானுகள். சும்மா மூத்திரம் பேஞ்சி ஒழுங்கா கழுவத் தெரியாதவன், குடிகாரன், வட்டிக்கு குடுக்கிறவன், சக்காத்து சதக்கா குடுக்காதவன், அச்சிக்கு போகாதவன், எலக்சன் காலத்தில எம்பிமார்ர ஊட்ட அடுப்படி வேல செஞ்சவன், நோட்டிஸ் ஒட்டினவன், பசவாழி தூக்கினவன் எல்லாரும் ரஸ்டிப் போட்டில மெம்பரா வந்து பள்ளிய பெரட்டி எடுக்கானுகள். பள்ளி அலுமாரி எல்லாத்தையிம் உடச்சி புதுப் பூட்டுகள் போர்றானுகள். இந்த புது ரஸ்டிப் போட்டுக்கு, அஞ்சாறு மௌலவிமாரும் சப்போட்டு. பள்ளிக்க அரசியல் புகுந்து, பள்ளி நாறிது. இந்தப் பாவமெல்லாம் எங்கிட எம்பிமாருக்குத்தான்.... எல்லாருக்கும் பள்ளியத் திங்கிறதான் முதல் நோக்கம்" என்று சொல்லிக் கொண்டு மோதினும் லெப்பயிம் வீட்டுக்குள் போய், விரித்துக் கெடக்கும் பாயில் இருக்கிறார்கள்.

மணக்குச்சி மணம், எல்லா இடத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. 'புள்ளேய் நேரம் பெயித்துகா.. ஆக்கின சோறு கறியெல்லாம் ஆறிப் போயிரும்.., டக்கெண்டு எல்லாத்தையிம் கொண்டு வெய்கா... எதையிம் ஒழுப்புளம் சூட்டோடத் திண்டாத்தான், வாய்க்கு ருசியா இரிக்கும்...தயிர,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முட பெரிய தளிசில வெச்சிக்கந்து குடு.... முதியான்கண்டு தயிரு நல்லாரிக்கும்...." என்று மூத்தம்மா சொல்லிக் கொண்டு உம்மாக்கு உதவி செய்கிறா. மோதினும் லெப்பையிம், கத்தத்தை ராகமெடுத்து ஓதுகிறார்கள். மூத்தம்மா இறந்து போன தன் கணவருக்கு, சொர்க்கம் கிடைக்க மோதினுக்கும், லெப்பைக்கும் கொடுக்கும் கத்தத்தில் ஏதும் குறைகள் நேராமல் பார்த்துக் கொண்டிருக்கிறா. ளயம்பி, செயினுலாப்தினுக்கு சோற்றையும் கறியையும் கொண்டு வைத்து விட்டு அவன் சாப்பிடுவதை, ரசித்துக் கொண்டிருக்கிறான். பூனை மோதினுக்கு பக்கத்திலிருந்து கத்திக் கொண்டிருக்கிறது. 'புள்ளேய் இந்தப் பூனய அங்கால விரசிகா...சோறுங்க உடுகிதில்ல" என்று கூறி விட்டு மோதின் சோற்றுக்குள் முதியான் கண்டுத் தயிரையும் கோழிச்சுடன் வாழைப்பழத்தையும் போட்டு பிசைந்து சாப்பிடுவதைப் பார்த்து, ஆசையை அடக்க முடியாமல் 'லாத்தா, எனக்கும் ஒழுப்புளம் தயிரு தாகா...தயிரு திண்டு கனகாலமாப் போச்சி...நமக்கென்ன கத்தம், பாத்தியா ஓதத் தெரியிமா...? எல்லாம் நம்முட காலம், இல்லாட்டி நானும் ஒரு பள்ளிக்கு மோதினா வந்திருப்பன். வந்திருந்தா, பொறகு எனக்கென்ன பஞ்சம் லாவும், பகலும் கேட்காம சோறு கறி வரும்...இப்ப, ஊருக்க போனா, எல்லாரும் லூசி லூசெண்டு ஏசி, மேசன் வேலைக்கு போகச் செல்லி, எனக்கு ஒண்டும் தராம வெரசிறாங்க. எனக்கு எந்த வேலயிம் செய்ய ஏலா... ஒழுப்புளம் வேல செஞ்சாலும் எனக்கு ஒரே எழக்கிற, கை கால் கடுக்கிற...நான் குடிக்காத மருந்துமில்ல, போடாத குளிசயிமில்ல... ஒன்டுக்கும் கேக்கல்ல...இனி நான், நம்முட ரகுமானியாத் தைக்காக்கு மோதினாப் போப்புறன்...." என்று சொல்லிக் கொண்டு, ளயம்பி கொடுத்த தயிரை சோற்றோடு சேர்த்து கரைத்துக் குடிக்கும், செயினுலாப்தினைப் பாத்து, மூத்தம்மா கொடுப்புக்கால் சிரிக்கிறா....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திக் கொண்டிருக்கும் காகங்களைப் பாத்து, எங்கள் நாய் பொட்டு குரைத்துக் கொண்டிருப்பதால், காகங்கள் பறந்து, பறந்து கத்துகின்றன. பத்து வருடங்களுக்கு முன் இறந்து போன எங்கள் மூத்தவாப்பா உதுமாலெவ்வைப் போடியாரின் வருடக் கத்தத்தை லெப்பையிம், மோதினும், அவருக்கு மேலான சொர்க்கத்தை, இறைவனிடம் வாங்கிக் கொடுக்க பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர். எங்கள் மூத்தம்மா சரிந்து கிடந்த பிடவையை ஒழுங்கா இழுத்து தலையில போட்டுக் கொண்டு, பயபக்தியோடு லெப்பையின் பிரார்த்தனைக்கு ஆமீன் சொல்லிக் கொண்டிருக்கிறா. எங்கள் வீடு, பக்தியில் மூழ்கிக்கிக் கிடக்கிறது.

சூரியன், உச்சியிருந்து சரிந்து கொண்டிருக்கிறான். காகங்களைத் துரத்திக் கொண்டிருந்த நாய் பொட்டு, களைத்துப் போய், வாழைப் பாத்திக்குள் படுக்கிறது. செயினுலாப்தின் சாப்பாட்டை முடித்து வெளியே வந்து, ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் என்னிடம் 'நீதான் என்ர தங்கக் காக்கா...மத்தாக்களெல்லாம் என்ன லூசெண்டு ஏசி விரசிற... என்டைக்கும் நீதான் காசி தாற...எனக்கொரு செவத்த ரீசேட்டு போட்டா நல்ல பவுறா இரிகிறெண்டு, நம்முட சுல்த்தான் காக்கா எப்பயிம் செல்லுவாரு...போற வழியில முடவன்ட கடயில ஒரு பிளேன்டி குடிக்க, அஞ்சி ரூபா குத்திக் காசிம் தந்திரு..." என்று கெஞ்சிக் கொண்டிருக்கிறான். இதைப் பார்த்து மோதின், 'டேய் போடா...எங்க போனாலும் இவருக்கு செவத்த ரீவேட்டும், அஞ்சி ரூபாக் குத்திக் காசிம்தான் தேவப்பர்ற.... ஏதோ, முன்னப்பின்ன ஒழச்சிக் குடுத்த ஆள்மாதிரி. இப்பதான், சாறன உரிஞ்சி போட்டுத் திண்ட, அதுக்குள்ள பிளேன்ரீ குடிக்கணுமாம்..., ஒங்களுக்கெல்லாம் ஒழைக்கிற பொறுப்புத் தெரியிமா...?" என்று ஏச, செயினுலாப்தின் எதுவும் பேசாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதினைப் பார்த்து, வாய்க்குள் எதையோ முணுமுணுத்துக் கொண்டு போகிறான். அவன் போவதைப் பார்த்து,பொட்டு ஊளையிடுகிறது. எளயம்பி, சோற்றைக் கொண்டு போய், நாய்க்கு கொடுக்கிறான். நாய் சாப்பிடும் போது, காகங்கள் நாலா பக்கமும் பறந்து, பறந்து கத்திக் கொண்டிருக்கின்றன.

அப்பொழுது, எங்கள் ஜும்மாப்பள்ளி அதிகாரி, வெறிபிடித்தவன் போல் பத்திப் பதறி, லெப்பையைத் தேடி வந்து நிற்கிறான். அதிகாரியைக் கண்ட லெப்பையும், மோதினும் நெருப்பில் விழுந்த வண்டு போல் துடிக்கிறார்கள். அதிகாரி லெப்ப! பள்ளில பெரிய கொழப்பமாக் கெடக்கு, நம்முட தலைவருக்கு ஆதத்திர மகன் பொல்லால் தலயில அடிச்சி, அவரை ஆசிபத்திரிக்கு எடுத்துக்கு போறாக.. பள்ளிக்கிளாக்கர் பொலிசிக்கு டெலிபோன் எடுத்து, பொலிசி வந்திக்கிட்டு இரிக்காம். புது ரஸ்டிப்போட்டாக்கள், அலுமாரியை உடைத்து, புதுப்பூட்டு போர்றாக... ஊரெல்லாம் தெரண்டு, பள்ளிக்குள்ளதான் கெடக்கு" என்று கூறி ஒரு இடதில் நில்லாது தீப்பாய்கிறான். அதிகாரியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மூத்தம்மா, 'சீ!!! நாசமத்துப் போவாணுகள்..அல்லாட பள்ளியத்திங்க, இவனுகளுக்கு இவளவு ஆசயா...? பள்ளிச் சொத்து நெருப்பில்லியா...? பள்ளிச் சொத்த நல்லாத் திண்டு, ஊரயிம் கேவலப்படுத்தி, ஏழக் கொமருகளயிம் சீரழிச்சிப் போட்டு போனாக்கள், கடசி காலத்தில அவக பேண்ட பீய அவகிட கையாலயே அள்ளித் தின்டகதய ஆரும் மறக்கலாமா? ஒலகத்தில இப்ப எல்லாத்தயிம், அல்லா கண்ணுக்கு முன்னாலதான் காட்றான்....புள்ளேய்! நம்முட அதிகாரிக்கு சோறு குடுகா..." என்று சொல்லி விட்டு அதிகாரி இருப்பதற்கு பாயை விரித்துப் போடுகிறா...சாப்பாட்டை எதிர் பார்த்து வந்தவன் போல், உடனே பயில் போய் அதிகாரி இருக்கிறார். சாப்பாடு பரிமாறப்படுகிறது. மூத்தம்மா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இறந்து போன கணவருக்கு, அவரின் பெயரால மோதினுக்கும் லெப்பைக்கும் கொடுத்த கத்தத்தால், கட்டாயம் சொர்க்கம் கிடைத்து விடும் என்ற அசையாத நம்பிக்கையில், மனநிறைவோடு, அதிகாரிக்கும் கத்தத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறா. நாய் பொட்டு, கொடுத்த சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு வந்து, வாழைப் பாத்திக்குள் அமைதியாகப் படுத்துக் கிடக்கிறது. காகங்கள், நாய் சாப்பிட்டு விட்டு, சட்டியில் போட்டு வந்த மிச்சங்களை கொத்திப் பொறுக்குவதில் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன.

மோதினும் லெப்பையிம் கத்தம் ஓதிய காணிக்கையை, மூத்தம்மாவிடம் வாங்கிக் கொண்டு, ஓட்டமும் நடையுமாக, குழப்பத்தைப் பார்க்க, பள்ளிக்கு போகின்றனர். அவர்கள் அவசர அவசரமாக போய்க் கொண்டிருப்பதைப் பார்த்த நாய் பொட்டு, தலையைக் கிழப்பி உறுமி விட்டு, மீண்டும் படுக்கிறது. மோதினும், லெப்பையிம் மரணித்துப் போன தன் கணவருக்கு, சுவர்க்கத்தின் கதவுகளைத் திறந்து விட்டுப் போகிறார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களை வழியனுப்பி விட்டு வந்து, அதிகாரிக்கு தயிரை எடுத்து கொடுக்கிறா. எளயம்பி முதியான் கண்டுத் தயிரையும், பூ முளையாத கோழிச் சேவலின் இறச்சியையும் எதிர் பார்த்து, அடுப்படிக்கு போகிறான். அடுத்த வருடமும், எங்கள் மூத்த வாப்பாவின் வருடக்கத்தத்திக்கு, முதியான் கண்டுத் தயிரு கிடைக்குமா? மூத்தம்மாவின் ஆசையை, ஆண்டவன் நிறைவேற்றி விடுவானா? கத்தத்தை ருசியாக சமைத்து களைத்துப் போன என் தாயார், தன் வாப்பாக்கு சுவர்க்கம் கிடைத்து விட, மூச்சுப் பிடித்து கத்திக் கொண்டிருக்கும் பூனைக்கும் கத்தத்து சோற்றைக் கொடுக்கிறா. பூனை அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. சொர்க்கத்தைப் பற்றியெல்லாம் அதுக்கென்ன கவலை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்திர கொதறத்த
# என்னெண்டு செல்லுவன்

இயற்கையின் சீற்றமான சுனாமி ஏற்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டாலும் அதன் எச்சங்கள் மட்டும் இன்னும். இப்பகுதி மக்களின் வாழ்க்கையில், கண்ணுக்குள் கிடக்கும் தூசி போல் கிடந்து வேதனைப்படுத்திக் கொண்டே இருக்கின்றது. சொல்ல முடியாத துயரங்களின் பிம்பங்களாய்த் தொடர்ந்து கொண்டிருக்கும் அதன் வடுக்களில் ஒன்றுதான் இன்று கல்முனை நீதிமன்றத்தில் அலிமாவுக்கு உள்ள வழக்கு. வந்து போன சுனாமி அலிமாவின் இளைய சகோதரியின் பால்குடி மாறாப் பச்சிளம் குழந்தையை மட்டும் விட்டு விட்டு அவளின் பிள்ளைகள், புரிசன், இளய சகோதரி எல்லோரையும் கதறக் கதற அள்ளிக் கொண்டு போய் விட்டது. இவளின் இளைய சகோதரியின் புரிசன் தன்னுடைய கைக்குழந்தையை, அலிமாவிடம் ஒப்படைத்து விட்டு, ஓரிரு மாதங்களுக்குள் போய் புதுமாப்பிள்ளையாகி விட்டான். புதுமாப்பிள்ளையாகிப் போனவன் தன் பிள்ளையை பார்க்க ஒருநாளும் கூட வரவில்லை. அலிமா பிள்ளையை கஷ்டப்பட்டு வளர்த்து, இப்பொழுது பாடசாலைக்குப் பாலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்குப் படிக்க அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும் போதுதான், பிள்ளையின் தந்தைக்கும் பிள்ளையை வளர்த்த அலிமாவுக்கும் இன்று நீதிமன்றில் வழக்கு போடப்பட்டிருக்கின்றது. சுனாமிக்கு உறவுகளோடு, உடைமைகளையும் பறிகொடுத்து பட்டமரமாக நிற்கும் அலிமாவுக்கு, மனவுறுதி மட்டும்தான் துணை. இளங்காலை சிரித்துக் கொண்டிருக்கிறது. கல்முனை நீதிமன்ற வளாகம் வழக்காளிகளினாலும், எதிரிகளினாலும், அவர்களின் உறவினர்களினாலும் நிறைந்து கொண்டிருக்கிறது. வந்த சட்டத்தரணிகள் சிலர், தங்களின் சில்லுவலையை கட்டி விட்டு நீதிமன்ற விறாந்தையில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கின்றனர். சிலர் தங்களின் கொசுகயிற்றினால், வழக்குக்கு வருபவர்களை துரத்தித் துரத்தி வீசிக் கொண்டிருக்கின்றனர். நேரம் எட்டு மணியை விழுங்கி, ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறது. நீதிமன்ற வளாகத்தில் கிளை பரப்பி செழித்து நிற்கும் மாமரத்தின் கீழ் அலிமா சோகமே உருவாகி குந்திக் கொண்டிருக்கிறாள். அவளுக்குப் பக்கத்தில், அவளுடைய சொந்தங்கள் சிலர் துணையாக இருக்கின்றனர். "என்னயிரபுள்ள எல்லாம் அல்லாட நாட்டம். இப்பிடியெல்லாம் வருமெண்டு நாம் நெனச்சமா? நாமமொண்ட நெனக்க அந்த அல்லா ஒன்ட நெனச்சிற்றான். பாத்தியா! ஊராள்ள புள்ள ஊராள்ள புள்ளதான். இல்லாட்டி நீ, அவன வளத்த வளப்புக்கு இப்பிடி ஒன்ன உட்டுப் போட்டு, அவன்ட வாப்பாவோட போவானா? அவன் வாப்பாவ எப்ப கண்ட? கழிசற நாய்க்கு புள்ளட சோட்ட இப்பதான் வந்திரிக்கு. இந்த அஞ்சி வரிசத்திக்கும் இல்லாத புள்ளப் பாசம், இப்ப மட்டும் எங்கரிந்து வந்தயாம்? ஒன்ட பாசத்த பாக்க அவன்ட பாசம்.." என்று அலிமாவுக்கு துணையாக வந்த பெண்ணொருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறித் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறாள். அலிமா, வேதனையில் கசிந்து வரும் கண்ணீர்த்துளிகளை முந்தானையால் துடைத்து, அனல் போன்ற பெருமூச்சை விடுகிறாள்.

'கைப்புள்ளயத் தவிக்க உட்டுப்போட்டு, புதுப் பொண்ணத் தேடிப் போன அடசீலத் துண்டுக்கு, இப்ப புள்ள வேணுமாமா? இந்தச் சொனாமி வந்து போய் ஒரு மாசத்துக்குள்ளால புதுக்கல்யாணம் முடிச்சிக்கு போன தூமத்துண்டுக்கு இப்பதான் புள்ள பாசம் பொத்துக்கு வந்திரிக்கி புள்ளேய்! ஒன்ட லோயர் கடுமாள்... இன்டைக்கு கோடு, அவர்ர பேச்சால சும்மா அலறத்தான் போகிது. புள்ளயக் கேட்டு கடிச்சிக்கித்தான் இருப்பாரு. நீ, ஒண்டுக்கும் லோசியாத புள்ள, அல்லா ஒன்ன கைவிட மாட்டான். புழுக்கையன் புள்ளயத் தந்துபோட்டு போகத்தான் வேணும்' என்று அலிமாவின் பக்கத்து வீட்டு பாத்துமுத்து ஆறுதல் கூறிவிட்டு, இடுப்பில் செருகி இருந்த வெற்றிலை வல்லுவத்தை எடுத்து பிரித்து, வெற்றிலை போடுகிறாள்.

கடற்கரையில் களவாக உழவு யந்திரங்களால் ஏற்றி வரப்பட்ட குருத்து மணல்கள் சட்டத்தால் பறிமுதல் செய்யப்பட்டு, குவியல் குவியல்களாக நீதிமன்ற வளாகத்தில் கிடக்கின்றன. குவிந்து கிடக்கும் குருத்து மணல் கும்பலொன்றில் இரண்டு நாய்கள் சுதந்திரமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. அலிமாவின் வேதனை பொங்கி வழிகிறது.

இந்த நாசமத்து நரி புடிச்சி போயிருவான். அண்டைக்கு எனக்கு இனிப் புள்ள வேணாமெண்டு, கடிதமும் எழுதித் தந்து போட்டுத்தான் போனான். இந்தப் புள்ளய வளக்க நான் பட்ட கஸ்ரங்கள, அந்த அல்லாதான் அறிவான். நான் வாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுத்த மாப்பொட்டிகளுக்கு வருமா? கண்ணத் தின்றுவான் எல்லாத்தயிம் மறந்து என்ர புள்ளக்குஞ்சப் பறிச்சிக்கி பெய்த்தானே...அந்த பச்ச மண்ணுக்கு இதெல்லாம் எங்க தெரியிம் அவன்ட புதுச் சட்டைக்கும், அவன் ஓர்றமோட்டாச் சைக்கிழுக்கும், அவன் காட்ற பம்மாத்துகளுக்கும் அந்தச் சின்னச் சீவன் மயங்கிப் பெய்த்து... நான் எவ்வளவு கூப்பிட்டும், என்னக் கணக்கெடுக்காம, அவனோடத்தான் பெயித்து. ' ஒழுங்கா ஒரு நேரம் சாப்பிட வழியில்லாத என்னால இவனோட வழக்குப் பேச ஏலுமா? இந்த லோயர்மாரு என்ன காசெத்தான் கேக்காக. கண்ண மூடிக்கி பத்தாயிரம், இருபதாயிரம் கேட்டா எங்களப் போல ஏழயளால எப்பிடிக் குடுக்கேலும். இப்பிடிக் குடுக்கிற காசி இவர்களுக்கு தக்குமா? இவகிட புள்ள குட்டிகளெல்லாம் நல்லாரிக்கிமா? இன்டைக்கிம் வஸ்சில வாறத்திக்கும் காசில்லாம ஊரில இருந்து நடந்துதான் வந்த என்ன செய்யிற எல்லாம் ஏழக்கித்தான் வருகிது. இந்தக் கண்கெட்ட சட்டம். இண்டைக்கு என்னயப் போகுதோ...! நான் பட்ட கஸ்ரமும், வளத்த வளப்பும் இந்த லோயர்மாருக்கும், புத்தகத்தில் உள்ள சட்டத்திக்கும் எங்க தெரியப் போகிது... நீதவானும் சட்டப் புத்தகத்ததான் நம்புறாரு...எனக்கு அந்த அல்லா மட்டுந்தான் ஒதவி செய்யணும். அவன நம்பித்தான் வந்திரிக்கன். நானென்ன செய்யிற..? அவன் செய்யிறாப் போல செய்யப்பட்டும்... அவனப்பாக்க நீதவான் இந்த ஒலகத்தில் இரிக்கா..?" என்று அலிமா வெப்புசாரத்தை பெருமூச்சாக விட்டுக் கொண்டிருக்கிறாள்.

நேரம் ஒன்பது மணியை விழுங்கி ஏப்பமிடுகிறது. மறுகணம், நீதிமன்றம் விழிப்படைந்து சுறுசுறுப்படைகிறது. "ங்..கோடு கூடப்போகிது. எல்லாரும் உள்ளுக்குவந்து சத்தம் போடாம அமைதியா இரிங்க.. இஞ்ச மூத்தம்மா கதச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் உள்ளுக்குப் போய் இரியா தம்பேய்! ஒனக்கும்தான் செல்றன். விறாந்தையில நிக்காம வாங்கில போயிரி…" என்று பொலிஸ் உத்தியோகத்தர் ஆணையிடுகிறார். இவரின் ஆணையைச் சிரமேற்று வெளியில் நின்ற எல்லோரும் போய் நீதிமன்றத்தின் உள்ளே இருக்கிறனர். நீதிமன்றத்தின் உள்ளே அமர்ந்திருக்கும் சட்டத்தரணிகள் சிலர், நாட்டில் அழுகிப் போய் நாற்றமெடுத்துக் கொண்டிருக்கும் விசயங்களையும் அதில் மூழ்கி பந்தத்தால் கொழுத்து விரிந்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகளான எட்டப்பர்களைப் பற்றியும் அலசி ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

சிலர் கடைசி நேரக் காணிக்கையை கைப்பற்றிக் கொள்வதில் தங்கள் தங்கள் திறமையைக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நீதிமன்ற சுவர் மணிக்கூடு ஒன்பதரை மணியைப் பறைசாற்ற, பொலிஸ் உத்தியோகத்தர் 'நீதிமன்றம் அமைதி" என்று கட்டியம் கூறுகின்றார். மறுகணம், நீதிமன்றம் அமைதியின் அடிமையாகிக் கிடக்கிறது. நீதிமன்ற முதலியார் முதலில், கூப்பிடும் வழக்குகளைக் கூப்பிட்டு, திகதிகளை அறிவித்துக் கொண்டிருக்கிறார். சட்டத்தரணிகள் தங்கள் தங்கள் திறமைகளால் புடம் போடுவதில் ஆட்டிவிட்ட பம்பரம் போல் ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

கருணையே உருவான நீதவான், அமைதியின் சின்னமாக இருந்து நீதியை நிலை நாட்டிய வண்ணம் நீதிமன்றத்தை நெறிப்படுத்தி வழி நடத்திக் கொண்டிருக்கிறார். விசையேற்றிவிட்ட யந்திரம் போல் மிகச் சுறுசுறுப்பாக முதலியார் இயங்குவதைப் பார்த்து, நீதிமன்ற சுவர் மணிக்கூடு. பதினொரு மணியை விழுங்கிச் சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிடு வழக்குகள் யாவும் முடிவடைந்து விட முதலியார் நீதவானின் அனுமதியுடன் விளக்க வழக்குகளை எடுத்துக் கூப்பிடுகிறார். சண்டித்தனத்தையும், பணத்திமிரையும் எதிர்க்க முடியாமல், சுமார் ஆறு வருடங்களாகத் தன் குருதியை ஊனாக ஊட்டி வளர்த்த பிள்ளையைப் பறி கொடுத்து, நீதிதேவனின் முடிவை எதிர்பார்த்து அலிமா அமைதியாக இருக்கிறாள். விளக்க வழக்குகள் சில முடிவடைந்து இப்பொழுது அலிமாவின் வழக்கு கூப்பிட்டு விளக்கம் தொடங்குகின்றது. உயிர்த் துடிப்புள்ள இவ்வழக்கின் முடிவை எதிர்பார்த்து எல்லோரும் ஆவலோடு இருக்கின்றனர். பிள்ளையை வளர்த்த பெண் அலிமாவுக்காகத் தெரிபடும் சட்டத்தரணி பல சட்டப் புத்தகங்களிலுள்ள சட்டங்களையும் உயர்நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புக்களையும் நீதிவானுக்கு எடுத்துக் காட்டி தன் வாதத்திறமையை பறைசாற்றிக் கொண்டிருக்கிறார். இவருடைய வாதத்தினிடையே நீதவான் சில கேள்விகளை இவரிடம் கேட்டு உயர் நீதிமன்றத் தீர்ப்புகளின் உண்மைத் தன்மையை பட்டை தீட்டிக் கொள்கின்றார்.

அடுத்து பிள்ளையின் தகப்பனுக்காக தெரிபடும் சட்டத்தரணிதான்கொண்டுவந்தசட்டப்புத்தகங்களையெல்லாம் எடுத்து, அதிலுள்ள சட்ட நுணுக்கங்களையும் உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புக்களையும் சொல்லிச் சொல்லி பிள்ளை தகப்பனுக்கே சொந்தம், பிள்ளையை நீதிமன்றம் தகப்பனிடமே ஒப்படைக்க வேண்டுமென்று வாதிட்டு கொண்டிருக்கிறார். சட்டத்தரணிகளின் வாதம் சூடுபிடிக்கிறது. நீதியின் காவலனாக வீற்றிருக்கும் நீதவான், சட்டத்தரணிகள் இருவரையும் சாந்தப்படுத்தி வழக்கின் விளக்கத்தை ஒழுங்காக நெறிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இப்பொழுது இரு சட்டத்தரணிகளின் வாதங்கள் முடிவடைந்து நீதவானின் தீர்ப்புக்காக வழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துக் கிடக்கிறது. இதுவரை, சட்டத்தரணிகளின் வாதங்களைக் கேட்டும் அவர்களின் வாதங்களை ஒழுங்காக நெறிப்படுத்தியும் ஆளுமையோடு இருந்த நீதவான் தன்னுடைய தீர்ப்பைக் கூறுகின்றார். பால் குடிக்கும் பருவத்திலிருந்து மிகவும் கஷ்டமான நிலையில் பிள்ளையை வளர்த்து வந்த அலிமா என்னும் பெண்ணின் தாய்மை உணர்வையும், தன்னலமில்லாத பாசத்தையும் இந்நீதிமன்றம் கருணையோடு மதிக்கிறது. என்றாலும் சட்டத்தின் முன்னே தாய்மையும், பாசமும் ஊமையாகிக் கிடக்கிறது. ஒரு பிள்ளையை இன்னொருவர், எவ்வளவு பாசத்தோடு அன்பாக வளர்த்து வந்தாலும் வளர்த்தவர்களுக்கு அந்தப் பிள்ளையின் மேலுள்ள உரிமை சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நான் நினைத்தபடியெல்லாம் சட்டங்களையும், சட்ட ஏற்பாடுகளையும் திசை திருப்ப முடியாது. இந்த இடத்தில் என் கைகள் சட்டத்தால் கட்டப்பட்டுள்ளன. நானும் மனித நேயமும் அன்பும் பாசமும் உள்ள மனிதனதான். இங்கு உங்கள் சட்டத்தரணிகள் சொன்ன மனித நேயம் என்னிடமும் இருக்கிறது. சட்டத்தில் மனித நேயத்திற்கு நிறைய இடமுண்டு. ஆனால் சில சட்ட ஏற்பாடுகளை மனித நேயத்தால் கட்டுப்படுத்த முடியாது. சட்டத்தின்படி பிள்ளையைக் கேட்கும் உரிமை சட்ட ரீதியான தகப்பனுக்கு உண்டு.

இந்த உரிமையை பிள்ளையைத் தத்தெடுத்து வளர்க்கும் பெற்றோர்களினால் தடைசெய்ய முடியாது. பிள்ளையின் தாய் மரணித்துப் போனால் பிள்ளை தகப்பனிடம் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்று சட்டம் தெளிவாகக் கூறுகின்றது. என்றாலும் இந்தப் பிள்ளை யாரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதை, இந்தப் பிள்ளையிடம் கேட்டுத் தீர்ப்பளிப்பதே சரியென நீதிமன்றம் கருதுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பிள்ளையை நீதிமன்றத்தில் விட்டுவிட்டு பிள்ளையை வளர்த்த அலிமாவும் பிள்ளையின் தகப்பனும் நீதிமன்றை விட்டு, வெளியே போய் நிக்குமாறு கட்டளை இடுகிறேன்" என்று கூறிவிட்டு தனிமையில் நிற்கும் பையனைத் தன்னருகே அழைத்து தம்பி! நீ யாருக்கும் பயப்புடக் கூடாது. இங்கு உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. நான் இப்பொழுது கேட்பதற்கு நீ பயப்புடாம பதில் சொல்லணும். உனக்கு பெரியம்மாவோடு போக விருப்பமா?" அல்லது வாப்பாவோடு போக விருப்பமா?" என்று கேட்கிறார்.

பையன் எவ்வித சலனமுமின்றி நான் என்ர வாப்பாவோடப் போப்புறன்" என்று கூறிவிட்டு அமைதியாக நிற்கிறான்.

நீதவான் மீண்டும் இக்கேள்வியைப் பையனிடம் மூன்று முறை கேட்டும் பையன் சலனமின்றித் தன் தகப்பனோடு போவதற்கே விருப்பம் தெரிவிக்கின்றான்.

தாய்மைக்கும், உரிமைக்கும் இடையில் சட்டம் சிரிக்கிறது. மறுகணம் நீதிமன்றின் வெளியில் நிற்கும் அலிமாவையும், தகப்பனையும் உள்ளே வரும்படி முதலியார் அழைக்க இருவரும் வந்து நிற்கின்றனர். தாய்மை, மௌனமாகி அழுகிறது. நீதவான் பிள்ளையின் தகப்பனுக்காக வாதிட்ட சட்டத்தரணியின் வாதத்தினை பூரணமாக ஏற்று, பிள்ளையை பிள்ளையின் தகப்பனிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிடுகிறார்.

வளர்ப்புத்தாயின் உரிமை, சட்டத்தால் பறிக்கப்பட்டு, தனிமையாகி விட்டது. சுமார் ஆறு வருடகாலமாக அலிமாவின் கொடுக்கைக்குள் கிடந்து, அவளின் ஏழ்மையில் இன்பம் கண்டு, ஆழம் காண முடியாத பாசத்தில் இருந்த உறவு சட்டத்தால் பிரிக்கப்பட பையன் தகப்பனோடு நீதிமன்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறான். எத்தனையோ எண்ணற்ற இன்னல்களையெல்லாம் உறவுக்காகவும், பாசத்திற்காகவும் தியாகம் செய்து வாழ்ந்து வந்த அலிமாவின் வாழ்க்கையில், இன்றும் சுனாமி ஏற்பட்டு அவளின் ஆசைகள், எண்ணங்கள் அனைத்தையும் அள்ளிப் போய்விட்டது. பாவம் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல், தகப்பனோடு போய் கொண்டிருக்கும் அவள் சகோதரியின் மகனை இமைகள் வெட்டாமல் பார்த்து, அழுது கொண்டிருக்கிறாள்.

அவளென்ன சட்டத்தைப் படித்தா பிள்ளையை வளர்த்தாள்?

அலிமா, அவள் படியாத சட்டத்தை மதித்து நீதிமன்றத்தை விட்டு அமைதியாக வெளியேறிக் கொண்டிருக்கிறாள்.

சட்டம் தன் கடமையை ஒழுங்காகச் செய்து விட்ட திருப்தியில் தலை நிமிர்ந்து நிற்கிறது.

வெளியில் சட்டத்தின் ஆணையைக் கேட்டு கொண்டிருந்த அலிமாவின் தாய் சட்டத்திர கொதறத்த என்னெண்டு செல்லுவன் என்று கூறி அனல் போன்ற பெருமூச்சை விடுகிறாள்.

புள்ளம்மா அந்த வளப்புனி போனாப் போகட்டும், நீ லோசியாம வாகா. நமக்கு அந்த அல்லாரிக்கான். அவன் நம்மள உடமாட்டான்" என்று அலிமாவோடு வந்த அவளின் பக்கத்து வீட்டு பாத்துமுத்து கூறிக் கொண்டு, வரும் போது சூரியன் உச்சியைத் தாண்டிக் கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் மாப்புள

நாளைக்கு என்னுடைய மாட்டுப்பளை வயல் விதைப்பதற்கு தண்ணீருக்குள் போட்டு ஈரப்படுத்தி வைத்திருந்த நெல்லு மூட்டைகளை, வயற்காரன் மம்மதும் அவனுடைய மகனும் சேர்ந்து அவிழ்த்து தரையில் கொட்டி பரவிக் கொண்டிருந்தனர். தூரத்தில் விடியலை வரவேற்று குயிலொன்று கூவிக் கொண்டிருக்கிறது.

விடியச் சாமத்தின் ஆரவாரத்தில் மாட்டுக் குடிலுக்குள், கொடுக்கிக் கிடந்த என் நாய் பொட்டு சோம்பல் முறித்து அனுகிக் கொண்டு வருகிறது.

என் மனைவி அடுப்படியில் தேநீர் போட்டுக் கொண்டிருக்கிறாள். 'போடியார் வெசயம் தெரியுமா? ஓங்கிட தங்கச்சிர மகளுக்கு கேட்ட மாப்புள போன கெழம லண்டனில இருந்து வந்து ஆருக்கும் தெரியாம அவனோட லண்டனுல இரிந்த ஒரு சிங்கள புள்ளய, கொழும்பில கலியாணம் முடிச்சிற்றானாம். இஞ்ச அவன்ட உம்மா வாப்பாவெல்லாம் கொளறி மாயிறாக. நேத்து லாவு கொழும்பில இரிந்து வந்த, நம்முட கொழுக்கட்டப் பொட்டிர மகன் காதர் மாஸ்ரர் எங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்ட வந்தவரு சொன்னாரு"என்று முளையை காலாத்திக் கொண்டிருந்த வயற்காரன் சொல்லி விட்டுப், பிரித்துப் போட்ட நெல்லுச் சாக்குகளை உதறி எடுக்கிறான். வாழ்க்கையில் தன் தங்கச்சிக்கும் மகளுக்கும் ஏற்பட்ட பரிதாப நிலையை ஜீரணிக்க முடியாமல் வேதனையில் போடியார் பெருமூச்சை விடுகிறார் லண்டன் மாப்பிளை ஆசை எவ்வளவு கேவலத்தை உண்டாக்கி விட்டது.

நீங்க கேட்ட மாதிரி, நம்முட தம்பி நசிறப் பண்ணிருந்தா ஓங்கிட தங்கச்சிக்கும் மகளுக்கும் இந்தக் கேவலம் வந்திரிக்கிமா...? எல்லாத்திக்கும் காரணம். உங்கட மருமக புள்ளட வாய்க் கொழுப்புதான். நம்முட தம்பி நசிற எவளவு கேவலமாப் பேசினா. என்ர முகத்தில நம்முட தம்பிய கறுப்பு எண்டு சென்னா...' இதனகேட்டு எனக்கு எவளவு கோவம் வந்திக்கி தெரியுமா...? நம்முட தம்பிக்கி என்ன கொற இரிக்கி? படிப்புக்கு படிப்பிரிக்கி, பணத்திற்கு பணமிருக்கு, அவர்ர கொணத்திற்கு கிட்ட, இந்த லண்டன் மாப்பிளயெலாம் நெகரா நிக்கேலுமா...? இந்த லண்டனுக்கு போறாக்களெல்லாம் அங்க, வெள்ளக்காரண்ட கக்கூசிதானாம் கழுவுற... இஞ்ச, படிக்கப் போறெண்டுதான் பேரு... இவக செய்யிற வேலயெள அங்க போனாத்தான் தெரியிம். காசிக்காக வெள்ளக்காரண்ட கக்கூச கழுவலாமா? பாவம்! இந்த கழிசறய நம்பி ரெண்டேக்கர் காணியயும் வித்து பத்து லச்சம் காசயும் குடுத்துட்டா..." என்று வயற்காரன் சொல்லிமுடிப்பதற்கிடையில் போடியார் வேதனையில் கண்களைக் கசக்கி மீண்டும் பெருமூச்சி விடுகின்றார்.

"மம்மது என்ர தங்கச்சி ஒரு நாள் கூட கண் கலங்கினத்த நான் பாக்கெல்ல... எங்கு வாப்பா உம்மா அவவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படித்தான் வளத்த உள்ளதுமொரு பொம்புளப் புள்ளெண்டு ஒரு கொறயிம் இல்லாமத்தான் வளத்த. என்ர தங்கச்சிக்கு இப்படியொரு நெல வந்தத நெனச்சா, என்ற நெஞ்செல்லாம் வெடிச்சிரும் போல கெடக்கு... எனக்கு வாற கோவத்திக்கு அவள்ள மகனப்புடிச்சி கொல செய்யணும் போல கெடக்கு... வாப்பா உம்மாட செல்ல ஒளுங்காக் கேட்டிருந்தா இப்படி ஒரு தலகுனிவு இந்தக் குடும்பத்திற்கு வந்திரிக்கிமா? லண்டன் மாப்புள கேட்டதால இப்ப வந்த சீரழிவப்பாத்தியா...? கையில இருந்த காசி பணமும் போய் மானம் மரியாதயிம் நல்லாப் பெயித்து.. அவனுக்கென்ன காவாலி வழிசல்... அவண்ட குடும்பமும் சொணபறந்த குடும்பம் நாம அப்படியா? கவரிமான் சாதி... இந்த ஊரு ஒலகம் லண்டன் மாப்புளயள நம்பி. நல்லா ஏமாந்து கெட்டுப்போச்சி. கக்கூசி கழுவுற நாய்கள நம்பி, இந்த ஊரான் அழகான பொம்புளப் புள்ளயிளயும் குடுத்து பணம் காசயிம் வீணாச் செலவழிக்கானுகள். இந்த ஊரில பணத்திக்கு அவால் புடிச்ச கொஞ்சப் பிச்சக்காற நாய்கள் புள்ளயள வெள்ளக்காரண்ட கக்கூசி கழுவ அனுப்புறானுகளே...! பணம் வந்தாப்போல எல்லாம் வந்திருமா? நாயிரகூத்தில தேன் வெச்சா நாய்தான் அத நக்கனும். எங்கிட குடும்பம் பத்தினாலும் முறுக்கொடயாத குடும்பம்...."என்று போடியார் தன்னுடைய சகொதரிக்கு ஏற்பட்ட நிலையை எண்ணி அழாக்குறையாகப் பேசிக் கொண்டிருக்கிறார். போடியாரின் மனைவி வந்து தேதண்ணியை அவரின் கையில் கொடுத்துவிட்டு 'மம்மது இதென்ன ஒலகம்டா தம்பி...! கொஞ்ச நாளைக்கு முதல்ல, ஒங்கிட போடியார் அவர்ர தங்கச்சிக்கும் மச்சானுக்கும் ஏசின ஏச்சிம், பேசின பேச்சிம்.... யா அல்லாஹ்! நெனச்சாலே மனம் கூசிது... இதுக்குள்ள இன்னா கதக்கிற கதயப்பாத்தியா...? இப்ப பாத்தா, தங்கச்சிர மகளுக்கு ராவைக்கே மகனக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் காவின் எழுதிப் போட்டுறுவாறு போல கெடக்கு... இவகள நம்பி நாம ஒரு கதயிம் கதச்சிரப்போடா... பாத்தியா தானாடாடியும் தன்ர சத ஆர்றத...." என்று கூறிக்கொண்டு மீண்டும் அடுப்படிக்கு போகிறாள். பூனை அவளைத் தொடர்ந்து கத்திக் கொண்டு பின்னால் போகிறது.

போடியாரின் நாய் பொட்டு, வாழைப்பாத்திக்குள், கால்களை முன்னுக்கு நீட்டி, படுத்துக் கிடக்கிறது. சுமார் பத்து வருடங்களுக்கு முன் பால்குடி மறவாத குட்டியாக போடியாரின் வீட்டில வந்து சேர்ந்த பொட்டு, இன்று வரை ஒரு பிள்ளையைப் போன்று போடியாரின் குடும்பத்தோடு ஒட்டிக்கிடக்கிறது.

பொம்புளப் புள்ளயளுக்கு அளவுக்கு மிஞ்சின எளக்காரம் கொடுத்ததாலே வந்த வினதான் இப்ப என்ர தங்கச்சிக்கும் புரிசனுக்கும் வந்திரிக்கிற அவமானம். பேய் பொடிச்சிர செல்லுக்கு ஆடின ஆடத்தால, இப்ப கத எங்க பெயித்து பாத்தியா. படிக்கிற புள்ளயளுக்கு, காதுக்க வெக்குற டெலிபோன வாங்கிக் குடுத்து படிப்பெல்லாம் லண்டனாப் பெயித்து முதல்ல எங்கு மச்சானுக்கு அடிக்கனும் செருப்பால... இந்த நெல வாரதுக்கு முதற் காரணம் அந்தாள்தான். மகள் சென்னபடி எல்லாம் ஆடினதாலதான், இந்த சீரழிவு குடுமபத்திற்கு வந்த... இதுக்குத்தான் செல்ற பொம்புளப் புள்ளயளுக்கு ஒரமா எடங் குடுக்கக் கூடாதெண்டு, ஆரா இருந்தாலும் பொம்புளப் புள்ளயள கணக்கோட வெச்சிக்கனும்..." என்று போடியார் தன் மனைவிக்கு சொல்லி விட்டு இஞ்ச... இந்த பொட்டுக்கு என்னயும் கெடந்தா கொண்டு வந்து போடு... ஆட்டின வால உடாம ஆட்டிக்கிருக்கு வானமும் ஒரு மாதிரி அளகொழப்பாக இருக்கி அன்னா உள்ளற வெட்டாப்பு ரெண்டு மூண்டு நாளைக்கு இப்படியே இருந்ட்டா வயல ஒரு மாதிரி வெதச்சிக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரயேறிக்கலாம்... எல்லாதிக்கும் அந்த அல்லாதான் ஒதவி செய்யனும்..." என்று சொல்லிக் கொண்டு கிணற்றடிக்கு போகிறார்.

"கீர, பொன்னாங்கனி வள்ளல், கூனி இரிக்கோ...! புள்ளேய் வேனுமாகா? விடியச்சாமத்தில ஆஞ்ச வள்ளல், கூனி, போட்டுக்கடஞ்சா ரெண்டகப்பச் சோறு கூடத்திங்கலாம்... வேனுமென்டாப் பொட்டிய எடுத்துக்கா... என்ன வேனுமா...?" பொந்தண்ட சிவத்தா போடியாரின் கதவடியில் நின்று, கூப்பிடுகிறாள். இவளின் சப்தம் கேட்டு 'போடியாரின் பெண்சாதி, பெட்டியோடு கதவடிக்கு போகும் போது வாசலில் படுத்துக்கிடந்த பொட்டு பின்தொடர்ந்து போகிறது. போடியாருக்கு பொன்னாங்கனி எலெக்கறி என்டா உசிரு. நல்ல எலெக்கெறியா ரெண்டு கட்டுத்தா... கந்து கவரு போடாம நல்லதாப் பாத்துப் போடு... அந்த கூனிலையும் காக்கொத்து தா... இன்னா... காசி...." காசைக்கொடுத்து விட்டு, எலக்கறியையும் கூனியையும் வாங்கிக் கொண்டு போடியாரின் பெண்சாதி வரும் போது, பொட்டும் பின் தொடர்ந்து வருகிறது. போடியாரின் பெண்சாதி வரும் வழியில் பூத்துக் குலுங்கி நிற்கும் கருத்தக் கொழும்பான் மாமர்தில இரண்டு காகங்கள் மூச்சுப் பிடித்துக் கத்திக் கொண்டிருக்கின்றன. கத்துகின்ற காகங்களுக்கு கல்லொன்றை எடுத்து வீசிவிட்டு சீ... நாசமத்து போன காகங்கள், என்னதிக்கு இப்பிடிக் கத்திதோ...? விடிஞ்சாப் போதும்... ஆட்டுத்தோலுக்குப் பறயன் பதறாப் போல வந்து கத்தத் தொடங்கிருங்கள்.... சூய்...! விடியல்ல என்ன வரப்போகிதோ? நேத்து லாவு அவன் கத்தக் காம்புட செலயிமானையும் பொலிசி புடிச்சிக்கு பெயித்தானுகள்...... இவன் புள்ள போன கெழம பள்ளி கொடத்திக்கு போனவன்ட செய்தி ஒன்டயும் காணெல்ல.... நம்மட ஊருக்கு ஒரு மாற்றத்த எடுக்கவும் ஏலாமக் கெடக்கு...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காகங்களை விரட்டி விட்டு வரும் போது போடியார் கிணற்றடியிலிருந்து வருகிறார்.

அப்பொழுது போடியாரின் றோட்டுக் கேற்றடிய ஆட்டோ ஒன்று வந்து நிற்கிறது. ஆட்டோவையும் அதில் வந்த ஆட்களையும் கண்ட நாய் பொட்டு ஓடிப் போய் பாய்ந்து பாய்ந்து குரைத்துக் கொண்டு நிற்கிறது. நாய் தொடர்ந்து குரைப்பதைக் கேட்டு வீட்டிற்குள் இருந்த போடியார் தம்பி மம்மதோ அங்க ஆரொ வாராப்போல கெடக்கு நீ போய் பொட்ட வெரசிப் போட்டு வாறாக்கள கூட்டிக்கு வா. கெதியாப் போ.... வந்தாக்கள் கேற்றடிய நிற்கிறாப் போல கெடக்கு" என்று கூறிவிட்டு இருக்கிறார். கேற்றடிக்கு போன மம்மது பொட்டை விரசி விட்டு, வந்தவர்களை அழைத்துக் கொண்டு வருகிறான். வந்தவர்களைக் கண்ட போடியாரும் பெண்சாதியும் அவர்களின் கண்களையே நம்பாது திகைத்துப் போய் நிற்கின்றனர். கீரியும் பாம்புமாய் இருந்த போடியாரும் அவர் சகோதரியும், மச்சானும் கூனிக்குறுகி, வெட்கி தலை குனிந்து நிற்கின்றனர். மறுகணம் போடியாரைக் கண்ட அவர் சகோதரி ஓவென்று அழுது அவரைக் கட்டிப் பிடித்து அழுவதைப் பார்த்த போடியாரின் பெண்சாதி திகைத்துப் போய் மதினியை கிட்ட அணைத்து தேற்றி ஆறுதல் கூறுவதைக் கண்டு வயற்காரன் மம்மது தன்னையே மறந்து நிற்கின்றான்.

சுமார் ஒரு வருடங்களுக்கு மேல் பிரிந்திருந்த குடும்பம் இன்று ஒன்றாகி நிற்கிறது.

எல்லாம் லண்டன் மாப்பிள்ளையால் வந்த வினை. வெள்ளை மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்ட மகளின் அறியாமையை எண்ணி போடியாரின் சகோரியும் மச்சானும் உள்ளத்தால் புழுங்கி வடிவது. அனுகிக் கிடக்கும் போடியாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் பொட்டுக்கு எங்கே புரியப் போகிறது. சகோதரி தன் பிழைக்காகவும் அறியாமைக்காகவும் விம்மி விம்மி அழுவதைப் பார்த்து போடியார் அவருடைய கண்களை கசக்கிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது போடியாரின் மனைவி மதினி எவளவு நேரம் வாசல்ல நிற்கிற..? உள்ளுக்கு வாங்க.. உள்ளுக்கு வந்து இரிங்க... வாங்க... எல்லாத்தையும் இரிந்து பேசலாம்.. ஓங்களக் கண்டதிலேயே எல்லாம் மறந்து பெய்த்து...வாங்க தேயில குடிச்சுப் போட்டு மற்றத்தையெல்லாம் ஆறுதலா பேசலாம்" என்று கூறி இருவரையும் அழைத்து வந்து வீட்டுக்குள் இருப்பாட்டி விட்டு தேனீர் போட்டு வர அடுப்படிக்கு போகிறாள்.

போடியாரின் முகத்தில் என்றும் இல்லாத சந்தோஷம் பொங்கி வழிகிறது. சகோதரியும், மச்சானும் அவர் வீட்டுக்கு வந்ததை அவரினால் கற்பனை கூடப் பண்ண முடியாமல் தடுமாறுகிறார். அவரின் கூடப்பிறந்த ஒரே ஒரு சகோதரி. லண்டன் மாப்பிளை விடயத்தில் இவர்களுக்கிடையில் பிரிவு ஏற்பட்டிருந்தாலும் இவர் தன் சகோதரியை நினைந்து பேசாத நாட்களே இல்லை.

பாவம்! இந்த லண்டன் மாப்பிள்ளை விடயத்தினால் அவருடைய சகோதரிக்கு ஏற்பட்ட காயத்தை அவரால் தாங்க முடியாமல் சதா வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததை அந்த இறைவன்தான் அறிவான். போடியார் அவர் வளவுக்குள் இன்று தங்கச்சியைக் கண்ட மகிழ்ச்சியில் பூமியில் நிற்காமல் துடித்துக் கொண்டிருக்கிறார். இவருடைய குதுகலத்தில் அவருடைய நாய் பொட்டும் சேர்ந்து குரைத்து குதுகலிக்கிறது. மறுகணம் தம்பி மம்மதோ போய் நம்முட கோழிக்கூட்டுக்குள்ள கெடக்கிற அந்த வெள்ளைச் சாவலையும், அதோட கெடக்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தறுத்தான் போட்டயிம் புடிச்சிக்கு போய் றகுமானியாத் தைக்கா லெவ்வட்ட குடுத்து அறுத்திக்கு வா..கெதியா வா.. அவரு ஊட்ட போயிருந்தா, கையோடு மோதினிக்கிட்ட குடுத்து அறுத்துக்கந்திறு... போகக்குள்ள நம்முட பிசாக் கத்தியையும் தீட்டி எடுத்துக்கு போ... பகலைக்கு புள்ளைக்கும், மச்சானுக்கும் சோறு குடுக்கணும் சட்டுப்பண்ணி வாடாம்பி மார்க்கட்டும் போகணும்" என்று போடியார் சொல்லிவிட்டு மனைவியிடம் சகோதரிக்கும் மச்சானுக்கும் சாப்பாடு சமைக்கும்படி கூறுகின்றார்.

போடியாரின் அவசரத்தையும் மகிழ்ச்சியையும் கண்ட மனைவி இந்த ஒரு வரிச்சத்திக்கு தங்கச்சியை மறந்து எப்படித்தான் இரிந்திங்களோ..?" என்று கூறிக்கொண்டு சிரிக்கும் போது பக்கத்தில் நின்ற வயற்காரன் மம்மது,

"புள்ளம்மா அவருக்கென்ன ரெண்டு, மூன்று தங்கச்சிமாரா இருக்கு..? இரிக்கிறதே உள்ளதுமொரு புள்ள அதுவும், அவகு உம்மா அல்லாஹ்றாகிட்ட லாவு, பகலா துவாக் கேட்டு பெத்த புள்ள அவருக்கு பாசம் இரிக்காதா..? கொஞ்ச நாளா அவரு தங்கச்சோட பேசாமக் கதையாமப்பட்ட பாடு, அந்த அல்லாவுக்குத்தான் தெரியிம்..... இதெல்லாம் நம்முடைய தம்பி நசிர்ற கலியாணம் அலஞ்சதால வரல்ல எல்லாம் ஒரு கொடலுக்க கெடந்து வந்த பாசம்தான்...." என்று கூறிக் கொண்டு குடிச்சி முடிச்ச தேயிலை கிளாசிகளையெல்லாம் தூக்கிக் கொண்டுபோவதைப் பார்த்து பக்கத்தில் நின்ற பூனை கத்துகிறது. இதுவரை எதுவுமே பேசாமல் முக்கை சீறிச் சீறி சினுங்கிக் கொண்டிருந்த போடியாரின் தங்கச்சி "காக்கா?! ஒரு மடச்சி நான் செஞ்ச பொழ எல்லாத்தையும் மறந்து அல்லஹ்வுக்காக என்ன மன்னிச்சிருங்க.... என்ற புள்ளட மானத்தையிம், என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப மானத்தையிம் நீ தான் காப்பாத்தணும் ஓனக்குத்தான் எல்லாம் தெரியிமே....!பொம்புளப் புத்தி பீ திங்கப் பெயித்து.... இந்த மாப்புளோளிர மகன நம்பி. எல்லாம் சீரழிந்து பெயித்து.... ஓன்ட கால்ல உழுந்து கெஞ்சிரன்" என்று கொளறி போடியாரின் கால்களில் உழுந்து கெஞ்சுவதைப் பொறுக்க முடியாமல் போடியாரின் மனைவி சட்டென்று பாஞ்சி மதினியை தூக்கி அணைத்துக் கொள்வதைப் பார்த்து வயற்காரன் மம்மது கொடுப்புக்கால் சிரிக்கிறான்..... இனி என்ன நாளைக்கு மாட்டுப் பளை வயல் விதைத்ததும் அடுத்த கிழமை போடியார் வீட்டில் கலியாணம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனக் குட்டி செத்து பெயித்துகா

இரவு பூனைக் குட்டியை கடுவன் பூனை கடித்து குற்றுயிராகி கிடக்கின்றது. பூனைக் குட்டியின் குரல் வளயிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருக்கின்றது. வேதனையில் முனகிக் கொண்டிருக்கும் பூனைக் குட்டியின் கழுத்தில் நல்ல காயம். கடுவன் பூனை, சின்னக் குட்டியை கடித்து குதறியதால், அதன் காயத்தில் இறைச்சி வெளியில் தெரிகின்றது. பாவம் தாய்ப் பூனை வேதனையோடு நக்கிக் கொண்டிருக்கின்றது. வீட்டு முற்றத்தில் நிற்கும் மாமரக் கிளையொன்றில், காகங்கள் சில காயப்பட்டு கிடக்கும் பூனைக் குட்டியை துக்கி போக சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. சில காகங்கள் கத்திக் கொண்டு அங்கும் இங்கும் பறந்து திரிகின்றன.

அங்கே என் மனைவி, பூனைக் குட்டியைப் பார்த்து சோகமே உருவாகி நிற்கின்றாள். அவளுக்குப் பக்கத்தில் என் நாய் பொட்டு, என் மனைவியின் சோகத்தில் பங்கு போட்டுக் கொண்டு அவள் பக்கத்தில் குந்திக் கொண்டிருக்கின்றுது. நாங்கள், எங்கள் வீட்டில் அன்பாக வளர்த்த பூனை, இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைகளுக்கு முன் மூன்று குட்டிகளை ஈன்றிருந்தது. அவைகளில் ஒரு குட்டியைத்தான் இரவு கடுவன் கடித்து விட் டது.

எங்கள் வீட்டில் வளர்த்த பூனையின் பூர்வீகம் எங்களுக்கு தெரியாது. அது ஒரு அனாதை. இரண்டு வருடங்களுக்கு முன் எங்கிருந்தோ அகதியாக அடி பட்டு வந்த பூனை இன்று எங்கள் வீட்டு சொந்தப் பூனையாகி விட்டது. அகதி என்ற பாவப்பட்ட சொல் நீங்கி இன்று எங்கள் வீட்டில் உள்ள எல்லோருக்கும் பாசத்திற்குரிய ஜீவனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. முக்கியமாக என் மனைவிக்கு இப்பூனையின் மேல் தனிப்பட்ட பாசம். அவள் சாப்பிடும் நேரமெல்லாம் இப் பூனை அவளின் பக்கத்தில் உரிமையோடு வந்து குந்திக் கொண்டிருக்கும். அவள் சாப்பிட்ட மிச்சங்களைப் போட்டால் அவைகளை மகிழ்ச்சியோடு சாப்பிட்டு திருப்தி அடையும்.

காகங்கள் கூட்டமாக கூடி சதாகத்திக்கொண்டிருக்கின்றன. பூனைக் குட்டியின் மரணத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கும் காகங்களில் வெறுப்புற்று, நாய் பொட்டு சப்தமிட்டு குரைக்கிறது. நாய் பொட்டுக்கும் எங்கள் வீட்டுப் பூனையின் மேல் பாசம்தான். பூனைக்கு நாங்கள் கொடுக்கும் எந்த உணவையும் அது பங்கு கேட்டு, சண்டை இடுவதில்லை.

வெள்ளாப்பை முற்றாக விரசித் துரத்தி விட்ட களிப்பில் சூரியன் சிரிக்கிறான். இரவெல்லாம் எங்களை தூங்க விடாமல், நாய் பொட்டு குரைத்துக் கொண்டே இருந்தது. நாயோடு சேர்ந்து சில பூனைகளும் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டு கத்திக் கொண்டு இருந்தன. எங்கள் வீட்டு வேலைக்காரன் ஹாய் ஸளயம்பி, பல முறை எழும்பி இவைகளை விரட்டியும், அவை கேட்கவில்லை. சதா சப்தமிட்டுக் கொண்டே இருந்தன. எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனையின் அடுத்த குட்டிகள் இரண்டும் தன் சகோதரனுக்கு ஏற்பட்ட துயரத்தை அறியாமல் அங்கும் இங்கும் ஓடி ஆடிக் கொண்டிருக்கின்றன.

அப்பொழுது காலைச் சாப்பாட்டிற்கு தெறிப்பாண்ட மயியதின்ட தேயிலைக் கடைக்கு அப்பம் வாங்கப் போன ஹாய் ளயம்பி, அப்பப் பெட்டியோட வருகிறான். அவனைக் கண்ட நாய் பொட்டு வாலைக் குளைத்துக் கொண்டு ஓடிப்போய், அவன் கால்களைத் தொட்டு நக்கியபடி அவனோடு வருகிறது. நாய் பொட்டைக் கண்ட ளயம்பி அதை செல்லமாக அதட்டி 'ங்.... ஒண்ட மாசலய எடுத்துக்கு வந்துட்டியா? ஒன்னால லாவெல்லாம் நாங்க ஒழுப்புளமாவது கண்மூடிப் படுக்கல்ல. ஒனக்கு என்ன நடந்த? என்ற வாப்பா, நீ என்னத்தப் பாத்து அப்படிக் கொலச்ச....? நேத்து மவுத்தான பீயடிச்சான் கொக்கிச்சான் போடிர கவுசி லாவு வந்தெண்டு தேயிலக் கடயில கதச்சானுகள்..... அவன்ட கவுசக் கண்டா நீ கத்தின.....? நாசமத்துப் போன நாத்த வாயன், நவுசிக்கு கக்கக் கனியக் குடுக்காம மவுத்தானா அவன்ட கவுசி மடடுமா வரும் அவன்ட கவுசோட பஞ்சமியும் சேந்துதான் வரும்.

ஒவ்வொரு நாளும் நாத்த செல்வன் மீனயிம், தோலிக் கருவாட்டையும் வாங்கித் திண்டு போட்டு மவுத்தான வழிசலுக்கு இனி என்னென்ன வரப்போகுதோ? சீ களவெட்டி பிச்ச குடுக்காத காவலிக்கு ஒரு போடிப் பட்டம். ஈயாப்பிசினி, எப்பயாவது ஏழை எளியதுகளுக்குசக்காத்து சதக்கா குடுத்திருப்பானா? காலுக்கு ஒரு செருப்புச் சோடி வாங்கிப்போட்டுக்க வழி இல்லாத வங்குரோத்துப் புடிச்ச நாய் லாவு பகலெண்டு பாராம ஒழச்சி ஒழச்சி, மகளுக்கு டாக்குத்தர் மாப்புள்ள எடுக்க, இருந்த காணி பூமி எல்லாத்தையும் தெத்துக் கொரட்ட அலியாண்ட மகனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுத்துப்போட்டுப் பொயிட்டான். இப்ப அலியாண்ட மகன், அந்தமாதிரி தரித்திரியம் புடிச்சவன் வாங்கிக் குடுத்த காருல கறுப்புக் கண்ணாடியும் போட்டுக்கு ஓடிக்கித் திரியிறான்.... பாவம் பெத்த ஆம்புளப் புள்ளயளுக்கு ஒரு நொக்கத்தும் குடுக்கல்ல. செத்த நாய்க்கி, லாவயில மட்டுமில்ல பகலையிம் கவுசி வரும்..... நேத்து, மய்யத்த அடக்கி போட்டு வந்து தெத்துக் கொறட்டர மகன் டாக்குத்தரர் ஊட்ட நம்முடன் குண்டுக் கோப்ப மோதினும் பெரிய பள்ளி லெவ்வயிம் லாவு இருட்டற கத்தத்த ஓதிப்போட்டு, ஊடு வளவெல்லாம் தண்ணி ஓதி எறிஞ்சி காவல் பண்ணினயாம்.... நாசமத்து போவான்! நாய் பாடாப்பட்டு ஒழுச்ச காசில ஒரு தரம் மக்கத்துக்காவது போய் வந்தானா? நாயிர ஒசிலுக்குள்ள மகளுக்கு டாக்குத்தர் மாப்புள எடுத்துப் போட்டாரு....கொற வீடிய நூத்து விரலச் சுடும் வரைக்கும் குடிச்சிக்கு மத்தவண்ட பொது வரம்புட அருகச் சுரண்டி சுரண்டி காணியச் சேத்து களப்புக்க செல்லவன் மீன் வடிச்சிக்கி திரிஞ்ச தெத்துக் கொறட்டட மகனுக்கு குடுத்துப் போட்டு போன நக்குண்ணிக்கு கவுசி மட்டுமென்ன அவண்ட கவுறும் புழுத்து வழியிம்.

‘ஓலகத்த பாருங்க..... நாத்தவாயன் ஒழுச்சி இப்ப கைப்பூரவாயன் திங்கக் குடுத்துப் போட்டு பெயித்தான். இப்ப அவன் அக்கிழி புக்கிழி ஆணமும் கறியுமாக் கெடந்து திங்கான். இத என்னெண்டு செல்லுவன்....’ என்று அவன் வாய்க்கு வந்தையெல்லாம் பேசிக்கொண்டு வருகிறான்.

நாய் பொட்டு அவன் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு அவன் பின்னால் வருகிறது. மனைவி அப்பப் பெட்டியுடன் பொரிஞ்சி வரும் எளயம்பியைப் பார்த்து, ஒன்ட ஓட்ட வாய்க்கு ஒன்டு கெடச்சாப் போதும்... சும்மா அத அக்குவேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிவேறாப் பிரிச்சி எரிஞ்சிரிவியே… எப்ப பாத்தாலும் பேய்க் கதயிம், ஜின் கதயிம்தான் மிச்சம். இவன் கொக்கிச்சான் போடிர கவுசி, லாவைக்கு ஒனக்கிட்ட வந்து ஒன்ட கழுத்தப் புடிச்சி நவிச்சி நல்லா ரெத்தத்தக் குடிக்கும்… நீ போய் அப்பப் பெட்டியக் கொண்டு வெச்சிப் போட்டு வந்து அந்தக் கோழிக்கூட்டத் தொறந்து போட்டு வா…' என்று கூறிவிட்டு, பூனைக் குட்டி கிடக்கும் இடத்திற்கு வரும் மனைவியுடன் என் சின்னப் பேரன் ஆசிமும் அவளுடைய முந்தானையைப் பிடித்துக் கொண்டு வருகிறான்.

உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் பூனைக் குட்டியைப் பார்த்த என் மனைவி 'ச்சா!… கண்பட்டாப் போல பெயித்து. மூனு குட்டிகளும் தாயோட ஒன்டாக் கெடந்து விளையார்ர எவ்வளவு செப்பம். நாசமத்துப்போன கடுவன் இந்தச் சதிமானத்தச் செஞ்சி போட்டே… லாவெல்லாம் இந்தப் பூனையளும் ஒரே கத்திக்கிதான் கெடந்திக்கு… அதுகளும் இந்தக் கொக்கிச்சான் போடிர கவுசிப் பேயக் கண்டுதான் கத்திச்சோ..? மாட்டுக் கொடலயிம், மங்கு ரொட்டியயிம் திண்டுபோட்டு மவுத்தானா, கவுறுக்க நாயிர நவிசி அவனப் சும்மா படுக்க உடுமா… நாய் நவிசிக்கு நல்லாக் குடுத்திருந்தா இந்த நெல வந்திரிக்கிமா? உலகத்தில உண்ணாமத் தின்னாம ஏழ எளியதுகளுக்கு கையால் கொட குடுக்காம மவுத்தாகிற, கஞ்சனுக்கெல்லாம் கடசில நவிசி, கவிசாத்தான் வரும்… எளயம்பே! கோழிக் கூட்டுக்க முட்டகிட்ட கெடந்தா எடுத்துக்கு வா…' என்று கூறிவிட்டு நிற்கிறாள். கூட்டுக்குள் இரவெல்லாம் அடைபட்டுக் கிடந்த சேவல், போட்டுக் கோழியைத் துரத்திக் கொண்டிருக்கிறது. காகங்கள் மூச்சுப் பிடித்துக் கத்திக் கொண்டிருக்கின்றன. நாய், பொட்டு காகங்களைத் துரத்தித் துரத்திக் குரைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக் கூட்டைத் திறந்து விட்டு வரும் ளயம்பியோ போய், நாய்பொட்டு ஒட்டிக் கொள்கிறது. ளயம்பிக்கு நாய் பொட்டில் கடும் பாசம். அவன் சாப்பிடா விட்டாலும் நாய்க்கு எதையாவது சாப்பிடக் கொடுத்து விடுவான். நாய் சாப்பிடும் வரை கத்திருந்து, சாப்பிட்ட பின் அது சாப்பிட்ட பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி விடுவான். இதைப் போன்றுதான் பூனைக்கும் கொடுப்பான். இதில் அவனுக்கு ஒருவித திருப்தி.

பாவம்! தாய்ப் பூனை, கடிபட்டுக் கிடக்கும் தன் குட்டியின் காயத்தை நக்கிக் கொண்டிக்கிறது. குட்டியின் காயத்தால் அதன் சின்ன நரம்பொன்று வெளியில் தெரிகிறது. பேட்டுக் கோழியைத் துரத்தித் தன் ஆசையைத் தீர்த்துக் கொண்ட சேவல், மீண்டும் இன்னொரு பேட்டை துரத்திப் பிடித்து மிதித்துக் கொண்டிருக்கிறது. பூனைக்குட்டியை தூக்கிப் போக, காகங்கள் குறி பார்த்துக் கொண்டிருக்கின்றன. வேதனையில் என் மனைவி பேரனைக் கூட்டிக் கொண்டு வீட்டிற்குள் போகிறாள். மனைவியோடு போகும் பேரன், பூனைகளுக்கு காலால் மண்ணை ஒத்திக் கொண்டு போகிறான். இதைப் பார்த்து நாய் பொட்டு குரைக்கிறது. - நாய் குரைப்பதைப் பார்த்து ளயம்பி,

'ங்...ஒனக்கிரிக்கிற அறிவும், பாசமும் இந்த ஒலகத்துல ஆருக்கு இரிக்கி?...இந்தப் பூனக்குட்டி பர்ற வேதன, ஒனக்குத் தெரியும்..அதைக் கடிச்ச கடுவன் பூனக்கி தெரியுமா? ஒலகத்துல இரக்கமில்லாத எந்தச் சீவனும் இரிக்கப்புடா...இந்தக் கடுவன் பூனக்கு என்னத்திக்கு இவ்வளவு எரிச்சல்?...எங்கிட புள்ள லத்திபாதானேன் ஒவ்வொரு நாளும் பூனைக்குச் சோறும், எலும்பும், முள்லெல்லாம் கொடுக்குர...! எங்கிட ஊர் மையனாண்டவர்ர பள்ளியிலயிம் இப்ப பெரிய கொளப்பமாம். மௌலவிமாருக்குள்ள அடிபிடி சண்டையாம். எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலவிமாரிக்கும் பள்ளித்தலைவர் பதவி வேனுமாம்... இவனுகளுக்கு அல்லாட பள்ளியத்திங்க எவளவு ஆச வாப்பா... ஓதிப்படிச்ச மௌலவிமாருக்கு, இப்படி ஆச வரப்படா. எல்லோரும் எங்கட ஊரக்கட்டி ஆளத்தான் பாக்கானுகள். வெள்ளிக் கிழமை பள்ளில கொத்துவா ஓத மிம்பரில போய் நிண்டா போதும், ஓதுரதெல்லாம் ஊரு பலாயும், பழைய திட்டுவயும்தான். புதிசா ஒன்டயும் ஒழுங்காச் செல்ரல்ல...ஓதுரதெல்லாம் ஒழக்கிற கதைதான்' என்று சொல்லிக் கொண்டு கத்திக் கொண்டிருக்கும் காகங்களை கல்லால் எறிந்து விரசுகிறான்.

வானம் மூசாப்பாக கிடந்து ஒரு மாதிரி கேரிக் கொண்டிருக்கிறது. காகங்கள் நாலா பக்கமும் பறந்து திரிகின்றன. அப்பொழுது, உயிருக்காக போராடிக் கொண்டிருந்த பூனைக் குட்டி செத்து விட்டது. பூனைக் குட்டியின் சாவைத் தாங்க முடியாமல் நாய் பொட்டு ஊளையிடுகிறது.

பூனைக்குட்டியின் மரணத்தில் சிந்தை குலைந்து எளயம்பி 'புள்ளேய் பூனைக் குட்டி செத்துப் பெயித்துகா' என்று சாக்குரலிடுகிறான்.

மறுகணம், பூனைக் குட்டியை வந்து பார்த்து விட்டு என் மனைவி 'இனிநாம என்ன செய்யலாம்...? அதிர தலயெழுத்து அவளவுதான். இத நீ எடுத்திக்கு போய், அந்த மூலயில மடுவ வெட்டி பொதச்சிப் போட்டு வா... எல்லார்ர வாழ்க்கயிம் இப்படித்தான். இனி இந்தக் கடுவன் பூனைய, இஞ்ச வர உடப்புடா. வந்தா அத அடிச்சி வெரசனும்' என்று சொல்லிக் கொண்டு சோகமுடன் குடிலுக்குள் போகிறாள்.

மண்வெட்டியால் பூனைக்குட்டியைக் கோரி எடுத்துக் கொண்டு எளயம்பி புதைக்கப் போகும் போது நாய் பொட்டும் அவன் கூடப் போகிறது. அப்பொழுது, காகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ஒன்றோடொன்று புணர்ந்து கத்திக் கொண்டபடி கீழே விழுகின்றன. விழுந்த காகங்களை பொட்டு விரசித் துரத்துகின்றது. பொட்டின் ஆத்திரத்தில் பயந்து போய், மரங்களில் இருந்து கத்திக் கொண்டிருந்த காகங்களும் சிதறிப் பறக்கின்றன. அப்பொழுது என் வீட்டுக்கு வந்த கிழவியிடம் பேரன் ஆசீம்,'எங்கிட சின்னப் பூனைக் குட்டி செத்துப் பெய்த்துகா' என்று வேதனையோடு கூறுகின்றான்.

பூனைக்குட்டியை புதைத்துவிட்டு எளயம்பி சோகமுடன் வருகிறான். நாய் பொட்டு, பூனைக்குட்டியை புதைத்த இடத்தில் அமைதியாக படுத்துக் கிடக்கிறது. தாய்ப் பூனை தன் குட்டி செத்துக் கிடந்த இடத்திலேயே வேதனையோடு கிடக்கிறது. அதன் இரண்டு குட்டிகளும், அதனிடம் மகிழ்ச்சியோடு பால் குடித்துக் கொண்டிருக்கின்றன.

ஓயாமல் வானம் கேரிக் கொண்டிருக்கிறது. காகங்கள் பறந்து பறந்து கத்திக் கொண்டிருக்கின்றன. கடுவன் பூனையைப் பிடிக்க எளயம்பி தொண்டு வைக்க கயிறு தேடிக் கொண்டிருக்கிறான்.

கடுவன் பூனையைப் பிடிக்க எளயம்பிக்கு எத்தனை காலம் போகுமோ? நாய் பொட்டு குட்டிப் பூனையை புதைத்த இடத்திலேயே இன்னும் படுத்துக் கிடக்கிறது. குட்டிப் பூனைக்கும் கவுசி வருமா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடு ஓறங்கிப் பெயித்து

என் மனைவியின் தாய்க்கு வயது எண்பதுக்கு மேல்தான் இருக்கும். இன்றும், நல்ல தேகாரோக்கியத்தோடு, வீட்டிலுள்ள எல்லோரையும் அதிகாரம் செய்து கொண்டு, மனநிறைவோடு வாழ்கின்றா. வீட்டில் உள்ளவர்கள் எழும்புவதற்கு முன்னர் விடியலில் எழும்பி, நாலுமணிக்கு நடுநிசித் தொழுகையை முடித்து, தொழுத பாயிலேயே இருந்து பின்னர் சுபஹுத் தொழுகையும் முடித்தவுடன் வீட்டிலுள்ளவர்களுக்கு அடுப்பில் தேநீருக்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து விட்டு, வீட்டு முற்றத்தை கூட்டிக் கொண்டிருப்பா. எந்தக் களைப்புமின்றித் தன் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் என் மனைவியின் தாயோடு, என் வீட்டில் பல வருடங்களாக வாழ்ந்து வரும் நாய் பொட்டுக்கு சொல்ல முடியாத பாசம். முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருக்கும் மாமியைக் கண்ட நாய் பொட்டு ஊழையிட்டுக் கொண்டு வருகிறது. இரவு வீட்டிலுள்ளோர் சாப்பிட்டு விட்டு, கொட்டிவைக்கும் மீன் முள்ளு, மிச்சச்சோற்றுக் குப்பைகளை எடுத்து, விடியலிலேயே நாய் பொட்டுக்கு போடுவது, என் மாமியின் பழக்கம். இதைக் கேட்டுத்தான் பொட்டு ஊழையிட்டுக் கொண்டிருக்கிறது. விடியச்சாமத்திலேயே குசினிக்குள் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பைகளைக் கொண்டு போய் நாய்க்குப் போட்டு விட்டு,அது உண்ணும் வரை பார்த்திருந்து,சாப்பிட்டு முடிந்தவுடன் அது சாப்பிட்ட பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி விட்டு வருவா.

விடியலின் ஆரவாரத்தால், உறங்கிக் கிடந்த ஊர் சோம்பல் முறித்து விழிக்கிறது. ஊர் விழித்து விட்டதை,தென்னைமர வட்டுக்குள் கொடுகிக் கிடந்த காகங்களும், குருவிகளும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அடுப்படியில் இரவு சமைத்த மீன் கறியை சூடுகாட்டிக் கொண்டிருந்த மாமி என்ன இன்னும் ஒங்களுக்கெல்லாம் விடியல்லயா? லாவு ஆக்கின சோறு கறியெல்லாம் சும்மா அப்படியே கெடக்கு. ஆரும் சோறு தின்னாட்டி, என்னத்துக்கு இவ்வளவு அரிசப் போட்டு சோறாக்கிற. ஒழைக்கிற பொறுப்பு தெரிஞ்சா இந்த அநியாயம் செய்விங்களா? மனிசன் ஒரு புடிசோத்துக்குப் பர்ற கஷ்டம் இந்த ஊட்டில ஆருக்குத் தெரியுது. சும்மா கண்கட தெரியாம அரிசப் போட்டு ஒவ்வொரு நாளும் அவிச்சு அவிச்சு நாய்க்கும் பூனைக்கும் கொட்டினா, இது அல்லாக்கு அடுக்குமா? எதிலையும் பொம்பளைக்கு கொஞ்சம் பொறுப்பு சறுப்பு தெரியனும்... புரிசன் பர்ற கஷ்டம் பொம்பளைக்குத் தெரியாட்டி, இந்த ஊடு ஒழுங்கா வருமா?" என்று என் மனைவிக்கு ஏசிக் கொண்டு, பானையில் கிடந்த சோற்றை வழித்தெடுத்துக்கு போய் கோழிக் கூட்டுக்குள் கிடக்கும் கோழிகளுக்கு போட்டு விட்டு வரும் போது, நாய் பொட்டு ஊளையிடுகிறது. மாமியின் ஆரவாரத்தால் வீடு அல்லோலப்படுகிறது. தாயின் கட்டளைக்கு அடிபணிந்து என் மனைவி எழுந்து வருகிறாள். வரும் போது 'ங்... தொடங்கிற்ரியா.... ஒண்ட சண்டித்தனத்த...? மனிசன் ஒழுப்பம் கண்மூடிப் படுக்க உடமாட்டியா.... காகம் குருவிகள் எழும்புறதுக்கு முன்ன எழும்பி, அவட கூத்தக் காட்டத் தொடங்கிருவா..." என்று கூறியபடி அடுப்படிக்கு வந்து தேநீரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கொண்டிருக்கிறாள். விடியல் மறைந்து உலகை சூரியன் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறான். இரவெல்லாம் காலைக்குள் அடைப்பட்டுக் கிடந்த பசுமாடுகள் எங்கள் வீட்டிற்கு முன்னாலுள்ள சிற்றொழுங்கையால் கத்திப் போவதைப் பார்த்து பொறுக்க முடியாமல் வாழைப்பாத்திக்குள் மாமி போட்ட சாப்பாட்டை வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டு படுத்துக் கிடந்த நாய் பொட்டு,எழுந்து போய் மாடுகளைப் பார்த்து குரைக்கிறது.

அப்பொழுது என் மச்சினன் மம்மது வருகிறான். வந்தவன் நேரடியாக கிணற்றடிக்குப் போவதைப் பார்த்து என் மனைவி, 'என்னடாம்பி? என்ன நடந்த...? வந்தவாக்கிலேயே கெணத்தடிக்குப் போறாய்?"என்று கேட்க. மம்மது இந்த நாசமத்துப் போவானுகள்ள மாடுகளெல்லாம் ஒழுங்கைக்குள்ள பீயெல்லாம் பேண்டு வெச்சிருக்கி... கால்லயெல்லாம் நல்லாய் பட்டுட்டு" என்று கூறி கால்களைக் கழுவிக் கொண்டு வீட்டிற்குள் வரும் மகனைப் பார்த்து மாமி ' நீ ஒழுப்பம் பார்த்து வரப்புடாதா? அதெல்லாம் அறிவில்லாத சீவனுகள்... நல்லது கெட்டது அதுகளுக்கு தெரியுமா? நாமதான் எல்லாத்தையும் பார்த்து நடக்கணும்... புள்ளேய்! தம்பிக்கு தேயில கொண்டு குடுகா... என்ன ஒண்ட ஆமவட்ட வயல் எப்படி இரிக்கி? புல்லலெல்லாம் புடுங்கிப் போட்டியா? பயிரெல்லாம் நல்லாரிக்கா? மாரிப் போகவம் கொஞ்சம் கவனமாப் பாத்துக்கணும்," என்று கூறிக் கொண்டு வாசற் சுவரில் காயப் போட்ட சாக்குகளை எடுத்து வருகிறா.

என் மனைவி, தம்பிக்கு தேநீரை கொண்டு வந்து கொடுக்கும் போது 'என்ன மொதலாம் பசளய வயலுக்கு எரிஞ்சிற்றியா? நேர காலத்தோட எல்லாத்தையும் செஞ்சிரணும். பிந்தினா நமக்குத்தான் கஷ்ரம். வாய்க்கால் எல்லாத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாக் கைபார்த்து, புல்லுகில்லு இல்லாம வெளிசாக்கி வெச்சிரு. அப்பதான் வடிச்சல் ஒழுங்கா ஓடும்.” என்று தம்பிக்கு சொல்லி வீட்டு அடுப்படிக்கு போகிறாள். அவளுக்கு பின்னால் படுத்து கிடந்த பூனை கத்திக் கொண்டு வருகிறது. வீட்டுச் சுவர்கடிகாரம் ஏழு மணியைப் பறைசாற்றுகிறது. என் பிள்ளைகள் பாடசாலைக்கு றெடியாகிப் போகிறார்கள். அவர்கள் போகும் போது வாசலில் பூத்துக் குலுங்கி நிற்கும் மாதுளஞ் செடிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கும் மாமி ‘ங்... இப்பதான் ஒங்கலுக்கு விடிஞ்சயா? வாத்தி பள்ளிக் கூடத்த பூட்டிருவான். சட்டுப்பண்ணிப் போங்க... ம், அத்தீக் மகன் தம்பிர கையப்புடிச்சிக்குப் போகா வாப்பா... இவனுகள்ள காறு மோட்டச் சைக்கிள் வரும், றோட்டுச் சைற்றால போங்க. இந்த தொட்டச் சைக்கிள் ஓர்ற வழிசலுகள் என்ன பாஸ்ற்றா வாறானுகள். உம்மா வாப்பா கடன்பட்டு ஒரு மோட்டச் சைக்கிள் வாங்கி குடுத்திற்றா போதும்... ஏதோ ஏரப்பிளனுல போறமாதிரித்தான் போவாங்க... வாப்பா உம்மமாட இட்றமுட்ற தெரியாத பயலுகள்...”என்று தன் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிக்கொண்டு தன் வேலையில் மும்மூரமாகிக் கொண்டிருக்கிறா. என் பக்கத்திலிருந்து தேநீரைக் குடித்துக் கொண்டிருந்த என் மச்சினன் ‘மச்சான் லாவு நம்முட பேலயாண்ட ளளயமகள், அவன் எலிவாலண்ட மகன் கபூரோடக் கூடிக்கு ஓடிற்றாளாம்... ஊரெல்லாம் திம்மிண்டு கெடக்கு... ஊருக்குள்ள மனிசரப்பத்தி ஒரே இங்காறு பேசித்திரியிற பேயலியான் இப்ப ஊருக்கு முகம் காட்ட முடியாம ஊட்டுக்குள்ள ஒளிச்சிக்கிரிக்கான். ஒருநாளும் ஆரயும் பத்தி இங்காறு பேசப்புடா... இப்ப எல்லாம் கண்ணுக்கு முன்னதான்.” என்று கூறி முடிப்பதற்குள் என் மனைவி ‘இதெல்லாம் நடக்குமெண்டு எனக்கு எப்பவோ தெரியும். அவள் பள்ளிக்குடத்துக்கு போற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் காட்டிக்கு போற பிலுக்கும். நளினமும் வாயால செல்ல ஏலா... பெரிய திமிர் புடிச்ச தொழுப்புறி..." என்று பேயலியாண்ட மகளுக்கு ஏசிக் கொண்டு படுக்கையிலிருந்து எழும்பி கண்களைக் கசக்கி வரும் என் சின்ன மகள் யுனாவை தூக்கி எடுத்துக்கு கிணற்றடிக்கு போகிறாள். வாசலில் நிற்கும் மாதுளைக்கு நீரை ஊற்றி விட்டு. மாமி குசினுக்குள் போகிறா. மச்சினன் பேயலியாண்ட மகளின் விசயத்தை விளக்கி விட்டு என் புறவள்ளவிட்குள் கட்டிக்கிடக்கும் பசுமாடுகளை அவிழ்த்து பால்கறப்பதற்கு போகிறான். பசுமாடுகள் கத்தும் சப்த்தைக் கேட்டு தம்பி 'மம்மதோ! இண்டைக்கி அயாத்து நபி அப்பாட நீயத்த பால்புக்க ஆக்கித்தான் ஓதணும். கொஞ்சம் துப்புரவா பால கறந்துக்கா, மாட்ற மடிய நல்லா கழுவிக்க... முதல்ல அந்த கன்டுகள குடிக்க வெச்சிடு" என்று மகனுக்கு கட்டளையைப் போட்டுவிட்டு, மாமி பால் கறக்கும் மகனிடம் போகிறா. மாட்டுக்காலைக்குள் கிடக்கும் கன்றுகள் வாழிபாய்கின்றன.

காலைச் சூரியன் இதமாக வளவிற்குள் நிற்கும் இளந் தென்னைகளை தொட்டுத் தடவிச் சிரிக்கின்றான். அப்பொழுது, பூனைப் பல்லண்ட மகன் செலயிமான் எங்கள் ரோட்டால் கரத்தையில சோளக குலைகளை ஏற்றிக் கொண்டு 'சோளக கொல இரிக்கோ! சோளகக் கொல... வேணுமென்டா வாங்க? விடியச்சாமந்தான் முறிச்ச கதிரு... நம்முட பள்ளக் காட்டுக்க போட்ட சோளம், அவிக்கிறத்துக்து நல்ல சோக்கா இரிக்கும். வேணுமென்டா ஓடியாங்கோ..." என்று கத்திக் கொண்டு வருகிறான். இவனின் கத்தலைக் கேட்டு பசுமாட்டுக் காலையடியில் நின்ற மாமி "புள்ளேய்! அன்னா பூனப்பல்லன்ட மகன் செலயிமான் சோளகொல வித்துக்காரான்... ஒன்ட புரிசன போய் பிஞ்சு கொலயா பார்த்து அம்பது ரூபாய்க்கு வாங்கிற்று வரச் சொல்லுகா... பிள்ளைகளுக்கு அவிச்சுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுக்கலளாம். குந்திகிரிக்காம எழும்பி போக சொல்லுகா. அவனும் நாலிடத்துக்குப் போறவன்... கெதியா போகச் செல்லு"என்று சொல்லி விட்டு பால் கறப்பதற்கு கட்டிக்கிடக்கும் பசு ஒன்றை அன்போடு தடவிக் கொண்டிருக்கிறா. தாயின் அதட்டலைக் கேட்டு என் மனைவி 'இந்த மனிசிர வாய் ஒழுப்பமாவது சும்மா இரிக்கிரல்லயா? விடிஞ்சா போதும், பழஞ்சோத்துக்கு கத்துற காகம் மாதிரி ஒரே கத்துறதான்... வயசு போன காலத்துல கொஞ்சம் சும்மா இரிக்கேலாதா?... எல்லாத்துக்கும் இட்டுமையும் சண்டித்தனமும்தான். எப்பதான் இந்த சண்டித்தனம் அடங்கப்போகுதோ? அடங்கினாத்தான் இந்த ஊடு ஒழுப்புளம் ஒறங்கும்..." என்று வாய்க்குள் முணு முணுத்துக் கொண்டு கணவனோடு சோளக் குலை வாங்க ரோட்டுக்கு வருகிறாள்.செலயிமான் சோளகம்... சோளம்!!... போப்புறன் ஓடியாங்கோ... பால் மணக்குறசோளன், பல்லுக்கு சப்ப பதமாய் இருக்கும்... பிஞ்சி கதிரி, கடிச்சா வாய்க்குள்ள பால் பறக்கும்" என்று கத்துகிறான்.

"எங்களைக் கண்ட செலயிமான் வாங்கம்பி நல்ல பிஞ்சிக்கதிர் நூறு ரூபாய்க்கு நல்ல கதிரா தரட்டா? இப்பதான் முறிச்சிக்கு வாறன்." என்று கூறி சோளக் குலைகளை எண்ணி எடுக்கிறான். செலயிமானின் சோளக் கரத்தையை வளைத்து பெண்கள் கூடுதலாக நிற்கின்றனர். மனைவி சோளக் குலைகளை வாங்கி வரும் போது "என்ன இப்பதானா வாங்கி முடிஞ்சயா? வாங்கினா நில்லாம டக்கன்டு வாறதானே... பகலைக்கு அயாத்து நபி அப்பாட பேருல பாத்திஹாவும் ஓதணும். அவன் மம்மதுட கல்யாண விசயம் சரிவந்தா அந்த சீதேவிர பேருள பாத்திஹா ஓதுவனென்டு ஒரு மொறாது வெச்ச... கெதியா வாகா..."என்று மாமி பொரிந்து கொண்டிருக்கிறா. என் மனைவி மாமியப் பார்த்து "இனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ட வாய்க்கு பூட்டுத்தான் போடணும். கொஞ்ச நேரம் ஒன்னால சும்மாரிக்கேலாதா? இந்த கெழுட்டு வயசுலயும், ஒனக்கு இப்படி கோவம் இரிக்கப்புடா"என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டு ஊட்டுக்குள் போகிறாள். என் சின்ன மகள் மாமியைப் பார்த்து கையால் கவனம் சொல்லி நளிப்புக் காட்டி, தாயோடு போவதைப் பார்த்து எனக்கு அடக்க முடியாத சிரிப்பு.

மாமியின் அட்டகாசமும் அதிகாரமும் அவவோடு ஒட்டிப் பிறந்த பழக்கம். அப்படி நடப்பதில் அவவுக்கு ஆத்ம திருப்தி. மாமி மென்மையான குணமும், ஆழங்காண முடியாத அன்பும், பாசமுமடைய பெண். என் குடும்பத்தில் யாருக்காவது ஒரு சின்னக் காய்ச்சல் வந்தா போதும். கண்மூடிப் படுக்கயே மாட்டா. எந்த நேரமும் மருந்துகளைக் குடிக் கச் சொல்வதும் தலையைத் தடவி விடுவதும் தண்ணீரில் சீலையை நனைத்துநெற்றிஉடம்புகளில்ஒற்றிக்கொண்டிருப்பா. மாமி எங்களிடம் எவ்வளவு கோபமாக நடந்தாலும், அதே போன்று ஆழ்ந்த இரகக்கமும், அன்பும் உள்ளவராக நடந்து கொள்வா. என் பிள்ளைகள் மீது சிற்றெரும்பு கடிப்பதைக் கூட பொறுக்காமல் உயிர்த்துடிப்போடு பார்த்துக் கொள்வா. மாமி மீது என் பிள்ளைகளுக்கும் பாசம்தான்.

மச்சினன் மம்மது பாலைக் கறந்து வந்து, குசினியில் வைத்து விட்டு என் மகள் யும்னாவுடன் சரசம் செய்கிறான். வீடு கலகலப்பாய் கிடக்கிறது.என் மனைவி தம்பியோடு பகடி பண்ணி சிரித்துக் கொண்டிருக்கிறாள். அப்பொழுது குசினிக்குள் இருந்த மாமி தம்பேய் இஞ்ச வந்து தண்ணிச்சோத்த திண்டுப் போட்டு போ... லாவு மரத்தால உழுந்த விளாம்பழமும் பாலுமிருக்கு. சீனிய போட்டு நல்லாக் கரச்சிக்குடி... வெறுங்குடல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரச்சிக்குடிச்சா நல்லாரிக்கும்." என்று மகனைக் கூப்பிட்டுக் கொண்டு பகலைக்கு கறியாக்க முறித்து வைத்த முருக்கை இலைகளை உருவிக் கந்தப்பாத்துக் கொண்டிருக்கிறா. பூனை கத்திக் கொண்டிருக்கிறது. முருங்கை மரங்களிலும் சூரியன் தன் ஆட்சியை செலுத்தி, சக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறான்.

அப்பொழுது சொலகண்ட அகமது, விடியச்சாமத்தில் களப்புக்க வீசிப்பிடித்த மீன்களை எடுத்துக் கொண்டு சப்தம் போட்டு ரோட்டால கத்திவருகிறான். குசினிக்குள் முருங்கை இலையை கந்தப்பார்த்துக் கொண்டிருந்த மாமி தன் மகளிடம் "புள்ளேய்! அன்னா சொலகண்ட அகமது மீன் வித்துக்காரான், ஒண்ட புரிசன போய், நல்ல கைமீனா பாத்து வாங்கி வர சொல்லுகா... வெல்லாப்புல புடிச்ச மீன் நல்ல ருசியா இரிக்கும்... குந்திக்கிரியாம எழும்பிப் போகந் சொல்லு" என்று கூறியபடி தன் வேலையில் மும்முரமாகிக் கொண்டிருக்கிறா. மம்மது சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் எங்கள் வீட்டுப் பூனை கத்திக் கொண்டிருக்கிறது. புறவளவிற்குள் நிற்கும் முருங்கை மரத்தில் நங்கினாங்களும், பொக்கான் குருவிகளும் பூச்சி புழுக்களைக் கொத்திக் கொண்டிருக்கிறன.

வீடு சோகத்தின் பிடியில் கிடக்கிறது. அப்பொழுது என் பக்கத்து வீட்டு அலிமா ராத்தா வந்து என்னம்பி! மாமிர பாடு எப்படிக் கிடக்கு? கண்முழிச்சிற்றாவா?" என்று கேட்டு, மாமியப் பார்க்க அவ படுத்துக் கிடக்கும் அறைக்குள் போகிறா. அயர்வடையாச் சிற்றெரும்பு போல் என் குடும்பத்திற்காக சதா உழைத்துழைத்து ஓடாகிப் போன மாமி எழும்ப முடியாமல் பாயில் படுத்தபடி கிடந்து தன் காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறா. நேற்றிரவு நாலு மணியளவில் சுபஹு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவதற்கு வுழுச் செய்ய, கிணற்றடிக்குப் போன மாமி கால் தடக்கி விழுந்து கையும், காலும் அடிபட்டு பேசவும் கூட முடியாமல் பாயில் கிடப்பதைப் பார்த்து என் மனைவி வேதனையை தாங்க முடியாமல் விம்மிக் கொண்டிருக்கிறாள். என் பிள்ளைகள் எல்லோரும் பேசமுடியாமல் அமைதியாக படுத்துக் கிடக்கும் உம்மம்மாவின் பக்கத்திலிருந்துஅவவின் கால்களையும் கைகளையும் பிடித்துப் பிடித்துத் தடவிக் கொண்டிருக்கின்றனர். என் மகள் யும்னா அவவின் தலையைத் தொட்டுப் பார்த்து அமைதியாக குந்திக் கொண்டிருக்கிறாள். மாமியின் கண்கள் உடைந்து நீர் வழிகிறது. நேற்று வரை உயிர்த் துடிப்போடு இயங்கிக் கொண்டிருந்த என் வீடு, இன்று அமைதியாக கிடக்கிறது.

என் வீட்டு நிலைமை அலிமா ராத்தா பார்த்து 'மூத்தம்மா இல்லாம இப்ப ஊடு ஒறங்கிப் பெயித்து" என்று பெரு மூச்சை விடுகிறா. பாவம்! என் நாய் பொட்டு, மாமியின் கையால் கிடைக்காத, எந்த உணவையும் உண்ணாமல் அழுதபடி வாழைப்பாத்திக்குள் படுத்துக் கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமம் அழுகிறது

இரவு, விடியச் சாமத்தோடு ஜீவமரணப் போராட்டம் இட்டுக் கொண்டிருக்கும் போது, எங்கள் கிராமம் வேதனையால் வெந்துருகி அழுது கொண்டிருக்கின்றது. இரவெல்லாம் இடைவிடாது பெய்து கொண்டிருந்த மார்கழி மாதப் பனியில் கொடுகிக் கிடந்த நாய்களும், காகம், குருவிகளெல்லாம் அழுது கொண்டிருக்கும் எங்கள் கிராமத்தின் துயரத்தை தாங்க முடியாமல், கண் விழித்துக் கத்திக் கொண்டிருக்க, தூரத்தில் ஆள்காட்டி பட்சி யொன்று கத்திக் கொண்டிருக்கின்றது. " என்ற ரகுமானே, எங்கிட ஊருக்கு நடந்த, கொடும என்ன வாப்பா.......? ஒன்டுமறியாத எங்கிட மக்களுக்கு இந்தக் கெதி என்னத்துக்கு வரனும், அல்லாஹ்.........? அண்டைக்க கண்டேக்கனயத்த போக்கிறத்திக்கு கூட வழியில்லாமக் கயிதித்தப் பார்ர. இந்த எளிய சனாங்களுக்கு ஏன் அல்லாஹ் இந்தக் கயித்தம் வரனும்....? பால் குடி மாறாத இந்தப் பாலா பரதேசிகளை எல்லாம் மாடுகளை அறுக்கிறதைப் போல, படுத்த பாயோட அறுத்துப் போட்டுப்போன, இந்தக் கொலகார பாவி எல்லாம், எங்கிட கிராமத்து மக்கள்ள வயிறு எரியிராப் போல, எரிச்சுப்போடு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசமத்துப்போன சண்டாலப் பாவிகள். எவ்வளவு அழகா இருந்த எங்கட ஊர குப்பய கூட்டி பத்தவெக்குர மாதிரி, பத்த வெச்சிப்போட்டு போயிரானுகளே.... இவனுகளெல்லாம் மனிசங்களே இல்ல.... ஈவிரக்கம் இல்லாத பண்டிகள்தான்.... இல்லாட்டி, கதைக்கத் தெரியாத குஞ்சு குறுமானயெல்லாம, நித்திரையில வந்து பதறப் பதறப் வெட்டி அரிஞ்சிப் போட்டுப போவானுகளா......? எத்தின கயித்தப்பட்டு வெச்ச குடில்கள்.... அதுகளுக்கும் நெருப்பு வெச்சிப் போட்டுப் பெயித்தானுகளே....! றப்பே ரகுமானே......!இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் நீதான் செரியான தண்டன கொடுக்கனும்..... எங்கிட ஊர் மக்கள் குடிலெல்லாம் பொசிங்கினாப்போல இந்தப் பாவிகளும் பொசுங்கிரனும்....."

சுபஹூத் தொழுகையைத் தொழுது விட்டு வந்த, எங்கள் கிராமத்துப் பெரிய பள்ளிவாசல் மோதினார் - அமைதியின் உருவாக எங்கள் கிராமத்திற்கு நேர்ந்த சோகத்தை, எரிந்து போய் அலங்கோலமாய்க் கிடக்கும் குடிசை ஒன்றின் முன் நின்று, வேதனை தாங்க முடியாமல் அழுது கொண்டிருக்கின்றார். இருளில் நடந்த இக்கொடூரத்தை, வெளிச்சத்தில் வந்த எங்கள் கிராமம் பார்த்துப் பார்த்து, விம்மி விம்மி அழுது கொண்டிருக்கின்றது. இயற்கையின் எழில் அரசியாக இப்பகுதியில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த, எங்கள் கிராமத்தில் வேதனையும் விக்கலும் வலியும் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கின்றன. மணப் பெண்ணைப் போலிருந்த எங்கள் கிராமம் - பொட்டிழந்து-பொலிவிழந்து விதவையைப் போல் இருப்பதைப் பார்க்க முடியாமல் விடியச்சாமம் விரைவாக ஓடிக்கொண்டிருக்கின்றது. கிராமத்தை மூடியிருந்த பனி மூட்டம் மெதுவாகக் கரைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ற மகனே நீ என்னை உட்டுட்டுப் போயிற்றியா...? இனி இந்தக்கிழவிய ஆருவாப்பா பாக்கப்போறாங்க? இந்த ஒலகத்துல ஆருவாப்பா தொண எனக்கு...? விடியச்சாமத்துக்கு முன்னயே, வட்டைக்க போகணுமெண்டு சொல்லிப்படுத்த நீ, இப்ப மைத்தாக கிடக்கியே, என்ர கல்பெல்லாம் பத்தி எரியுதே மகனே...! லாவு தானே மகனே, ஒன்ட கலியானத்தப்பத்தி ஓங்கு மாமா வந்து பேசிப் போட்டு போனாரு... விடியிறதுக்குள்ள மையத்தா போனியே, ராசா, இது என்ன கொடும, அல்லாஹ்! என்ர மகனே ஒனக்கு இப்படியொரு மவுத்து வருமெண்டு ஆருக்கு வாப்பா தெரியும்? ஒண்டுமே அறியாத எங்களப் போல ஏழையளுக்கு ஏனல்லாஹ்! இந்தச் சதிமானம் வரணும்...? மகனே! இனி நீ இல்லாமல் இந்நக் கிழவி இருந்துதான் என்ன பயன்? எங்குட நெருப்பு, இந்த கொலகாரப் பாவிகளச் சும்மா உடமாட்டா... மகனே" படுத்த படுக்கையிலேயே பரிதாபமாக கொலை செய்யப்பட்ட தன் மகனின் உடலைப் பார்த்துப் பார்த்து அலிமாக் கிழவி தலையிலடித்து அழுது கொண்டிருக்கின்றாள். அலிமாவின் வேதனையைப் பார்த்து வானமும் அழுகின்றது. வானத்தின் கண்ணிரைக் கண்டு, இரவெல்லாம் தூங்கிக் கொண்டிருந்த சூரியனும் எங்கள் கிராமத்தின் துயரைக் காண விரும்பாமல் மூடிய நேத்திரங்களைத் திறக்காமல், கார்கால மேகக் கூட்டங்களுக்கிடையில் மறைந்து தூங்கிக் கொண்டிருக்கின்றான்.

இயற்கையின் இனிய தாலாட்டில் தூங்கி, இளந் தென்றலின் ஊடலில் இன்பங் கண்டு கோலேச்சிக் கொண்டிருந்த எங்கள் கிராமம் இன்று இனவெறி பிடித்த அயோக்கியர்களால் அழிக்கப்பட்டு பிணக்காடாகிக் கிடக்கின்றது. இருளின் அமைதியைச் சாதாகமாக்கிய இதயமில்லாக் கொடியவர்கள், எங்கள் கிராமம் உறங்கிக் கொண்டிருந்த வேளை உட்புகுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவி மக்களையும் அவர்களின் பால்குடி மாறாப் பச்சிளங் குழந்தைகளையும் கத்திகளால் வெட்டித் துண்டுகளாக்கி விட்டு, அவர்களின் வானம் தெரியும் ஓலைக் குடிசைகளுக்கும் தீயிட்டுக் கொழுத்தி விட்டு இருளோடு இருளாகப் போய் விட்டார்கள்.

எங்கள் கிராமத்தை மூடியிருந்த பனி மூட்டம் முற்றாக மறைந்து விட்டது.

"மகளே...! என்ர தங்க மகளே...! நீ புள்ளத்தாச்சியெண்டு பாராமலே, இந்தக் கொடியவனுகள் ஒன்னக் கொல செஞ்சி போட்டானுகளே... நீ, தலப் புள்ளத்தாச்சியெண்டு நான் எவளவு கரிசனையோடு பார்த்து வந்தேன்... ஒன்ட புள்ளய ஒரு தரம் கொஞ்சிப்பாக்க எனக்கு, நசிபில்லாமப் போச்சே மகளே...! என்ர மனசி தாங்குதில்லியே...! நெருப்புளுந்து போவானுகள், என்ர ரெண்டு சீவனையும் ஒண்டாலக் கொலசெஞ்சி போட்டானுகளே... என்ர மகளே இனி ஒன்ன எப்ப நான் பாக்கப்போறன்...?"

கர்ப்பிணி மகளைப் பறி கொடுத்து, துயரம் தாங்காமல் கத்திக் கொண்டிருக்கும் கதிஜாவின் கதறலை கேட்டு, தூறிக் கொண்டிருந்த வானம், மழையைச் 'சோ' வென்று கொட்டிக் கொண்டிருக்கிறது.பால்குடி மாறாப் பச்சிளம் பாலகர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும், அப்பாவி ஏழை மக்களும் கொடிய இன வெறி அரக்கனால் கொல்லப்பட்டுத் தலையில்லாமலும் கைகால்கள் இல்லாமலும் முண்டங்களாகவும் கிடப்பதைப் பார்த்து, எங்கள் கிராமத்தில் உயிர்த்துடிப்போடு வாழ்ந்து கொண்டிருந்த மானிட நேசம், ஒன்றுமே செய்ய முடியாத ஊமையாகி கிராமத்தோடு ஒன்று சேர்ந்து கொண்டிருக்கின்றது. கொட்டும் மழையிலும் எங்கள் கிராமத்து மக்களோடு சேர்ந்து நிற்கும் கிராம சேவகர் தன் கையில் கட்டிருக்கும் மணிக்கூட்டைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து எட்டு மணி என்று அலுத்துக் கொள்கின்றார். அப்போது இரவெல்லாம் கவலை மறந்து தூங்கிக் கொண்டிருந்த பொலிஸாரும் படையினரும் ஜீப் வண்டிகளில் வேகமாக எங்கள் கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். அலுத்து நின்ற கிராம சேவகர் போய் பொலிசாரையும் படையினரையும் அழைத்து வந்து கொலையுண்ட உடல்களை ஒவ்வொன்றாக காட்டிக் கொண்டிருக்கின்றார். இப்பஞ்சமாபாதகத்தை செய்து விட்டு, இருளோடு இருளாக சென்று விட்ட, இரக்கமற்ற இனவெறியர்களை கண்டு பிடித்து தண்டனை அளிக்க முடியாத அரசின் காவலர்கள் உயிரற்ற உடல்களை, எங்கள் ஊர் மக்களின் உதவியோடு மிசின் பெட்டிகளில் ஏற்றிக் கொண்டிருக்கின்றனர். அழிந்து விட்ட உடல்களில் இருந்து அவையின் ஆத்மாக்கள் எப்படி பிரிந்து சென்றன என்பது பற்றி, பகுப்பாய்வு செய்து, மரண விசாரனை செய்வதற்காக எங்கட கிராமத்து வைதித்தியசாலைக்கு அவைகளைக் கொண்டு செல்வதற்கு யந்திரம் போல் பொலிஸாரும் படையினரும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். வானம் ஏங்கி ஏங்கி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றது. இன்னும் பொழுது விழிக்கவே இல்லை.அப்போது சோறு கிடைக்கும் இடத்தையெல்லாம் சொந்தமாக்கி நடைப்பிணமாக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் சாவல், தொடை வரைக் கிழிந்து தொங்கும் தன் காவி நிறச் சாரனால் கழுத்து வரை போர்த்திக் கொண்டு கார் விட்டு வருகிறான்.

"ப்பூ.......! பீப்பீப்.....!!பீப்......!!! கார் வருகிறது தள்ளுங்க தள்ளுங்க.......!கிஸ்சாரக் கோணெ.... தம்மோளி வாப்பா.... பீப்பீப்......! பீப்.....

மழையில் பொதும்பிக் கிடக்கும் கிறவல் றோட்டில், சாவலின் கார் புதைந்து வருகிறது. எங்கள் கிராமத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவல், மனைவி மக்களோடு மிகவும் கௌரவமாகச் செல்வச் செழிப்போடு வாழ்ந்தவன்தான். தோட்டம் தொரவு, தொடுகைகளுடன் மாடு, கன்று வீடு வளவு எல்லாம் அவனுக்கு இருந்தன. ஆனால் இனவெறியின் அகோரப் பசிக்கு இவனும் தன் மனைவி மக்களையெல்லாம் இரவோடு இரவாக பறி கொடுத்து விட்டு, கிஸ்சாரக் கோண்....." தம் மோளி வாப்பா......" எனும் இரு அர்த்த மற்ற சொற்களை மட்டும் தன் வாழ்கைக்கு துணையாக வைத்துக் கொண்டு, இன்று எங்கள் கிராமத்தைச் சுற்றி சதா கார் விட்டுக் கொண்டிருக்கின்றான்.

பாவம் சுமார் பத்து வருடங்களுக்கு முன் தன் உணர்வுகளையும் உள்உறுத்தல்களையும், சுய அறிவையும் ஒரே நாளில் அவன் மனைவி மக்களை அடக்கம் செய்த மண்ணறைகளில் சேர்த்துப் புதைத்து விட்டு கார் விட்டுத் திரியும் சாவலுக்கு வயது ஐம்பது. எங்களூர் - சாவலுக்கும் சொந்தவூர்தான். எங்கள் கிராமத்து மண்ணில்தான், அவனும் இளம் வயதில் இயற்கையின் இனிய இராகத்தை மீட்டிக் கழித்தான். இக்கிராமத்தின் பசுமை நிறைந்த வயல் வெளிகளும், ஓங்கி உயர்ந்து நிற்கும் தென்னந் தோப்புகளிலும். பளிங்கு போல் சலசலத்தோடும் நீரோடைகளிலும்தான் அவன் ஆடிப்பாடி மகிழ்ந்து திரிந்தான். எங்கள் கிராமத்தின் இளந் தென்றல்தான் அவனுக்கும் தாலாட்டுப் பாடியது. இப்படியெல்லாம் அவன் உயிருக்கு உயிராய் நேசித்த அக்கிராமம் பிணக்காடாய் கிடப்பதை கிஞ்சித்தும் பாராமல், கவலையின்றிக் காரோட்டித் திரிகிறான். மானிட நேசம் அவனைக் கண்டு அழும்போதெல்லாம் அவன் அழுவதுமில்லை சிரிப்பதுமில்லை. ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கும் அவன் காருக்கு, இருட்டும் ஒன்றுதான் பகலும் ஒன்றுதான். அமைதியும் அழகும் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த அவன் இல்லற வாழ்வு இரக்கமற்ற இனவெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கனால் பறிக்கப்பட்ட பின், அவ்வெறிபிடித்த அரக்கனைத் தேடிப்பிடித்து அவனைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சாவல் எங்கள் கிராமத்தைச் சுற்றிச் சுற்றி அவனைத் தேடிக் கொண்டிருக்கின்றான்.

"ப்பூ.......! பீப்பீப்.....!!பீப்......!!!கார் வருகிறது வெலகுங்க... வெலகுங்க..... கிஸ்சபரக் கோண்.... தம்மோளி வாப்பா.... பீப்பீப்......! பீப்....."

உலகில் சொந்தம் என்று சொல்வதற்கு ஆருமேயில்லாத அப்பாவி அனாதையாய் எலும்பும் தோலுமாய் சதா, கார் விட்டுத் திரியும் அந்தச் சாவலையும் சேர்த்துத்தான் எங்கள் கிராமம் அழுகின்றது. எங்கள் கிராமத்தின் இயற்கையோடு பிண்ணிப் பிணைந்து அதன் சுகத்தோடுஇரண்டறக் கலந்து, அமைதியோடு வாழ்ந்து அநியாயமாக அழிந்து விட்ட அப்பாவி ஆத்மாக்களின், உயிரற்ற முண்டங்களையும் அவைகளின் உறுப்புக்களையும் ஏற்றிக் கொண்டு, படை வீரர்கள் புடைசூழ உழவு இயந்திரங்கள் வைத்தியசாலையை நோக்கி செல்கின்றன. அவைகளை பின் தொடர்ந்து எங்கள் கிராமமே சென்று கொண்டிருக்கிறது. ஆனால் சாவல் மட்டும், இனவெறியைக் கொல்ல முடியாமல், நேத்திரங்களை மூடி, நிஷ்டையில் தோங்கிக் கிடக்கும், ஈசனைத் தேடிக் கொல்வதற்கு வெறி பிடித்து ஓடுகிறான்... இன்று, சதா குயிலோசையும் குருவிகளின் களும் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்த எங்கள் கிராமத்தில், அடக்க முடியாத அழுகைக் குரல்களும், வேதனையின் விசும்பல்களும், பேய்களின் பயங்கர அலரல்களும் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. இள நிலாவும், இனிய தென்றலும் எங்கள் கிராமத்துக்கு வருவதே இல்லை. ஏனென்றால் இப்பொழுதெல்லாம் எங்கள் கிராமத்து மக்கள் இரவில் ஆறு மணியோடு தங்கள் வீடுகளில் இருந்து வெளியில் வருவதே இல்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸக்காத்

எங்களுரில் ரமழான் மாதத்தின் பூரிப்பு நிறைவாக நிறைந்திருந்தது. பள்ளிகளின் பக்கமே திரும்பிப் பார்க்காத வேடதாரிகள் எல்லாம், தலையில் தொப்பியும் ஜுப்பாவுமாக நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். சதக்கா கொடுப்பதிலும், சக்காத் கொடுப்பதிலும் எங்களுரில் உள்ள பணக்காரர்கள் எல்லாம் கும்மியடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பள்ளிகளில் தொழுகை முடிந்த கையோடு சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

எங்களுரில் நடைபாதையெல்லாம் அங்காடிப் பிடைவை வியாபாரிகளின் திடீர் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. சேட்டு, சாரன், சாரிகள் மலிவு விலையில் விற்கப்படுவதால் மக்கள் பெருநாளைக்கு உடுபிடைவைகள் வாங்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். மக்கள் மத்தியில் ஒரே குதூகலம். எதிர்வரும் நோன்புப் பெருநாளை மிகச் சிறப்பாக கொண்டாடுவதற்கு, தயாராகிக் கொண்டிருக்கின்றனர். ஊரெல்லாம் வெளியூர்களில் இருந்தும், உள்ளுர்களில் இருந்தும் சக்காத், சதகா வேண்டி பெண்களும் ஆண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைந்து கொண்டிருக்கின்றனர். ரமழான் மாதத்தில் இவை இரண்டும் ஏழை, எளியவர்களுக்கு கட்டாயம் கொடுப்பது பணம் படைத்த முஸ்லிம்களின் கடமையாகும்.

நானும் இதை உணர்ந்து என்னால் முடியுமானதை, செய்து கொண்டிருக்கிறேன். வாழ்க்கை மகிழ்ச்சியாக போய்க் கொண்டிருக்கிறது. வீட்டு சுவர் கடிகாரம் பத்து மணியைத் தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது என் வீட்டோடு ஒன்றித்து எங்கள் குடும்பத்தோடு உறவாடிக் கொண்டிருக்கும் ஹாய் எளயம்பி வருகிறான். அவன் வந்தாலே என் வீடு சிரிக்கத் தொடங்கிவிடும். சதா லூசி மாதிரி வாய்க்கு வந்ததையெல்லாம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பான். எல்லாப் பள்ளிகளுக்கும் போய், நோம்புக் கஞ்சி வாங்கி வந்து, அவனுக்கு விருப்பமானவர்களுக்கு எல்லாம் கொடுப்பான். சில நேரம் என் வீட்டிலும் கொண்டு வந்து கொடுப்பான். இதில் அவனுக்கு ஒருவிததிருப்தியும் மகிழ்ச்சியும்.

வந்தவன் 'ம்... நம்முட பித்துராவ தாங்க..." என்று கூறி விராந்தையிலுள்ள கதிரையில் அமர்ந்து கொள்கிறான். இதைக் கேட்ட என் மனைவி "இஞ்ச... நீயெல்லாம் பணக்காரன்... உனக்கென்ன பித்தரா? புள்ளயா குட்டியா? தனிக்கட்டை ' என்று கூறியபடி வருகிறாள். " ஏங்கா... நீ நல்லாச் செல்லுவாய்... நீ ராசாத்தி... ஓங்கு வாப்பா நல்லா, காணி பூமிய ஒழச்சி தந்துட்டு பெயித்தாரு... ஒனக்கென்ன ஒன்ட புரிசன் ஒவ்வொரு நாளும் கோட்டுக்கு போய் அள்ளிகந்து கொட்ராரு... ங், கதைய போட்டுப் போட்டு பித்ராவ எடுத்துக்கு கெதியா வா..." என்று கூறியபடி என்னை பார்க்கிறான்.

என்னை அறியாமலேயே எனக்கு சிரிப்பு. அவன் கதையைக் கேட்டு என் மனைவியும் சிரிக்கிறாள். ஹாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளயம்பியின் கதையைக் கேட்டு, நோன்புக் களைப்போடு தூ ங்கிக் கொண்டிருந்த என் மகள் ஹுஸ்னாவும், பிள்ளைகளும் எழும்பிவிட்டார்கள்.

எழும்பி வந்த என் மகள், "வாப்பா! பள்ளியடிக்கு போறலியா? நோன்பு காலத்துல கொஞ்சம் நேரத்தோட போனாத்தான் நல்ல மீனக்கீன வாங்கலாம். இந்த நாத்தக் கோழியத் திண்டு திண்டு கொடலெல்லாம் அவிஞ்சி பெயித்து... எத்தன நாளைக்குத்தான் இந்தக் கோழியத் திங்குற... நேரத்தோட ஹாயயும் கூட்டிக்கு போயிட்டு வாங்க... பொன்னாங்கணி எலக்கறிக், கட்டும், பயித்தங்காயும், சுண்ட வழுதிலங்காய் அரைக்கிலோவும், கூனி அரக் கொத்தும், சீனிக் கதலிப் பழம் ரெண்டு கிலோவும் வாங்கிட்டு வாங்க..." என்று கூறி ஹாயின் முகத்தைப் பார்க்கிறா. ஹாய் சிரித்தபடி,

"எங்குட புள்ள கொழும்புல இருந்து ஊட்ட வந்தாத்தான், இந்த ஊடு எப்பயும் கலகலக்குற..."என்று கூறி தன்னுடைய காவிபடிந்த பற்களைக் காட்டிச் சிரிக்கிறான். ஹாய் எளயம்பிய சிரித்தபடி அப்ட மார்கட்டுக்கு கொண்டு போற வேக்க எடுத்துக்காகா..." என்று கேட்க, என் மகள் ஹுஸ்னா வேக்கை கொண்டு ஹாயின் கையில் கொடுத்து விட்டு எழும்புங்க வாப்பா..." என்று என்னை அவசரப்படுத்துறா...

மகளின் வேண்டுதலைச் சிரமேற்று மார்கட்டுக்கு போகிறேன். என்னைப் பின் தெடர்ந்து ஹாய் எளயம்பி வருகிறான்.

இப்பொழுது எங்களூர் கடற்கரை எல்லாம் மீன் பிடி இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கின்றது. கடலில் வாடை நீர் ஓடுவதால், மீனவர்கன் தோணிகளைத் தள்ளாமல் இருக்கின்றார்கள். இதனால் மார்கட்டுக்கு மீன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதில்லை. ஐஸ் போட்ட மீன்கள்தான் கூடுதலாக இருக்கும். ஐஸ் மீன்கள் கறிக்கு ஒழுங்கில்லை.

மகளுக்கு ஐஸ் மீன் பிடிக்கிறதில்ல. இதனால் நான் ஐஸ் மீன் வாங்கிறதில்ல.

"கொஞ்சம் சட்டுபன்னி நடந்து வா.... இண்டைக்கு ஒலுவில்ல கும்புளாப் பாறக்குட்டி பட்டயாம், வந்தாலும் வந்திருக்கும்" என்று ஹாய் எளயம்பிய உஸார்படுத்தி நடந்து கொண்டிருக்கும் எனக்கு பின்னால் ஹாய் நடந்து வருகின்றான்.

றோட்டெல்லாம் ஹதியா கேட்டு திரியும் ஆணும் பெண்ணும் அலைமோதித் திரிகின்றனர். நோன்பு மாதத்தில் சர்வசாதாரணமாக ஊரில் இடம்பெறும் காட்சி. நானும் ஹயும் மார்கட்டுக்குள் நுழைகின்றோம்.

இன்று, வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கின்றது. நோன்புச் சூட்டிற்கு வெயில் இப்படி கொஞ்சம் குறைவாக இருப்பது மனசுக்கு குளிர்ச்சியாக இருக்கின்றது. அப்பொழுது வாசலில் நிற்கும் வாழைப் பாத்திக்குள் படுத்துக்கிடந்த நாய் பொட்டு, எளயம்பியைக் கண்டு குரைக்கின்றது.

"ங்.... போதும் ஒண்ட சண்டித்தனம்.... வாயப் பொத்திக்குபடுகா சவருக்கு திண்டு போட்டு வெச்ச மிச்சம் மிச்சடி இன்னமும் திங்கல்லியா?" என்று நாய் பொட்டை அதட்டி வருகிறான்....

"ச்சா.....! கடும் சேட்டும் சாறனுமாக் கெடக்கு... எங்க வாங்கின?" என்று கேட்க நேத்து எங்கிட விஸ்கோத்து பெக்டரி ஹாஜியார் சுவையிறு, ஆயிரம் ருபா ஹதியாத் தந்தாரு. அவரு தந்த காசிலதான் சாறனும் சட்டையும் வாங்கின. நல்லாரிக்கா...?" என்று கேட்டு அவனை அறியாமலேயே சிரித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாயின் சிரிப்பைக் கேட்டு வந்த மகள் ஹுஸ்னா, அடிரா சக்கே.... ஹாய் மாப்புள மாதிரி இருக்காரு....... நல்லாரிக்கு ஹாய்...! சேட்டு நல்ல கலர்....சாறனுக்கு ஏத்தாப் போல சேட்டும் அப்படி!" என்கிறாள்.

ஹாய் எளயம்பி அரலுசிதான் என்றாலும் நல்ல உழைப்பாளி பழைய குடைகள் கட்டுவதுடன், பழய சப்பாத்துகள் கிழிஞ்ச பேக்குகள் எல்லாம் தைத்துக் கட்டுவான். சில நேரம் யாரும் வேலைகளுக்கு கூப்பிட்டாலும் போய் செய்து கொடுப்பான். சொல்லப் போனால் இவன் ஒரு மனித நேயமுள்ள ஒரு அப்பாவி. கதையிலும் பேச்சிலும்தான் இவன் ஒரு சண்டியன்.

பாவம்! பெரிய பயந்தாங் கொள்ளி. சதா, பேய்களும் ஜின்களும் தன் கூட்டாளிகள் என்றும் இவைகளைக் கொண்டு தன்னால் 'வேலைகள்' செய்ய முடியும் என்றும் பயப்படுத்தி வைத்துக் கொள்வான். சும்மா எறும்புக்கும் அநியாயம் செய்ய பயப்படுவான்.

இப்பொழுது என் நாய் பொட்டு மீண்டும் குரைக்கிறது அங்கே எங்கள் இன்னொரு குடும்ப நண்பன், அப்துல் ரசூல் வருகிறான். இவனும் ஒரு அரலுசிதான். ஓ. எல். வரையிலும் படித்து, பின்னர் திருமணம் முடித்து, ஏதோ ஒரு பிரச்சினைகயில் தலையை விட்டு லூசாகி போய் தனிமையில் வாழ்கிறான். இவன் ஒவ்வொரு நாளும் கடற்கரைக்குச் செல்வான் தோணிகளில் வலை இழுப்பான்.

இவனுக்கு இத்தொழில் மூலம் மீன்களோ அல்லது பணமோ கிடைத்தால் அவைகளை இவன் எவர் கேட்டாலும் கொடுத்து விடுவான். இதில் இவனக்கு ஒரு திருப்தி. சதா இவன் உப்புச்சப்பற்ற அரசியல் பேசிக் கொண்டிருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தைப் பிரட்டி எடுத்துக் கடலில் கரைக்க வேண்டும் என்று பேசுவான். இதையெல்லாம் தாங்கிக் கொண்டு வாழ்வது என் தலை எழுத்து. இப்படிப்பட்டவர்களோடு அன்பாகவும் மனித நேயத்துடன் வாழும் என்னையும் சிலர் நானும் ஒரு விதமான லூசி என்று கூறுவதை நானும் அறிவேன். ஹாய் எளம்பியும் அத்துரசூலும் நான் நேசிக்கு நல்ல உள்ளம் படைத்த மானிட நேசமுள்ள சீவன்கள். என் வீட்டிற்கு அடிக்கடி வந்து போகும் என் குடும்ப உறவினர்கள்.

குரைக்கும் என் நாய் பொட்டை விரட்டி விட்டு வரும் அத்துரசூல், "ஹாஜியார் அஸ்ஸலாமு அலைக்கும்!... நோன்பெல்லாம் ஒழுங்காய்ப் போகுதா?" என்று கேட்டு அத்துரசூல் ஹாய் எளயம்பியைப் பார்த்து "ஹலோ ஹாய் சுகமா?" என்று கேட்டு விட்டு என் மனைவியைப் பார்க்க குசினிக்குள் போகிறான். அவளவு உரிமையும், உறவும் எங்கள் குடும்பத்தோடு அவனுக்கு இவனைக்கண்ட என் மனைவி,

"என்னடப்பா, எங்கிட பித்திறாக்காசக் கொண்டந்திரிக்கியா? எங்க கூடக் குறயக் கெடச்சிக்கா...? ஒனக்கென்ன போற இடமெல்லாம் பம்பலாக் கெடைக்கும்... நீதான் ஒலகத்த பெரட்டி, பாளிமெந்துக்கு கொண்டு போற சீவனாச்சே..." என்று கேட்டு, அத்துறசூலப் பகடி பண்ண, அதற்கு அவன்,

"ஓங்கா... இப்ப பித்ராவா தாராங்க...? எல்லாப் பணக்காரனும் அஞ்சி பத்துருவாக காச மாத்தி வெச்சிக்கிற்று பிச்ச குடுக்கானுகள்.. எல்லாரும் பேருக்குத்தான் பித்ராக் குடுக்கானுகள். இதச் செல்லயிம் வெக்கமாக்கிடக்கு. அல்லாஹ் பாத்திக்குத்தான் இரிக்கான். ஏழ எளியதுகள்ள கருமம் இந்தப் பணக்காரனுகள சும்மா உடுமா?" என்று அவன் மனசில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதையெல்லாம் கொட்டிக்கு வாறான்... இதைப் பார்த்துக்கு இருந்த ஹாய் ளளயம்பி,

"ஒன்ட வாயில சீனிபோடனும்" என்று அத்துல்றசூலின் கதைக்கு சப்போட் பண்ணிக் கொண்டிருக்கிறான். நோன்புக் களைப்பில் என் மகள் வந்து,

"வாப்பா...! பள்ளிக்குப் போறெல்லியா? நேரத்தோட பள்ளிக்கு போய். திக்றில்ல இரிங்க..." என்று கூறிக் கொண்டு,

"ஹாய்! போய் ரெண்டு தயிருச்சட்டி வாங்கிற்கு வா... நல்ல தயிராப் பாத்து வாங்கு..." என்று ஹாயிடம் காசைக் கொடுத்து விட்டு மகள் ஜூம்னாவைக் கூட்டிக் கொண்டு கிணற்றடிக்குப் போகிறா.

இன்று, நோன்பு மாதத்தின் இருபத்தேளாம் நாள். ஊரெல்லாம் மக்கள் கூட்டம் சதக்கா, பித்ராவுக்காக அலைமோதிக் கொண்டிருக்கிறது. பெருமைக்காக சிலர், வங்கிகளில் புதுக்காசிகளை மாற்றி எடுத்து கொண்டு, தங்கள் பெருமைக்கு சாயம் பூசிக் கொண்டிருக்கின்றனர். சிலர் வங்கிகளில் மேலதிகப் பற்றாக பணம் எடுத்துக் கொண்டு, ஆண்டவனை ஏமாற்றி ஸதக்கா, பித்ரா அளித்து பெருமை தேடிக் கொண்டிருக்கின்றனர். என் வீட்டு சுவர்க்கடிகாரம் பதினொரு மணியை காட்டிக் கொண்டிருக்கிறது. என் மனைவியும் மகளும் நோன்பு திறப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். வெளியில் வெயில் உக்கிரமாக எறித்துக் கொண்டிருக்கிறது. காற்றுக் கூட அனலாக வீசிக் கொண்டிருக்கின்றது. அப்போழுது ஹாய் ளளயம்பியும், அத்துல்றசூலும் சோடி போட்டுக் கொண்டு வருகின்றார்கள். இவர்களின் வருகையை என் நாய் பொட்டு, மகிழ்ச்சியாக வரவேற்று அனுகிக் குரைக்கிறது. இவர்கள் இருவரையும் கண்ட என் மனைவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ங்... இன்டைக்கு கடும் பம்பலாக்கும்" என்று சிரித்தபடி பகடி பண்ணுகிறாள். அவளின் கேள்வியை ஏற்று இப்பதான் நாங்க கணக்குப் பாக்கப் போறம்...ஏதோ ஒரு சேட்டும் சாறனும் வாங்க கிடச்சாப் போதும்.. நமக்கு காறு கப்பல் வாங்கிற ஆசதான் இல்லியே. அல்லாட ஆலத்தில நமக்கென்ன கொற" என்று கூறிக் கொண்டு தங்களுக்கு கிடைத்த ஸக்காத்து பித்தராக்களை எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

"மொகத்தில ரெண்டு பேருக்கு நல்ல சந்தோசமாக்கிடக்கு.... வாசிதான்" என் மனைவி கூற.

அது சரி என்னாளும் இந்த பீத்த சாறனையும் சேட்டையும் போட்டுக்குத் திரியலாமா? நாமளும் மனிசன்தானே.... அந்த நோன்புப் பெருநாளைக்கு இந்தியச் சாறன் ரெண்டும், நல்ல ஹைறை சேட்டு ரெண்டும் வாங்கனும் அப்பதான் ஒன்ட புரிசனும் மதிப்பாரு...."என்று ஹுய் எளம்பி கூற.

என்ற வாப்பா இதென்ன புதுக்கத....! நான் உங்களயெல்லாம் எப்பவும் மதிக்கிற சீவன் வாப்பா" என்று கூறி விட்டு என் மனைவியைப் பார்க்கிறேன்.

அதற்கு அவள் ஆமா போட்டுவிட்டு அத்து ரசூலைப் பார்க்கிறாள். அது மெய்தான்...... நீங்க மட்டும் எங்ளோட இப்புடி புளங்காட்டி எங்களுக்கு வேற ஆருஇருக்கா....." காண்றவன் எல்லாம் லூசி லூசி என்டு எங்கள ஏசக்கெள்ள சீதவி! நீ மட்டும்தான் எங்களக் கூட்டி கதிரையில வெச்சி, பேசிற கதைக்கிற.... தேயில சோறு தந்து ஆதரிக்கிற....."என்று அவன் கூறி சிரிக்கிறான். அப்பொழுது, மீண்டும என் நாய் குரைக்கிறது அங்கே ஒரு தாயும் மகனும் வருகிறார்கள் வந்தவர்கள்.

"வாப்பா நாங்க ஏறாவூரு..... இவன் என் பேரன் அஞ்சாம் வகுப்பு படிக்கான். இவன்ட உம்மா என்ற மகள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் பொறந்த நேரமே மவுத்தா பெயித்தா வாப்பா வேற கலியாணம் முடிச்சிற்று பெயித்தான். இந்த புள்ளய அவன் ஏறெடுத்தும் பாக்கிறெல்ல. நான் தான் இவனுக்கு எல்லாம் எனக்கும் வயசி பெயித்து பிச்ச எடுத்துத்தான் நாங்க வயித்த கழுவுற. இவன் சைக்கிள் கேட்டு என்ன கரச்சிப்படுத்திறான். இவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் குடுங்க வாப்பா' என்று தங்கள் தன்மைகளை சொல்லிப் பேசினாள்.

"என்ரம்மா.....! நான் கணக்கிப் பாத்து என்ர ஸகாத் ஸதக்காவ கொடுத்திற்றன். வேனுமெண்டா ஏதோ அஞ்சப் பத்த தாரன் எடுத்திக்கட்டு போ. வேற ஆரிட்டையும் போய் கேட்டுப்பாரு" என்று கூறி, பத்து ரூபாவை எடுத்து அந்தப் பையனிடத்து கொடுக்கிறேன். அப்பொழுது இந்தச் சந்தர்ப்பத்தைர் பார்த்துக் கொண்டிருந்த ஹாய் எளயம்பியும் அத்துரஸூலும் உடனே எழும்பி தாங்கள் இருவரும் வாங்கி வந்த சக்காத் பணத்தை எல்லாம் அப்படியே எடுத்துக்குப் போய் அந்தப் பையனிடம் கொடுத்து,

"இந்த காச எடுத்துக்குப்போய் நீ ஆசப்பட்ட மாதிரி சைக்கிள் வாங்கிக்க.... ஒன்ட பேரனுக்கு நல்ல சைக்கிளா வாங்கிக் குடுகா.... நாங்க ரெண்டு பேரும் ஓர்ர பழைய சைக்கின்தான். இந்த நோன்புப் பெருநாள்ள ஒன்ட பேரன் புதுச் சைக்கிள் வாங்கி ஓடட்டும்" என்று காசைக் கொடுத்து விட்டு வருகிறார்கள். என் வீடே கல்லாகி விட்டது. தாயும் பேரனும் காசை வாங்கிக் கொண்டு போகும் போது மனிதம் மலர்ந்து சிரிக்கிறது. நான் அவர்கள் போவதைப் பார்துக்கொண்டிருக்கிறேன், ஹாயும், அத்துறசூலும் மனிதனாகக் குந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்கள் வாழ்கிறார்கள்

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள தாழமுக்கத்தால், எங்கள் பகுதிக் கடல் சீற்றமடைந்து, மலை போன்ற அலைகளைத் தொடர்ந்து அள்ளி எறிந்த வண்ணமிருக்கிறது. கடல் கொந்தளித்துக் கொண்டிருப்பதால், மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கப் போக முடியாமல், தோணிகளில் ஏற்றிய வலைகளோடு சோகமே உருவாகி, வாடிகளில் காத்துக் கிடக்கின்றனர். என்று மில்லாதவாறு வங்கக்கடல் சீறிக் கொண்டிருப்பதைப் பார்த்து, இளஞ்சூரியன் வேகமாக மேலே ஏறிக் கொண்டிருக்கிறான். வாடைக் காற்று மெதுவாக வீசிக் கொண்டிருக்கிறது. அன்றாட வாழ்விற்கே திண்டாடிக் கொண்டிருக்கும் மீனவர்கள், தங்கள் தொழிலில் ஏற்பட்டிருக்கும் சோதனையைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, அச்சிர லூசி அப்துல் றசூல் சாறன் நிறைய ஆமை முட்டைகளை எடுத்துக் கொண்டு வருகிறான். அப்துல் றசூல் அரை லூசி என்றாலும் நல்ல மீனவன். ஒழுங்காக வலை இழுப்பது தொடக்கம் இழுத்தெடுத்த வலைகளை வெய்யிலில் காய வைத்து, மீண்டும் தோணியில் ஏற்றும் வரை அலுப்பில்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யும் தொழிலாளி. ஊரில் உறவுகள் இல்லாமல் தனிக்கட்டையாக வாழ்ந்து கொண்டிருக்கும் இவனுக்கு எங்கள் ஊர்தான் உறவும், சொந்தமும். கள்ளங்கபடம் இல்லாமல் எல்லோருடனும் குழந்தைபோல் உறவாடும் இவனோடு எல்லோரும் அன்போடு பழகுவார்கள். எடுத்து வந்த ஆமை முட்டைகளை வாடியில் குந்திக் கொண்டிருந்ந மீனவர்கள்களின் கைகளில் கொடுக்கிறான். வயது வந்த மீனவனொருவன் "ஆமமுட்ட கிரந்தி நோய்க்கும், மூச்சுக்கும் நல்ல மருந்து, அவிச்சிப் போட்டு சாப்பிட்டா நோயெல்லாம் படாபஞ்சாப் போயிரும். எனக்கு இன்னும் ரெண்டு முட்ட தாடா தம்பி" என்று கேட்கிறான். மீனவனின் ஆசையை நிறைவேற்றி விட்டு, வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரிக்கும் அப்துல் றசூல், எல்லோருக்கும் நல்ல நேசமுள்ள மனிதன், அப்பொழுது, வீறான் தண்டயல், இந்த அமுக்கத்திக்கெல்லாம் காரணம் ஒலுவில்ல கட்டின துறைமுகம்தான் என்று எல்லோரும் சொல்றாங்க. பெரிய கல்லையெல்லாம் கடலில போட்டு எல்லாத்தையும் நாசமத்துப் போட்டானுகள், கல்லப் போடப் போட, கடல்ல அமுக்கம் கூடி ஊரயிம் அழிச்சிப் போட்டு. இப்ப கரைக்கு மீன் கிளயளும் வராம ஒழிச்சிற்று. இதால எங்கிட மனிசரெல்லாம் எவ்வளவு கஷ்ரப் பர்றானுகள். எங்கட ஊர்ல மீன்பிடி இல்லாம ஏழ,எளியதுகள், கஞ்சிக்கும் வழியில்லாம தவிச்சுக் கெடக்குதுகள்" என்று வீறான் தண்டயல் சொல்லிக் கொண்டு வாடிக்குள் சோர்ந்து கிடக்கும் மீனவர்களைப் பார்த்து பெருமூச்சு விடுகிறார். ஆமமுட்டைகளைக் கொடுத்து விட்டு அமைதியாக நின்று கொண்டிருந்த அப்துல் றசூல்,வீறான் தண்டயலின் பேச்சில் அமைதி இழந்து "இந்த நாசமத்துப் போன நாய்கள்ள வேலயால, கடல் பொங்கி ஊருக்க வந்திற்று... இதில எங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடியச் சுத்தி இரிக்கிற தென்ன மரமெல்லாம் அரிச்சி, அரிச்சி உழுகிது. இனி வாற காலத்தில கடல் ஊருக்க வந்திரும்... இதால எங்கிட தொழிலுக்குத்தான் கஷ்ரம்... இப்படி இரிந்தா நாங்க எப்படி மீன் புடிக்கிற? எல்லாதயும் எங்கிட எம்பிகிற்ற சொல்லி, இவனுகளுக்கு நல்ல பாடம் படிப்பிக்கணும்"என்று கூறி விட்டு, கடற்கரை ஓரத்திற்கு போகிறான். கடல் சீறிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையின் சோதனைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஏழை மீனவர்கள், பசியின் வேதனைகளோடு, வாடியில் குந்திக் கொண்டிக்கின்றனர். சோர்ந்து குந்திக் கொண்டிருந்த ஆதம்வாவா, கடல் காற்றின் கூதலுக்கு மடியில் இருந்த வீடி ஒன்றை பற்ற வைத்து புகையை மூக்கால் விட்டு போராடுகின்றான். அவன் பக்கத்தில் குந்திக் கொண்டிருந்த அகமது "தம்பேய்! எனக்கும் ஒரு வீடி தாடா, கொடலுக்க ஒன்டும்மில்லாம வயித்த கொமட்டுது....... லாவு நானும் புள்ளயளுலும் வட்டரோடு பிளேன்டிய குடிச்சிக்கிட்டுதான் படுத்த.... இந்தக் கடல் இப்புடி கொதிச்சிக்குத்தான் கெடந்தா, நாம இனி புள்ள குட்டிகளோட சாகத்தான் வேணும்......"

என்று அகமது மனம் நொந்து பேசுவதைப் பார்த்து கடல் மலை போன்ற அலைகளை அள்ளி எறிந்து கொண்டிருக்கின்றது. கடற்கரை ஓரத்திற்கு போன அப்துல் ரசூல் மீண்டும் வாடிக்கு வருகிறான் அவன் முகத்தில் பயத்தின் பீதி முட்டி மோதுவதைப் பார்த்து என்ன பேயறஞ்சவன் மாதிரி வாராய்" என்று வீறான் தண்டயல் கேட்கிறான். அதற்கு அவன் கடலுக்குள்ள பெரிய கொழப்பம் நடக்கிறாப் போல இரிக்கு காக்கா. செரியா வாட ஓடுது..... தூரத்தில பெரிய பெரிய மீன்களெல்லமம் சண்ட புடிச்சிக்கு போகிதுகள்..... எனக்கு பயமா கிடக்கு காக்கா...... எங்க போன சொனாமி திரும்பியிம் வரப்போகிதோ தெரியல்ல... வாங்க காக்கா, எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்ட போவம்" என்று கூறி விட்டு அப்துல் றசூல் போகிறான். அவன் போவதைப் பார்த்து செலயிமான் தம்பேய் அவன் றசூல் செல்ற செரியா வந்தாலும் வரலாம்... அப்படித்தான் இந்தக் கடலும் வெட்டுக்கால் பட்டிக்கு கெடக்கு. எதுக்கும் நாம கொஞ்சம் தோணியை மேலே இழுத்து வெச்சிப் போட்டு, ஊட்ட போவம் வாங்க"என்று அகமது சொன்ன சொல்லைக் கேட்டு மீனவர்கள் எல்லோரும் எழுந்து போய்த் தோணியை மேலே இழுத்து வைத்து விட்டு வீடுகளுக்கு போகின்றனர். மனவேதனைகளோடு வீடு செல்லும் மீனவர்களின் துயர வாழ்வைக் கண்டு பொறுக்கமுடியாமல், கடற்கரை ஓரத்தில் நின்ற இளந் தென்னைகளில் இருந்த காகங்கள் கத்துகின்றன. கடல் மனித நடமாட்டம் இல்லாது வெறிச் சோடிக் கிடக்கிறது. சூரியன் எட்டு மணியைப் பிடித்து விட்ட இறுமாப்பில் மேலே போய்க் கொண்டிருக்கிறான.

வீறான் தண்டயலின் வீடு மகிழ்ச்சியில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கடற்கரையிலிருந்து வந்து கொண்டிருந்த தண்டயலை அவருடைய சின்ன மகள் வாப்பா! நம்முட மாமவும் அவருடைய குடும்பமும் பொத்துவிலிருந்து வந்கிருக்கா... கெதியா, வாங்க" என்று தண்டயலின் கையைப் பிடித்து இழுத்து வருகிறாள். தண்டயலின் மனைவி தன் தம்பியையும் குடும்பத்தையும் கண்ட சந்தோசத்தில் தலைகால் தெரியாமல் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கிறாள். பிள்ளைகள் மாமாவின் மக்களோடு சேர்ந்து வீட்டைப் பிரட்டிக் கொண்டிருக்கின்றனர். வந்து கொண்டிந்த தண்டயல், 'என்னடப்பா? இப்பதான் மச்சான் லாத்தாட நெனவு வந்தயோ?" என்று கேட்டுக் கொண்டு மச்சினனின் சின்ன மகனை வாரி எடுத்து கொஞ்சியபடி வீட்டுக்குள் போகிறார். போனவர் மனைவியிடம், 'என்ன தேயில சாமான குடுத்தியா?" என்று கேட்க அதற்கு மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவக இப்பதான் வந்து காலாறின. தேயிலைக்குச் சுடுதண்ணி போட்டிருக்கன், சாமான் என்னத்தையும் வாங்க இவன் அத்துறசூலையும் காணல்லியே..." என்று சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் அத்துறசூல் வந்து விட்டான். மச்சினனையும் அவன் குடும்பத்தையும் கண்டவன் சிரித்து மகிழ்ந்து கொண்டு மனைவியின் அழைப்பை ஏற்று, அடுப்படிக்கு போகிறான். அவன் நடையில் என்றுமில்லாத சுறுசுறுப்பும் சோக்கும் துளிர் விட்டுக் கொண்டிருக்கிறது.

மச்சினன் மம்மது ஒரு மிசின் ரைவர். ஐந்து வருடங்களுக்கு முன், உழவு வேலைக்காக பொத்துவிலுக்கு சென்றவன் எங்களுக்கு தெரியாமலேயே அங்கு, ஒரு பிள்ளையைக் கண்டு கலியாணத்தை முடித்து விட்டான். இன்று, சொல்லாமல் கொள்ளாமல் பிள்ளை குட்டிகளுடன் வந்து நிற்கும் அவனையும் அவன்ட பிள்ளைகளையும் கண்டு வீடே சிரித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறது. மனைவி என்றுமில்லாதவாறு, மகிழ தூரத்தில் படுத்துக் கிடந்த நாய் பொட்டு, தன்னையே மறந்து ஊளையிட்டுக் கொண்டிருக்கிறது. மச்சினனையும் குடும்பத்தையும் பார்த்த தண்டயல் "புள்ளேய்! பகல் சோத்துக்கு என்ன கறி ஆக்கப் போறாய்? இந்தக் கடலும் கை தராமப் பெயித்து... எதுக்கும் ஒரு கோழியப் புடிச்சி அறுக்க, நம்முட றகுமானியாத் தைக்கா லெப்பபட்ட அனுப்பு" என்று சொல்லி வாயெடுக்கல, "தம்பி வாற நேரம் ரெண்டு பார மீன்களை வாங்கி வந்திரிக்கான். நாலஞ்சி விரால் கருவாடும், கொஞ்ச மையறுக் கிழங்கும் கொண்டந்திரிக்கான். மீன நம்முட அத்து றசூல் அறுத்திக்கிட்டு இரிக்கான்" என்று சொல்லி விட்டு பகற் சோற்றுக்குரிய வேலைகளைச் செய்வதில் யந்திரம் போல் இயங்கிக் கொண்டிருக்கிறாள். தன் சகோதரியின் மகிழ்ச்சியையும் பூரிப்பையும் கண்டு "மச்சான் பொத்துவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்ல நல்லா மீன் படுகிது... நாலஞ்சி நாளா பாரமீன் கூடுதலாப் படுகிது. கொழும்பில இரிந்து மீன் வியாபாரிகள் வந்து லொரிகள்ள எல்லாத்தையும் வாங்கிட்டுப் போறானுகள். நேத்து ரெண்டு மூனு சூரப்பாடும் பட்டிக்கு... பொத்துவில் கடல் நல்ல அக்கிளுபுக்கிளியாக் கெடக்கு. உல்லைக்கு வந்த வெளிநாட்டு வெள்ளக் காரனுகளும் சேர்ந்து முஸ்பாத்திக்கு வலக்கால்ல வந்து வல இழுக்கானுகள்" என்று மச்சினன் மம்மது கூறியதைக் கேட்டு தண்டயல் வீறான்,

"என்ன செய்யலாம் நம்முட நாசமத்துப் போன கடல்தான் ஹயரா மண்டிப் பெயித்து. கடல பாக்கிறத்திக்கே பயமாக் கிடக்கு. அவளவு நீர் போகிது...எல்லோரும் பயத்தால தோணிகளயெல்லாம் கரைக்கு மேலே தள்ளி வெச்சிற்றம்... எப்படி ஒண்ட பாடெல்லாம் நல்லமா? ஏதோ, நீ வந்தது, எங்களுக்குப் பெரிய கொற நீங்கினாப் போல இரிக்கி... ஓங்கு லாத்தாக்கு ஒவ்வொரு நாளும் ஒண்ட கவலதான். இன்டைக்குத்தான் ஓங்கு லாத்தாட மொகத்துல சிரிப்பு வழியிது.' என்று கூறிவிட்டு மீண்டும் மச்சினனின் மகனை தூக்கி வெச்சி கொஞ்சிக் கொண்டிருக்கிறார்.

எனக்கும் பெரிய கவலதான் மச்சான்... லாத்தாவையும் ஓங்களயும் நெனச்சி நெனச்சி நான் கொளராத நாளே இல்ல... பயத்தாலதான் நான் வரல்ல..."

என்று மம்மது கூறி விட்டு தன் சகோதரியைப் பார்ப்பதற்கு குசினிக்குள் போகிறான்.

அங்கே, அவன் மனைவி சந்தோசமாக அவன் சகோதரியோடு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியோடு வருவதைக் கண்டு, வாசலில் கொள்ளி கொத்திக் கொண்டிருந்த அத்துல்றசூல் தன்னையே மறந்து சிரிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளி கொத்திக் கொண்டிருந்த அத்துல் றகூலையும் கூட்டிக் கொண்டு மம்மது வெளியில் போவதைப் பார்த்து, நாய் பொட்டு ஊளையிடுகிறது.

வானம் மப்பும் மந்தாரமாக இருக்கிறது. றகுமானியா தைக்கா மோதின் ளுஹர் தொழுகைக்கான அதானை ராகமெடுத்து விடுகின்றார்.

புறவளவுக்குள் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த குயிலொன்று தூக்கம் தெளிந்து கூவிக் கொண்டு பறக்கிறது. பகற் சாப்பாட்டுக்குரிய வேலைகளை மனைவியும், மம்மதின் மனைவியும் சட்டுப் பண்ணி செய்து கொண்டிருக்கின்றனர்.

அப்பொழுது, என் பக்கத்து வீட்டில் வசிக்கும் பொய்மூட்ட செய்யது வருகிறாள். செய்யதைக் கண்ட நாய் பொட்டு மெதுவாக அணுகி வாலை ஆட்டிக் கொண்டு புறவளவுக்குள் போகிறது. கஷ்ஸா... கஸ்ஸா...! என்ன புள்ள செய்யிறாய்? தம்பிர பொஞ்சாதி நல்லா இரிக்காவா...? மம்மதக் கண்டு எவளவு காலமாப் போச்சு..."என்று கேட்டபடி செய்யது வருகிறாள்.

"வா லாத்தா, இன்னா இரிக்கா. வந்து இரி லாத்தா" என்று செய்யது இருப்பதற்கு பாயை எடுத்து விரித்து போடும் போது, வாசலில் நிற்கும் மாமரத்திலிருந்து காகங்கள் கத்திக் கொண்டிருக்கின்றன.

செய்யதின் வரவினால் வீடு கலகலப்பாகி பூரிப்பில் தத்தளித்து கொண்டிருப்பதைப் பார்த்து மம்மதின் மனைவி கொடுப்பால் சிரிக்கிறாள்.

மச்சினன் மம்மது,மனைவி மக்களோடு வீட்டிற்கு வந்த செய்தி கேட்டு அல்லயற்காரர்களோடு, உறவினர்களும் வந்து கொண்டே இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் காலை சிரிக்கிறது.

மச்சினன் மம்மது வந்து நாலு நாட்களாகி விட்டன. இன்று அவன் மனைவி மக்களோடு பொத்துவிலுக்குப் போவதற்கு ஆயத்தமாகி விட்டான்.

தம்பியும் அவன் குடும்பமும் விட்டுப் பிரிவதைப் பொறுக்க முடியாமல், மனைவி வேதனையில் வெந்து கொண்டிருப்பதைப் பார்த்து மம்மது கண்களைக் கசக்கி நிற்கிறான்.

"இன்னும் ரெண்டு நாளைக்கு நிண்டு போகலாமே" என்று அவளும் கண்களைக் கசக்குவதைக் கண்டு அவன்ட வெள்ளாம வேல கூடக் கொறயக் கிடக்காம், போயிற்று அடுத்த கெழம வரட்டுமே" என்று தம்பியையும் லாத்தாவையும் சமாதானப்படுத்தி, தன் பக்கத்தில் நிற்கும் அவன் மகனை தூ க்கிக் கொஞ்சுகிறான்.

எங்களையெல்லாம் மறந்திராம அடிக்கடி ஊட்ட வந்து போ... உன்னக் கண்டா மவுத்தான உம்மா வாப்பாவ கண்ட மாதிரி இரிக்கு..." என்று மனைவி கூறி முடிப்பதற்குள் எனக்கும் ஒன்னக் கண்டா அந்த மாரித்தான் இரிக்கி" என்று கூறிய மம்மது தனது சட்டைப் பைக்குள் இருந்து ஐம்பதுனாயிரம் ரூபாவை எடுத்து தன் சகோதரியின் கையில் கொடுக்கிறான்.

ராத்தா ஒனக்கு நான் எதுவும் செய்யாம கலியாணம் முடிச்சிற்றன் எனக்கு மனம் கேக்கல்ல நீ, இந்த காச எடுத்து, ஒன்ட ஊட்டத் திருத்தி, புள்ளட கலியாணத்த முடி ராத்தா... அப்பதான் உம்மாக்கு நான் செய்ய வேண்டிய கடனும் தீரும்..." என்று, கூறி மம்மதும் அவன் மனைவி மக்களும் போகிறார்கள். அவர்கள் போவதைப் பார்த்து அத்துல்றசூலும் கண்களைக் கசக்கிக் கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கக்கக்கனிய

பல நாட்களாக தொடர்ந்து விடாது பெய்து கொண்டிருந்த அடை மழையால், சீறிச் சினந்து ஆட்பரித்துக் கொண்டிருந்த வங்காள விரிகுடாக் கடல், சீற்றம் தணிந்து குளம் போல் கிடக்கிறது. வானம் கலக்கமின்றி, வெள்ளை வெளேரென்று கிடப்பதினால், பூண்டிருந்த தவத்தை கலைத்து விட்டு, சூரியன் முகம்காட்டிச் சிரிக்கிறான். கடல் நீரோட்டமின்றி அமைதியாக கிடப்பதனால், எங்கள் மீனவர்கள் மத்தியில் மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. ஓரிரு மாதங்களாக தடைப்பட்டிருந்த மீன்பிடி, இப்பொழுது எங்கள் கடலில் ஆரம்பமாகி, களைகட்டிக்கிடக்கிறது.

தென்கிழக்குப் பிரதேசத்தில், மீன்பிடித் தொழிலுக்கு எங்களூர்தான் தலைமை வகித்துக் கொண்டிருக்கிறது. சுமார், இருபதிற்கு மேற்பட்ட கரைவலைத் தோணில்களோடு, முப்பதிற்கு மேற்பட்ட கைத்தோணில்களும் எங்கள் மீனவர்களுக்கு சொந்தமாக இருக்கின்றன. ஒவ்வொரு கரைவலைத் தோணில்களுக்கும், கிட்டத்தட்ட ஐம்பது பேர் அங்கத்தவர்களாக இருப்பார்கள். இவர்களை தத்திக்காரர்கள் என்று, எங்கள் மக்கள் அழைப்பார்கள். ஒவ்வொரு தத்திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர், செயலாளர், கணக்குப்பிள்ளை, தண்டயல், கரைத்தண்டயல்கள் என பல பேர் இருப்பார்கள். கரைவலைத் தோணில்கள் ஒவ்வொன்றிற்கும் கடற்கரையோரைத்தில் வாடிகள் இருக்கும். இவ்வாடிகளில் தோணில்களுக்குத் தேவையான வலைகள், கயிறுகள், நங்கூரம், சவள்கள், கருவாடு போடுவதற்குரிய பீப்பாக்கள், வாளிகள் என்பவைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். மீனவர்களின் கூட்டாங்களும் இங்குதான் நடைபெறும்.

வாடியில் மீனவர்கள் மகிழ்ச்சியோடு குந்திக் கொண்டிருக்கின்றனர். சூரியன் களைத்துப் போய் மேற்கே நோக்கிச்சாய்ந்து கொண்டிருக்கிறான். "தம்பேய்! வலை எல்லாத்தையும் நல்லா பாடுபாத்து ஏத்துங்க, கல்லு மெதப்பையெல்லாம் ஒழுங்கா வெச்சிருங்க.."

கரைத்தண்டயல் கறுத்தார்ர கலந்தன் நளைக்கு விடியச் சாமத்தில் மீன்பிடிக்கச் செல்லும் தோணியில் வலைகளை ஏற்றிக் கொண்டிருக்கும் சில மீனவர்களுக்கு, விளக்கமளித்து விட்டு, கடற்கரை மணலில் காய்ந்து கிடக்கும் மடியை, சீனிமுத்திர செலயிமானோடு சேர்ந்து மடிக்கிறார்.

கடற்காற்று, மந்தமாக வீசிக் கொண்டிருக்கிறது.

காலையில் மீன்களைப் பிடித்து விட்டு காயப்போட்ட கயிற்று வலைகளையும், சள்ளையையும் தோணியில் ஏற்றி விட்டு தத்திக்காறர்கள் வடிவன் தோணியில் வாடிக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

"தம்பேய் செஞ்ச வேலையோட அந்த தட்டிகளையும் எடுத்து, தோணிய மூடிப்போட்டு வாங்க... பொறகு மழகிள பேஞ்சாலும் நமக்குத்தான் கரைச்சல்" கரைத்தண்டயலின் ஆணைக்கு அடிபணிந்து எலிமையதின்ர காதரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொண்டுகமோணி ஆதமும் தட்டிகளை எடுத்து தோணியை மூடிக் கொண்டிருக்கின்றனர்.

கடல் குளம் போல் கிடக்கிறது. சூரியன் முற்றாக மறைந்து விட்டான். வானில் வெள்ளிகள். மல்லிகைப் பூப்பந்தல் போல் நிறைந்து கிடக்கின்றன. வடிவன் தோணில் வாடிக்குள், தத்திக்காறர்கள் குந்திக் கொண்டிருக்கின்றனர்.

அப்பொழுது, காலையில் பிடித்து விற்ற மீன்களின் காசை, ஒழுங்காக பங்கு போடுவதில் தலைவரும், கணக்குப்பிள்ளையும் யந்திரம் போல் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். கடலைத் தடவி வரும் தென்றல், வாடியில் தொங்கிக் கொண்டிருக்கும் கடல்லாம்புகளோடு சேட்டை விட்டுக்கொண்டிருக்கிறது.

கணக்குப்பிள்ளை தோணில் செலவுகளுக்கு தேவையான பிடிகாசை, இருப்பாக வைத்து விட்டு, தத்திக்காறர்களுக்கு கொடுக்க வேண்டிய பங்குக்காசுகளை தலைவரின் கையில் கொடுத்து விட்டு, முகமலர்ந்து இருக்கிறார். தத்திக்காறர்கள் மத்தியில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது. நேரம் மூச்சுப் பிடித்து உலகை விழுங்க, முன்னிருட்டு, முக்காடு போட்டுக் கொண்டிருக்கிறது.

"தம்பிமாரே! இன்டைக்கு நீங்க வந்தாப் போல, நாளைக்கு புலுபுனுத்து விடிய வந்துருங்க இப்ப, செவகு நேரத்திலதான் மீனெல்லாம் கரைக்கு வருகுதுகள். நாமலும் மீன் கரையில பலுமார்ர நேரத்தில தோணியைத்தள்ளினாத்தான், நமக்கும் கக்கக்கனியக் காசு கையில கிடைக்கும். பொழுதேறினா மீனெல்லாம் ஆழிக்கடலுக்க போயிருங்கள். இண்டையில இருந்து, தோணில் தள்ள பிந்தி வாறாக்களுக்கு அரப்பங்குதான் குடுக்கிற. இத நல்லா ஒணந்து, எல்லாரும் செவகில வந்துருங்க. புகைக்குள்ள கண்டுகுட்டிய வீசிறாப்போல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமலும் தோணியத்தள்ளி கக்கக்கனிய மீனப்புடிச்சிகனும். அப்பதான், வாறஅச்சுப் பெருநாளைக்கு, நாமலும் நம்முட புள்ளகுட்டிகளுக்கு என்னத்தையும் அவகிட மனசு நெறய வாங்கிக் குடுக்கலாம்…”

தலைவர், தத்திக்காறர்களுக்கு அறிவுரைகளை வழங்கி விட்டு, பங்குக்காசுகளை பகிர்ந்து கொண்டிருந்தார்.

தலைவரிடமிருந்து பங்குக்காசுகளை வாங்கிக் கொண்டு போகும்தத்திக்காறர்களிடமிருந்து, காலையில் கொடுத்த கடன்களை அறவிடுவதில், கடற்கரையில் தேனீர் கடை வைத்திருக்கும் அலவாங்கு மிர்சா. விசையேற்றி விட்ட பம்பரம் போல் சுழன்று கொண்டிருக்கிறான்.

“தம்பி நீ, ஆர்ர பங்கிக் காசிக்கு வந்த?”

“எங்கு வாப்பாட பங்கிக்கு”

“இந்த பொடியன் ஆர்ர மகன்டம்பி?”

“போன வரிசம் ஆலிமுட வட்டைக்க வெச்சி சுடுபட்டு மௌத்தான நம்முட அவக்கண்ட மகன், காக்கா”

“ச்சா!, அவக்கன் என்ன கெட்டிக்காறன். அவன் தோணிலுக்கு தண்டிழுக்க வந்தா, சும்மா மிசின் மாதிருத்தான் இழுப்பான். ஹறவாப் போவானுகள் வட்டைக்க பண்டிக்காவலுக்குப் போய், பறனில குந்திக்கிருந்தவனச் சுட்டுப்போட்டுப் பெய்த்தானுகளே.! அவனென்ன இந்த ஒலகத்துல் முஸ்லீமா பொறந்த குத்தமா? இல்ல, ஆரயிம் போல அவன் குந்தின எடத்திலயெல்லாம் அரசியலா பேசிக்கு திரிஞ்ச? பாவம், வாய்பேசாத அப்பாவி. அவனப் போய் அந்த கண்கெட்டுப் போவானுகள் ஆமிக்காறன்ட ஔவாளியெண்டு சொல்லி, சுட்டுப் போட்டுப் பெய்த்தானுகளே. இந்த சாதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொவசம் புடிச்ச சண்டாளனெல்லரையும் அல்லாஹ் சும்மா உடமாட்டான். நீ, படிக்கிறயாம்பி?"

"நாலாமாண்டு படிச்ச.. இப்ப நான் பள்ளிக் கொடத்துக்கு போறல்ல.."

"யா அல்லா, இதுக்கெல்லாம் இந்த தொவசம் புடிச்ச நாய்கள், என்ன பதில் சொல்லப் போறானுகளோ..? இந்தப்பாலாப் பரதேசிகளையெல்லாம் இந்த நெலைக்கு ஆக்கினவன் எவனா இருந்தாலும் பத்தி எரிஞ்சிபோவான்."

மானிடம் தலை நிமிர்கிறது.

"சின்னப்புள்ளெண்டாலும், வலக்கால்ல நிண்டு நல்லா இழுப்பான். அவண்ட வாப்பா அவக்கண்ட சவிய அப்படியே வெச்சிருக்கான். அவக்கண்ட குடும்பத்திக்கு, இப்ப இவன்தான் காக்கா, பெரிய தொண.." என்று கூற, தண்டயல்,

"ம்..., இதெல்லாம் வல இழுக்கிற வயசா? அவன் அவக்கன் மட்டும் உசிரோட இருந்தா, இவன வல இழுக்க உட்டிருப்பானா? பாவம்! அண்டைக்கண்டைக்கு ஒழுங்கா ஒழச்சிக்கு, ஒரு தளம்பலுமில்லாம, அவன்ட குடும்பத்திர கனாயத்தப் போக்கிற்றிருந்தான். அவன் இல்லாம அவன்ட குடும்பத்திர நிலய பாத்தியா? ங். இன்னா, இந்தக்காச ஆரிட்டையும் குடுத்திராம, அப்படியே கொண்டு போய் உம்மாட கையில குடு.." என்று அவக்கனின் மகன், பங்குக்காசை தலைவரிடமிருந்து வாங்கிக் கொண்டு போய், அவன் பக்கத்து வீட்டு சாவலுக்குப் பக்கத்தில் குந்திக் கொண்டிருக்கிறான்.

கடலைத் தடவி வரும் இதமான குளிர் காற்று, வாடியில் தொங்கிக் கொண்டிருக்கும் கடல் லாம்புகளோடு, ஓயாமல் சேட்டை செய்து செய்து கொண்டிருக்கிறது. வாடிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலுள்ள மையத்துப் புட்டியில் அடர்ந்து நிற்கும் ஆலமரத்திலிருந்து, ஆந்தைகள் இரண்டு போட்டி போட்டுக் கொண்டு கத்திக் கொண்டிருக்கின்றன. பங்குக்காசுகளை வாங்கிய தத்திக்காறர்கள் எல்லோரும், ஒவ்வொருவராய் போய்க் கொண்டிருக்கின்றனர்.

“தம்பி சாவல்! இவன் அவக்கன்ட மகனயிம் கையோட கூட்டிக் கொண்டு போய், ஊட்ட உட்று. பாவம்! சின்னப்புள்ள மையத்து புட்டியால போகக்குள பயந்திருவான்” தலைவரின் வேண்டுதலை சிரமேற்று சாவல், அவக்கனின் மகனைக் கையில் பிடித்தபடி வீட்டிற்கு போகிறான். எண்ணற்ற வாழ்க்கைச் சுமைகளை எல்லாம் தன் சின்னத்தோள்களில் சுமந்து செல்லும் அவக்கனின் மகனைப் பார்த்து, முன்னிரவு வேதனையை விழுங்கி பெருமூச்சு விடுகிறது. எல்லா வேலைகளையும் திருப்தியாக முடித்த மனநிறைவோடு தலைவர், தன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீட்டுக்குப் போகிறார். கடற்காற்றோடு போராடிக் கொண்டிருக்கும் கடல் லாம்புகள் இரண்டோடு மட்டும், வாடியின் காவற்காரன் பொருக்கண்ட செய்யது, தனிமையில் குந்திக் கொண்டிருக்கிறான். அமைதியின் ஆளுமையில் சிறைப் பிடிக்கப்பட்ட வடிவன் தோணில்வாடி, செய்யதின் துணையோடு இருக்கிறது.

இரவொலிகளைச் சகிக்க முடியாமல், கடல் தன் அலைகளால் கரையில் அடித்துக் கொண்டே கிடக்கிறது. ரகுமானியா தைக்கா மோதின் இஷாத் தொழுகைக்கான பாங்கை, ராகமெடுத்து விடுகின்றார்.வறுமைக் கோட்டின் விளிம்பில் கிடந்து தவித்துக் கொண்டிருக்கும் அவக்கனின் ஓலைக் குடில், குப்பி விளக்கின் துணையோடு சோர்ந்து கிடக்கிறது. அவக்கனின் மனைவி, கடற்கரைக்கு வலையேற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன மகனை எதிர்பார்த்து, வாசற் கடவலடியில் காத்து நிற்கிறாள். அவள் பக்கத்தில் துணையாக அவளுடைய நாய் மட்டும் நிற்கிறது. இளம் வயதிலேயே கணவனை பயங்கரவாதிகளுக்கு பறிகொடுத்து, விதவையாகிப்போன அவக்கனின் மனைவிக்கு வயது முப்பதும் இருக்காது. மூன்று மாதங்களுக்கு முன் தன் இத்தா கடமையை முடித்து வெளி வந்திருக்கும் அவளுக்கு, மூன்று பிள்ளைகள். இவர்களில் மூத்தவளும், கடைசியும் பெண்கள். எட்டு வயது நிரம்பிய இரண்டாவது பையன்தான் இன்று, கடற்கரைக்கு போய் வருபவன். கண் நிறைந்த கணவனை இரக்கமற்ற இனத்துவேசி ஒருவனின் துப்பாக்கிச் சூட்டிற்கு இரை கொடுத்து ஏங்கும் அவளுக்கு, அவளின் மகன் மட்டும்தான் இன்று சிறு துணை. அரசாங்கம் மனமிரங்கிக் கொடுத்த காணித் துண்டொன்றில், அவளின் கணவனால் கட்டப்பட்ட, வானம் தெரியும் ஓலைக் குடிசைக்கு கிடுகு கட்டுவதற்கு கூட வசதியற்று வாழும் அவள் குடும்ப நெருப்பை, யாரால் தான் அணை னைக்க முடியும்? அப்பொழுது, அவள் மகன், பக்கத்து வீட்டு சாவலோடு வருவதைக் கண்டு, கடவலடியில் படுத்துக் கிடந்த நாய், வாலை குலைத்துக் கொண்டு, அவனை நோக்கி ஓடகிறது.

“உம்மா”

“வந்திற்ரியா மன? என்ன பங்குக்காசி தந்தாங்களா?”

தாய்மை தவிக்கிறது.

“எனக்கும் முழுப்பங்கு தான் தந்தாங்கம்மா”

மகிழ்ச்சியில், இரவும் சிரிக்கிறது.

“காசத்தா மன.. ஓல வெக்க அரிசியில்லாம கிடக்கு நான் போய் நம்முட கேத்தல்ல கடையில அரிசி வாங்கிற்ரு வாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உள்ளுக்குப் போய் இரி. தங்கச்சி பசியால துடிச்சிக்கிருக்கா, நீ அவவோடப் போய் விளயாடு. புள்ளேய்! தம்பி வாறான். நீ, கொச்சிக்கா வெங்காயத்த கந்தப்பாத்து வெச்சிப் போட்டு,தேங்காய திரிவி வைகா....! வழுதிலங்காய் வாங்கிட்டு வாறன், சுண்டலாம்"

அவன் கொண்டு வந்த காசை வாங்கிக் கொண்டு, அவக்கனின் மனைவி, ஓட்டமும் நடையுமாக கடைக்குப் போகிறாள்.அவளின் பின்னால் அவளின் நாய் போய்க் கொண்டிருக்கிறது. இருளோடு போராடிப் போகும் அவள் வாழ்வின் இருள், எப்போது பிரியப் போகிறதோ? இளஞ்சூரியன் விடியச்சாமத்தை விரட்டியடித்த வெற்றிக் களிப்பில், அடிவானத்தில் கும்மாளமிட்டுக் கொண்டிருக்கிறான். கடற்கரை எங்கும் எங்களூர் மக்களால் நிரம்பிக் கிடக்கிறது. விடியச்சாமத்திலேயே கடலுக்குள் தள்ளப்பட்ட சில தோணிகள், மீன்களை எதிர்பார்த்து நங்கூரமிட்டு அங்கேயே கிடக்கின்றன. சில தோணிகள் கடலுக்குள் போகவில்லை.

மடல் விரித்து மலர்ந்து நிற்கும் தாழம்பூக்களைத் தடவி வரும் இதமான காற்று, மணத்தோடு வீசிக் கொண்டிருக்கிறது. வடிவன் தோணில், ஏற்றிய வலைகளோடு கடலுக்குள் செல்ல ஆயத்தமாக நிற்கிறது. அதன் பக்கத்தில் தத்திக்காரர்களோடு சேர்ந்து அவக்கனின் மகனும் மணலில் குந்திக் கொண்டிருக்கிறான். கடல் எவ்வித கலக்கமுமின்றி தெப்பக் குளம் போல் கிடக்கிறது. வடிவன் தோணில் கரைத் தண்டல் ஒக்காசிர செலயிமான்,வலது கையால் சூரியனை மறைத்துக் கொண்டு,கடலில் மீன்கள் கொதித்து வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஏழைகளுக்கு என்றும் உதவுவேன் என கடலலைகள் கரையிலடித்து, சதா சத்தியம் செய்து கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பேய்! அன்னா கறுப்படிக்குது பாருங்கடா....! கீரிக் கிளதான் கொதிச்சி வருகிது. மேலால புள்ளுக்கிளயளும் அடிச்சி வருகிது... ங், தோணிலத் தள்ளுங்கடா"

மறுகணம், அம்பா ஒலிகள் வானைப் பிளக்க வடிவன் தோணில் கடலுக்குள் பாய்ந்து கொண்டிருக்கிறது. வடிவன் தோணிலைத் தொடர்ந்து மீன்களை கரையில் எதிர்பார்த்துக் கிடந்த எல்லாத் தோணில்களும் கடலில் இறங்கிக் கொண்டிருக்கின்றன.

"தம்பேய்! வாடிக்க கெடக்குற மூட்டான் கயிறயெல்லாத்தயிம் எடுத்துக்கந்து வெளியில போடுங்க... வாற மீன்கெள பெரிசாத்தான் கிடக்கு..... நேத்து வந்த கெளயப் பாக்க இன்னா வாற கெள, பெரிய எலப்பா வருகிது.... எதுக்கும் நம்முட மடிதாங்கியயிம் எடுத்துக்கந்து போடுங்க..."

கரைத்தண்டயல் ஒக்காசிர செலயிமான் கடலில் கொதித்து வரும் மீன்களின் இலைப்பை பார்த்து பார்த்து கற்பனையில் இன்பங்கண்டு, தத்திக்காரர்களை உச்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறான். மீன் கூட்டங்களைக் கண்ட மீனவர்கள் மத்தியில் இன்பம், காட்டாறு போல் ஓடிக் கொண்டிருக்கிறது. அம்பாவொலிகள் வானைப் பிளக்கின்றன. கடலில் மீன்களை வைத்து வளைந்து கொண்டு வந்து, வடிவன் தோணில், வலைக்கால்களை தத்திக்காரர்களிடம் கொடுத்து விட்டுப் போய், மடியடியில் நிற்கிறது. தோணியில் தண்டுக்குப் போன தாயத்தினிர அகமதும், பனையாண்ட வீறானும் வலைக்கால்களில் இறங்கி, வளைந்து வைத்த மீன்கள் வெளியில் போகாமல் வலைக்கால்களைப் பிடித்து ஆட்டியும், கைகளைத் தண்ணீரில் அடித்துக் கொண்டும் கடலில் மிதக்கின்றனர். வலைகளால் வளைந்து கிடக்கும் மீன்களைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்பில், தண்டயல், தன் தலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியிருந்த சால்வையை அவிழ்த்து, வலைகளை விரைவாக இழுக்கும் படி தத்திக்காரர்களுக்கு சைகை காட்டிய வண்ணம் இருக்கிறார்.

"தம்பேய்! வலையைக் கொஞ்சம் உசாராய்ப் பிடுங்கடப்பா ..... அன்னா.... தண்டயல் சால்வயக் காட்டி மாயிறான்டான். ஓடிலேய! ஓவல... ஏலேலா.... ஏலமமா....உடாம புடிங்க... அன்னா தண்டயல் சள்ளையிம் தள்ளிற்றான்... ம்... ஏலேலம்... ஓவலம..."

கரைத்தண்டயல் தத்திக்காரர்களை உசார்படுத்திக் கொண்டிருக்கிறார். அவரின் அவசரத்திற்கு ஏற்றாப் போல், தத்திக்காரர்கள் அம்பச் சப்த்தங்களை கூட்டிக் கொண்டிருக்கின்றனர். அங்கே, கொடிய இனத்துவேசத்தின் கோரப் பசிக்கு அன்புத தந்தையை இரை கொடுத்து விட்ட, அவக்கனின் மகன் வலை இழுக்கிறான். வானம்பாடி போல் இன்பச் சிறகடித்துப் பறந்து திரிய வேண்டிய இளமைப் பருவத்தை,வறுமையின் காங்கையில் பொசுக்கி, குடும்ப வாழ்க்கைச் சுமைகளையெல்லாம் தன் சின்னத் தோள்களில் சுமந்து தவிக்கும் அவன் குடும்பத்திற்காக கடற்கரை மணலில், கால்களைப் புதைத்துப் போராடிக் கொண்டிருக்கிறான். அவனுடைய ஒவ்வொரு பாதச் சுவடுகளுக்கிடையிலும், இரக்கமற்ற இனத்துவேசம் மிதிபட்டு, அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாவம்! கல்வி கற்க வேண்டிய இளமையிலேயே கல்வியை இழந்து, வாழ்க்கைப் போரில் போராடிக் கொண்டிருக்கும், இச்சின்னப் போராளிக்குப் இப்பரந்த உலகம் என்ன செய்யப் பொகிறதோ?

"மண்ண ஒதச்சி மாஞ்சி இழுடா....சின்னப் பொடியா சேந்து இழுடா....கடலப் பார்ரா கறுப்படிக்குது...!புள்ளப் பார்ரா அள்ளிப் போகுது..., ஏலேலோ.. ஓவேலோ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்திக்காரர்களின் அம்பாச் சப்தம், வானைப் பிளக்கிறது. அடிவானத்தில் துடித்துக் கொண்டிருந்த சூரியன், மேலெழுந்து வானத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறான். அளவிடமுடியா ஆளுமையைத் தாங்கிய கடல்,பொருமையோடு அமைதியாகக் கிடக்கிறது. அதன் நேசம், யாருக்குத் தான் உண்டு?

## மண் வளச் சொற்களும் - விளக்கமும்

| | | |
|---|---|---|
| செவகு | - | சுபஹு (விடியச்சாம நேரம்) |
| கக்கக்கனிய | - | கை நிறைய |
| தொவசம் | - | துவேசம் |
| சவி | - | பலம் |
| கானாயத்து | - | வாழ்க்கைச் செலவுகள் |
| மையத்துப்புட்டி | - | மயானம் |
| ஒல | - | உலை சமைக்கும் பாத்திரம் |
| சேட்டை | - | பகடி |
| புலுபுலுத்து | - | இருள் பிரிவதற்கு முன் |
| ஒணந்து | - | சிந்தித்து |
| அச்சுப் பெருநாள் | - | ஹஜ்ஜுப் பெருநாள் |
| தண்டிழுக்க | - | தோணியில் சவள் இழுப்பதற்கு |
| வட்டை | - | வயல் |
| படிக்கிறயா? | - | பாடசாலைக்குப் போறதா? |
| வல | - | வலை |
| தளம்பல் | - | குளைகள் |
| கிள | - | பாட்டம் தொகுதி |
| எலப்பு | - | மீன் கூட்டம் |
| மாயிறான் | - | அவதிப்படுகிறான் |
| மாஞ்சி | - | உசாராய் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பிரசவம்

எங்களூர் கடற்கரை மீனவர்களால் நிறைந்து வழிந்து கொண்டிருக்கிறது. பல மாதங்களாக மீன்பிடி இல்லாமல் காய்ந்து கிடந்த கடலில், தோணிகள் நிறைந்து கிடக்கின்றன.

கடற்கரையெங்கும் மக்கள் நிறைந்து, மகிழ்ச்சியில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கடற்கரையோரங்களில் செழித்து நிற்கும் தாழை மரங்களின் கீழே பெண்கள் கூட நிற்கின்றனர்.

பூத்து நிற்கும் தாழம் பூக்களின் மணம், கடற்கரை காற்றில் கலந்து வீசிக் கொண்டிருக்கிறது.

வடிவன் தோணில் வாச்சர் அத்துறசூல், வாடிக்குள் இருந்த பெரிய மீன்கூடைகளை, எடுத்துக் கொண்டு, மீன்மடி, கரை ஏறி நிற்கும் தோணியடிக்கு ஓட்டமும் நடையுமாக போய்க் கொண்டிருக்கிறான். அவன் அவசரமாகப் போவதைப் பார்த்து, கரைத்தாண்டயல், அத்துறசூல்! என்ன பம்பலா?" என்று கேட்க,

"நல்ல பாடுதான் தண்டயல்...! எல்லாம் முண்டக்கண்ணன் தான்" என்று அத்துறசூல் சொல்லி விட்டு ஓட்டமும் நடையுமாப் போகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் முழக்க தோணிகள் மீன்களை எதிர்பார்த்து கிடக்கின்றன. வயிரன் தோணி வாடிக்குள் சிலர் குந்திக் கொண்டிருக்கின்றனர்.

அப்பொழுது, அங்கு நாயும் புலியும் விளையாடிக் கொண்டிருந்த ஆடுகால் வீறான், தம்பே!...சாடிக்க கெடந்த உப்புப் போட்ட கீரிமீனையெல்லாம் எடுத்துக் கொண்டு போய், வெயில காயப்போடுங்கடா... நேரத்தோட காயப்போட்டாத்தான், பின்னேரம் சுப்பம் கட்டலாம்..." என்று வீறான் தண்டயல் கூறிவிட்டு கடலை நோக்கிக் கொண்டிருக்கிறார். கடல் பெரிய அலையின்றி அமைதியாக கிடக்கிறது.

நேத்து லாவு, ஊருக்குள்ள எஸ்ரிஎப் வந்து கடும் செக்கிங்காம். எல்லாரும் பயந்து போய், ஊட்ட இரிந்த கத்தி, கொடாலிகளையெல்லாம் கொண்டு போய் கிணத்திலையும், ஆத்திலையும் போட்டுப் போட்டு வந்திற்ராகளாம். ஊரெல்லாம் பயத்தால் ததிமிது கொள்ளுது. எவனோ ஒரு நாய் செஞ்ச வெலயால,எல்லாருக்கும் கஸ்ரமா போச்சி...இந்த நாயெல்லாம் இஸ்லாத்த காசிக்கு வித்துப்போட்டானுகள்" என்று நாயும் புலியும் விளையாடிக்கொண்டிருந்த சாளவாயன்ட சமது சொல்ல, பக்கத்திய கொறவிடி கொளந்த வாரிச் சுருட்டி எழுந்து,

“அன்னா, கடல்ல கறுப்படிக்கிது, புள்ளுகளும் மீன்களத் தொரத்தி வருகிது. கெதியாய் போய் மூட்டானப் பாத்து இழுங்கடா...படுத்தது போதும், எழும்புங்கடா" என்று கொளந்த சொல்லிக் கொண்டு, மூட்டான் கயிற்றடிக்குப் போகிறான். கொளந்தையைப் பின்தொடர்ந்து, வாடிக்குள் இருந்த எல்லோரும் போகின்றனர், கடலில் மீன் கொதித்து வருவதைப் பார்த்து தண்டயல் தோணியில் இருந்து தன் சால்வையைக் காட்டி எல்லா மீனவர்களையும் உசார்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறான். இங்கே, சேலோடி செலயிமானும், அவிசனாட அச்சியும் லாவு உப்படிச்ச கீரிமீன்களை, கூடையில் அள்ளி எடுத்துக் கொண்டு, வெயிலில் காயப்போடுகின்றனர்.

காலை ஏழு மணியை விழுங்கி விட்டு, சூரியன் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறான். வடிவன் வாடியில் படுத்துக் கிடந்த எல்லோரும் எழும்பி, வலைக்காலடிக்கு போகின்றனர். கடலில் மீன் கொதித்து கறுத்து வருகிறது. மீன் கொதிப்பை பார்த்து மீனவர்கள் துடித்துக் கொண்டிருக்கின்றனர். அலவக் கரவைக்குள், வலையில் முடிந்து விட்ட மூட்டான் கயிற்றை, பிடித்துக் கொண்டு, சாலாட சாவல் நீந்தி வருகிறான். சாவலிடமிருந்து மூட்டான் கயிற்றை பற்றிப் பிடித்து வலையை இழுப்பதில், மீனவர்கள் உசாராகி விட்டனர். தண்டையல் வளைந்து கிடக்கும் மீன்களின் கொதிப்பைக் காட்டிக் காட்டி, விரைவாக வலையை இழுக்க, மீனவர்களை உசார்படுத்திக் கொண்டிருக்கிறான்.

இரண்டு பக்கமும் மீனவர்கள் உசாராக வலையை பிடித்து இழுத்துக் கொண்டிருக்கின்றனர். வலை இழுக்கும் போது அம்பாப் பாடல்கள் இழுவைக்கு ஏற்றாப் போல், இரு வலைக் கால்களிலும் மீனவர்களால் ஏட்டிக்குப் போட்டியாகப் பாடப்படுகின்றன....

"ஏலேலோம்...ஏலேலோம்...ஓவடிஏலம்... ஏலச்சியாமாய்... கள்ளச் சிலாமாய்... கலம்மக் கயிறு.... ஏலேலோம் கடலைப் பார்ரா....கறுப்படிக்குது....புள்ளப் பார்ரா.... அள்ளிப் போகுது....ஏலேலோம்....ஓவேலேம்...."

வலை இழுக்கும் போது குசுவன்ட மம்மது அம்பாப் பாடலை ராகமெடுத்து பாட, மற்ற மீனவர்கள் ஏலேலோம்... சொல்லி இழுக்கின்றனர். ஒரே மகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையெல்லாம் கலியாண வீடுபோல் இருக்கிறது. கரையேறிய தோணியிலிருந்து, கூடைகளில் வடிவன் தோணி கரைத்தண்டல் மீன்களைக் கொண்டு வந்து, பெண்களுக்கும் ஆண்களுக்கும், இலவசமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். சிலர் பெட்டிகளிலும், பேக்குகளிலும் வாங்கிய மீன்களை எடுத்து மகிழ்ச்சியுடன் போகின்றனர்.

பெட்டி, பேக்குகள் கொண்டு வராதவர்கள் கடற்கரையோரத்தில் நிற்கும் அடம்பன் கொடிகளைப் பிடிங்கி வந்து, அதில் மீன்களை கோர்த்துக் கொண்டு போகின்றவனர். தூரத்தில் நிற்கும் மௌவலி ஒருவருக்கும் தண்டயல் மீன்களை அள்ளிக் கொடுத்து விட்டுப் போகின்றார். முஹைறதீன் தைக்கா மோதினும் கூட நிற்பதைப் பார்த்து தண்டயல் மீன்களை மீண்டும் திரும்பி வந்து அவருக்கும் அள்ளிப் போட்டுவிட்டு சிரித்தபடி போகிறார்.

வயிரன் தோணி கரை ஏறப்போகிறது. மீனவர்கள் சள்ளையைக் கூட்டிக் கொண்டிருக்கின்றனர். மடி நிறைய முண்டக்கண் பாரக்குட்டி...மடி, மீனவர்களின் இழுவைக்கு சற்று அசையாதிருக்க, மடி வெடித்து விடும் போல் இருக்கிறது. உடனே வீறான் தண்டயல் "டே, சாவால் வாடிக்க ஓடிப் போய் மடி தாங்கிய எடுத்துக்கு ஓடியாடாம்பி..." என்று சொல்ல, சாவல் அம்பு போல் வாடிக்குள் போய், மடி தாங்கிய எடுத்து வருகிறான். மீனவர்கள், மீன்களால் நிரம்பி அசையாது கிடக்கும் மடிக்கு மடிதாங்கிய போட்டு இழுத்து கரையேற்றி குதுகலித்து நிற்கின்றனர். மடி நிறைய முண்டக்கன் பாரக்குட்டி மீன் கனத்துக் கிடப்பதைப் பார்த்து பார்த்து மீனவர்கள் குதுகலித்து நிற்கின்றனர். மடியில் விம்மிக் கிடக்கும் மீன்களை, கூடைகளில் அள்ளி, தரையில் கொண்டு போய் போடுகின்றனர். கரைத் தண்டயல் பம்பரம் போல் சுழன்று கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைக்கால்களில் நின்று வலை இழுத்து களைத்த மீனவர்கள் சிலர், தேனீர் குடிப்பதற்காக கடைக்குப் போகின்றனர். தேயிலைக் கடை முதலாளி யாக்குப்பு "ங்...வாங்க பாலப்பம், முட்டக்கோஸ் இரிக்கு...சூடாறல்ல...எடுங்க..." என்று கூறிவிட்டு தேனீர் போடுவதில் உசாராகி நிற்கின்றான். வலையிழுத்து களைத்த மீனவர்கள் எல்லோரும் யாக்கூப்பின் தேனீர் கடையில் குவிந்து இருக்கிறனர். அப்பொழுது கரைத்தணடயல் சாலாட மீரான் "ங்...தேயிலையைக் குடிச்சுப் போட்டு கெதியா வந்து, தோணில்ல வலய ஏத்துக்காங்க..அன்னா, மீன் கொதி கறுப்படிச்சி வருகிது, ங்...சட்டுப் பண்ணி வாங்க வாப்பா" என்று கூற, தேனீர்க் கடைக்குள் இருந்த மீனவர்கள் எல்லோரும் சுறுக்காப் போகின்றனர். தாளை மரநிழலில் குந்திக் கொண்டிருந்த பெண்கள், கரையேறிய வயிரன். தோணிலடிக்கு வந்து நிற்கின்றனர். அவர்களோடு புத்தியறிஞ்ச நாலந்து குமருப் பிள்ளைகளும் நிற்கின்றனர்.

எல்லாம் நல்ல வடிவான குமருகள். அவர்களை ஏழ்மை சிறை பிடித்து, வாழ்வை கருக்கிக் கொண்டிருக்கிறது. கரைத் தண்டயல் சாலாட மீரான் கூடையில் கொஞ்சம் மீன்களை எடுத்து கூடி நிற்கும் பெண்களுக்கு கொடுக்கிறான். அங்கே அழகோடு போராடிக் கொண்டிருந்த குமருப் பிள்ளையை மீரான் பார்த்து 'நீ, எங்கிடட ஆதம் மாமாட எளய மகளா?" என்று கேட்க, பக்கத்தில் மீன் வாங்கிக் கொண்டிருந்த கெவிளிபெண்டி "ஓம் தம்பி ,ஆதம் மாமாட ரெண்டாவது புள்ள இவதான். அவருக்கு ஓண்டுக்கும் ஏலா படுத்த படுக்கைதான், இப்ப" என்று கூறுகிறாள். ச்சா...!ஆதம் மாமா எவ்வளவு உசாராண மனிசன். எங்கிட தோணிலுக்கு இல்லாமல் போன ஒரு கைமுறிஞ்ச மாதிரிப் போச்சி" என்று கரைத் தண்டயல் கூறி, பாரக்குட்டி மீன்களை அள்ளிப் போடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடற்கரைக்கு வாற நேரம், ஒரு பேக்கை கையில பிடித்து வாறல்லியா?" என்று தண்டயல் கூற, பக்கத்தில் நின்று கொண்டிருந்த அகமது ஓடிப் போய், அலம்பைக் கொடியொன்றை பிச்சி வந்து, மீன்களையெல்லாம் வடிவாகக் கோருத்து ஆதம்மாமாவின் மகளின் கையில் கொடுக்கிறான். அந்த நிமிடமே, அகமது மன்மதனாகிறான்.

எங்கும், இளமையின் ஊஞ்சலில், கடற்கரை இசை பாடுகிறது. ஆதம்மாமாவின் மகள் மீன்கோருவையோடு, அகமதைப் பார்த்து போவதைக் கண்டு கரைத் தண்டயல் மீரான் கொடுப்புக்கால் சிரிக்கிறார்.

சூரியன், பனிரெண்டு மணியை விழுங்கிக் கொண்டு உச்சியை பிடித்த இறுமாப்பில், வெய்யிலை கசக்கிக் கொண்டிருக்கிறான். மீனவர்கள் தங்கள் தோணிகளின் வலைகளை எல்லாம் வெய்யிலில் காயப் போட்டுக் கொண்டிருக்கிறனர். கீரிக் கருவாட்டின் மணம், கடற்கரையெங்கும் வியாபித்து மணக்கிறது.

மீனவர்கள் எல்லோரும் போய் விட கடற்கரையெங்கும் வெறிச்சோடிப் போகிறது.

அந்திவானம் அமைதியாகக் கிடக்கிறது. மீண்டும், எங்களூர் கடற்கரை மீனவர்களால் உயிர்த்தெழுந்து சிரிக்கிறது. காலையில் பிடித்த மீன்களின் பணத்தைப் பிரிப்பதற்காக, மீனவர்கள் வாடிகளில் குந்திக் கொண்டிருக்கின்றனர்.

வாடிகளுக்குள் கடல் அரிக்கன்லாம்புகள் ஒளியேற்றிக் கொண்டிருக்கின்றன. தேனீர்கடை யாக்கூப், காலையில் மீனவர்களுக்கு கொடுத்த கடன் கொப்பியோடு வாடியை நோக்கி வந்து கொண்டிருக்கிறான். வாடியெங்கும் மகிழ்ச்சியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மாளமுமாக இருக்கிறது. காலையில் வியாபாரிகளுக்கு கொடுத்த மீன்களின் பணத்தோடு, கணக்கப்பிள்ளை வருகிறார். அவரோடு தண்டியிழுக்கிற பூனப்பல்லன்ட நாகூரானும் வருகிறான். காசிப்பையோடு வந்த கணக்கப்பிள்ளை வாடியில் அமர்ந்து கணக்கைப் பார்த்து மீனவர்களின் பங்குப் பணத்தை பிரிக்கின்றார். இரண்டு நாட்கள் பிடித்த மீன்களின் கணக்கை, கணக்கப்பிள்ளை இன்றுதான், ஒன்றாக சேர்த்து பார்த்துக் கொண்டிருக்கிறார். இரண்டு நாட்களும் கடலில் மீன்பிடி நல்ல கதிப்பாக இருந்ததால், காசிம் கனப்பாக இருக்கிறது. பலமாதங்களாக கடலில் மீன்பிடி இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்த கடற்கரை, மீன்பிடி கனத்ததால் மீனவர்களின் முகமெல்லாம் பூரித்து மலர்ந்து கிடக்கிறது. தேனீர்க் கடை யாக்கூப்பு, கச்சான் கொட்டை சுருள்களோடு வந்து குத்திக் கொண்டிருக்கிறான். மீனவர்கள் சிலர், கச்சான் கொட்டை சுருள்களை வாங்கி உடைத்து வாயில் போட்டுக் கொண்டிருக்கின்றனர். அப்பொழுது, "தம்பே! என்ர மூத்த மகன் மம்மது, ஒரு சைக்கிள் வாங்கி கேட்டு, லாவெல்லாம் ஒரே கரச்சிப்படுத்திக்கு கிடந்தான். பெண்டாட்டியும் கூட, மகனுக்கு சப்போட் பண்றா. எனக்கு செலவுக்கு கூட கையில ஒரு சதமுமில்லை.. இன்டைக்கு கிடைக்கிறதை கொண்டுதான், ஒரு மூட நெல்லு வாங்கிக் குத்தி எடுக்கணும். ஊட்ட பாடெல்லாம் கடும் கஷ்டம்டா தம்பி" என்று பொந்தன்ட பொக்கணியன் கூறியபடி கச்சான் கொட்டையை உடைத்து வாயில் போடுகிறான்.

பொந்தன்ட பொக்கணியன்ட கதையை கேட்டுக் கொண்டிருந்த தோலன்ட சமது, "ஒன்ட சீலம் தான் எனக்கும் வந்திரிக்கு...இவள் வட்டியன்ட ஆசியா, நேத்து லாவு வந்து அவள்ள வட்டிகாசக் கேட்டு கொம்புறாள். இல்லாட்டி ஊட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்டுப் போட்டு எழும்பச் சொல்றாள். ஐயாயிரம் வாங்கின காசிக்கு வட்டிக் காசே ரெண்டாயிரம் குடுத்திட்டன்."

"இப்ப, ஒன்டுக்கும் மசியாம காசக் கேக்காள். இதுக்குள்ள பொண்டாட்டிக்கு சீனி வருத்தம்... ஒவ்வொரு நாளும் ரத்தம் சோதிக்கிறத்திலேயே வாண்ட போகிது..." என்று சமது கூறிவிட்டு, கணக்கப்பிள்ளை காசி பிரிப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

சூரியன் முற்றாக மறைந்து விட கடற்காற்று முழுமையாக வீசிக் கொண்டிருக்கிறது. வீசும் வாடைக் காற்றின் வேகத்தை தாங்க முடியாமல் வாடிக்குள் கட்டி இருந்த கடல் லாம்புகள் இரண்டும் அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருக்கின்றன. மீனவர்கள் சுமார் இரண்டு மூன்று மாதங்கள் மீன்பிடி இல்லாமல் தாங்கள் பட்ட கஷ்ட நட்டங்களைச் சொல்லிச் சொல்லி அசைபோட்டுக் கொண்டிருக்கின்றனர். மீனவர்களின் காசி பிரிக்கும் வேலையில், கணக்கப்பிள்ளை கண்ணும் கருத்துமா இருக்கின்றார். அப்பொழுது, பூனப்பல்லன்ட மையதீன்

"கணக்கப்புள்ள...! இந்தக் காசில புடிகாசியை எடுக்காம கெடச்ச காசி எல்லாத்தையும் போட்டு பிரிங்க... கனக்கச்செலவெல்லாம் கெடக்கு.." என்று கூற, அதை எல்லா மீனவர்களும் ஏகோபித்து ஆமோதித்து சிரிக்கின்றனர். அப்பொழுது, சுப்ரிந்தர்ர பள்ளிவாசல் மோதின், கொழுக்கட்ட பொட்டிர கலந்தர், இஷ்ஷாத் தொழுகைக்குரிய பாங்கை ராகமெடுத்து விடுகிறார். பாங்கு சப்தத்தை கேட்டு மீனவர்கள், அமைதியாகி சப்தமின்றி இருக்கின்றனர்.

பாங்கு முடிவடைந்து மீனவர்கள் அமைதியாக இருக்கும் போது, ஆதம்மாமாவின் மனைவி தன்னுடைய கடைசி மகளை கையில் பிடித்தவாறு வந்து வயிரன் தோணி வாடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறாள். ஆதம்மாமா நல்ல மீனவராக இருந்து இந்த வயிரன் தோணி வளர்ச்சி பெறப் பாடுபட்டு, இன்று நோய் வாய்ப்பட்டு, ஆறு மாதங்களுக்கு மேலாக, படுத்த படுக்கையால் வீட்டிலேயே இருக்கிறார். இவரின் மேல் எல்லா மீனவர்களுக்கும் நல்ல மதிப்பும், மரியாதையும் இருப்பதினால், அவரின் மனைவி வாடிக்கு வந்திருப்பதைப் பற்றி அறிய அவசரப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மீனவர்களின் அவசரத்தை சாதகமாகிக் கொண்டு கரைத் தண்டயல், ஆதம்மாமாவின் மனைவி வந்த விடயத்தைக் கேட்கிறார். எல்லா மீனவர்களும் அவவின் பதிலை எதிர் பார்த்த வண்ணம் இருக்கின்றர். "ஆதம் மாமாவின் நெலம மிச்சம் மோசமாக கெடக்கு...கெதியா ஒப்பரசன் பண்ணனுமெண்டு டாக்டர் செல்லிற்றாரு.. கொழும்புக்குத்தான் போகணும்...என்ர ஊட்டு நெலம, ஒங்களுக்கெல்லாம் நல்லாத் தெரியும். இரிக்கிறத்துக்கு ஒழுங்கா ஒரு ஊடு கூடக் கிடையாது. இப்ப இரிக்கிற குடில் கூட, மழைக்குள்ள ஒழுகிக்கரயிது. நான் அவரக் கொழும்புக்கு கொண்டு போய், ஒப்பரேசன் பண்ண, ஒங்களால் முடியுமான ஒரு ஒதவியப் பண்ணுங்க... அல்லாஹ் ஒங்களுக்கு ஒதவி செய்வான். இந்தக் குமருகள்ள முகத்திற்காவது செய்ங்க..." என்று கூறிவிட்டு ஆதம்மாமாவின் மனைவி தன் முந்தானையை எடுத்து வழியும் கண்ணீரைத் துடைக்கிறாள்.

ஆதம்மாமா எல்லா மீனவர்களுடனும் அன்பாகவும், ஆதரவாகவும் பழகியவர். அவரின் கஷ்டநிலையை கரைத் தண்டயல், மீனவர்களிடம் எடுத்து கூறியதும், எல்லோரிடமும் வேதனை ஆட்சி செலுத்தி, மனிதத்துவம் மேலோங்கி நின்றது. காசி கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த கணக்கப் பிள்ளை இப்ப என்ன செய்யிற? கட்டாயம் இதுக்கு ஒரு ஒதவி செய்யிறது நமது கடமை. பலகாலமாக நம்மயோடு ஒன்டாவேல செஞ்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிசன். இந்த தோணி வலய பெரிசாக்க லாவுபகலெண்டு பாராம ஒழைச்ச மனிசன். புள்ள குட்டிக்காரன்…" என்று முடிப்பதற்கிடையில் எல்லா மீனவர்களும் ஒருமித்து அவட கையில, நேத்தும் இண்டைக்கும் வந்த காசில ஒரு சதமும் எடுக்காம குடுத்திருங்க…எங்களுக்கு அல்லாஹ் தருவான்…" என்று கூறுகின்றனர்.

மறுகணம், கணக்கப்பிள்ளை காசை எண்ணிக் கொடுக்க ஆதம் மாமாவின் மனைவி மனநிறைவோடு போகிறாள். அவளின் மகிழ்ச்சியில், வானத்தில் சின்ன நிலாவும் சேர்ந்து சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமிர இட்டும

விடாமல் பெய்யும் மழையால் ஊரெல்லாம் வெள்ளக்காடாகிக் கிடக்கிறது. வெளியில் வரமுடியாமல் மக்களெல்லாம் வீடுகளிலே வதங்கிக் கிடக்கின்றனர். சிலர் வீடுகளில் வெள்ளம் புகுந்து விட்டதால் அகதிகளாகிப் பாடசாலைகளில் தஞ்சமடைந்து கிடக்கின்றனர். வானம் சதா, கேரிக் கேரி மழையை ஊத்திக் கொண்டே இருக்கின்றது. பாவம்! சூரியனைப் பல நாட்களாகக் காணாத மக்கள், குளிரையும், கூதலையும் தாங்க முடியாமல் பசியின் கைப்பொம்மையாகித் தவிக்கின்றார்கள்.

நேரம் ஏழு மணியை தாண்டி விட்டதை, என் வளவுத் தென்னைகளில் கொடுகிக் கிடந்த காகங்கள் விழித்துக்கத்திக் கொண்டிருக்கின்றன. நான் தேனீரைக் குடித்து விட்டு, அமைதியாக விறாந்தையில் குந்திக் கொண்டிருக்கிறேன். என் மனைவி சோகமே உருவாகி, மனவேதனையுடன் வந்து நிற்கிறாள். குளிரின் கொடுமை தாங்க முடியாமல், இரவெல்லாம் அடுப்படியில் கிடந்த எங்கள் வீட்டுப் பூனை, எங்கள் பக்கத்தில் வந்து கத்திக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனைவி "உம்மா, லாவெல்லாம் அரவே படுக்கெல்ல. நாசமத்துப் போன இருமலால ஒரே, படுக்காம இருகிட்டே கிடந்தா... பாவம்! நல்லாச் சவுத்துப் பெயித்தா.... லாவு நானும் கண் மூடிப் படுக்கெல்ல. வயசிம் எண்பதாப் போச்சி, அடிக்கடி நானும் எழும்பிப் போய் பார்த்தன். எதுக்கும் நல்ல டாக்குத்தர்மார்ர, நல்ல மருந்துகளை குடிச்சித்தானே நோய் தீரும், இவன் முத்தலிவாட மகன்ட குளிச குடிச்சாத்தானா வருத்தம் தீர்ர? என்ன சொன்னாலும் இந்த மனிசி கேக்க மாட்டா.... எல்லாத்திலயும் புடிவாதம்தான்" என்று தன் தாயின் நோயைப் பற்றியும், புடிவாதத்தைப் பற்றியும் கூறி விட்டு பெருமூச்சு விடுகிறாள்.

பெற்ற தாயின் பிடிவாதமும், நோயும் என் மனைவியை அதிகமாகப் பாதித்து விட்டதை, அவளின் வேதனையில் இருந்து புரிந்து கொண்டேன். வாழ்க்கையில் நாட்டு வைத்தியர்களைத் தவிர வேரு எந்த டாக்குத்தர்களின் மருந்தும் தொட்டும் பார்க்காமல் வாழும் என் மனைவியின் தாய்க்கு, ஒரு கிழமையாக நல்ல வருத்தம், மழையும் குளிரும் நன்றாகப் பாதித்து விட்டது. இதனால் நானும் என் மனைவியும் சேர்ந்து எங்களுர் ஜாபிர் டாக்டரிடம் போய், மருந்து எடுத்துவர சற்று கோபமா கூப்பிட்டதினால், எங்கள் வீடே போர்க்களமாகி, எங்களுடன் சண்டைபிடித்துக் கொண்டு, தன் மகனின் வீட்டிற்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறா. நாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பிடிவாதமாக சாப்பிடாமல் இருப்பதால் என் மனைவியும் மக்களும் சோர்ந்து கிடக்கின்றனர்.

அயர்வடையாச் சிற்றெரும்பு போல் விடியச்சாமத்திலேயே எழும்பி, சுபஹ் தொழுகையைத் தொழுது விட்டு, வீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளைச் செய்வா. மருந்து குடிக்கும் விடயத்தில் தாய்க்கும் மகளுக்கும்,அடிக்கடி வீட்டில் சிறு சிறு சண்டைகள் வருவது வழக்கம். இச்சண்டைகள் வந்தது போலவே போய்விடும். சில நேரம் ஓரிரு நாட்களுக்கு தொடர்ந்து இருக்கும். இப்படியான நேரங்களில் என் மனைவியுடனும், என்னுடனும் ஒரு வார்த்தை கூட பேசாமல் இருப்பா.

இன்று, இரவிலிருந்துதான் என்றுமில்லாதவாறு சற்று கோபமுடன் எங்களுடன் முரண்பட்டுக் கொண்டு மகனின் வீட்டிற்கு போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறா. அப்பாவியான என் மனைவிக்கு ஓயாமல் ஏசிக் கொண்டிருக்கிறா. நாங்கள் டாக்டரின் மருந்து குடிக்கச் சொன்னதுதான் பெரிய குற்றமாகி விட்டது. காலையிலேயே அவ மருந்தெடுத்துக் குடிக்கும் நாட்டு வைத்தியரிடம் முளிசை வாங்கி வருவதற்கு, என் மகன் போய் விட்டான். அவன் வருவதற்குள், மகனின் வீட்டிற்கு போவதற்கு தயாராகி விட்டா...

எனக்கு மூன்று பிள்ளைகள். இவர்களோடு என் மாமிக்கு உயிர். எப்பொழுதும் என் மனைவியோடும்,பேரப் பிள்ளைகளோடும் அளவிட முடியாத அன்போடும் பாசத்தோடும் இருக்கும் என் மாமிக்கு நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. இரவு கடும் குளிரோடு, காய்ச்சலால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த மாமியை எங்களூர் வைத்தியசாலைக்கு கொண்டு போய், டாக்டரிடம் காட்டி மருந்து எடுத்துக் கொண்டு வந்து குடிக்கச் சொன்னதை தவிர, நாங்கள் எதுவுமே செய்யவில்லை. எடுத்து வந்த மருந்தை குடியாமல் கொஞ்சம், முரண்டுபண்ணிய நேரம் என் மனைவி கோபமாக பேசிவிட்டாள். இதனால் எங்கள் வீடே போர்க்களமாகிக் கிடக்கிறது. பாவம்! என் மனைவி சோர்ந்து போய், வேதனையில் வெந்துருகிக் கிடக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது பெய்யும் மழையால், ஊரே வெள்ளக்காடாகிக் கிடக்கும் நிலையில், மாமி பிடிவாதமாகத் தன் மகனின் வீட்டிற்குப் போவதற்கு, உடுப்பு வேக்கோடு நிற்பது, எங்களுக் கெல்லாம் வேதனையாக இருக்கிறது. மாமியின் பிடிவாதத்தினால் சிந்தை குலைந்த என் மகள் ஹுஸ்னா "லொாகேோ ஒனக் கென்ன லூசா? இப்ப ஒனக்கு என்ன செஞ்சதிக்கு இவ்வளவு இட்டும காட்டிக்கு நிக்காய்...? படுத்த பாயில மூத்திரம் போன தெரியாமக் கிடந்த ஒன்ன ஆசிபத்திரிக்கு கொண்டு போய், மருந்தெடுத்துக்கு வந்து குடிக்கச் சொன்ன ஒரு குத்தமா...? ஒனக்கு அவன் முத்தலிபாட மகன்ட, அவினில செஞ்ச அந்த நாத்தக் குளிசதானா வேணும்..? என்னரிந்தாலும் பொம்பளைக்கு இவ்வளவு இட்டும இரிக்கப்புடா... அல்லாஹ் உனக்குத்தானா இந்த இட்டுமையையும் கோவத்தையிம் வெவச்சிப் படச்ச..? ஒன்னால இந்ந ஊட்டில எத்தன சீவனுகள் பட்டினியோடு கெடக்காக தெரியுமா... வாகா... வந்து சாப்பிடுகா... எழும்பி வாகா... எனக்கும் செரியாப் பசிக்குது. நீ ஒன்ட மகன்ட ஊட்ட போறென்டா போகா... அதுக்கு முன்ன, சாப்பிட்டுப் போட்டு போகா...,எழும்புகா... வருத்தக்கார நாம, வெறுங்குடலோட இரிக்கப்படாகா... வாகா..." என்று கூறி மூத்தம்மாவிடம் கெஞ்சுகிறா.என் மனைவி செய்யாத பிழைகயை எண்ணி கண்ணீர் உதிர்க்கிறாள். பூனை கத்திக் கொண்டே இருக்கிறது.

என் மகளின் வேண்டுதலும், கெஞ்சுதலும் தோல்வியைத் தழுவ, மகனின் வீட்டிற்கு போவதற்கு கட்டி வைத்த பேக்கைத் தூக்கிய படி...

"ஒன்ட உம்மா வாப்பாட ஊட்ட நீங்கதான் இரிங்க... என்ர செல்லுக்கு இந்த ஊட்டில ஒரு மதிப்பிரிக்கா...? என்ர செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப ஆரு கேக்காக... எல்லாத்திற்கும் எனக்கு ஏசிற பேசிற... நான்னென்ன வந்தாள் வரத்தாளா? கொழுத்த காணிக்காறி... எங்கு வாப்பாட பேரக் கேட்டாலே, ஊரு நடுங்கும்... ஒங்கும்மாட சோறு கறி இனி, எனக்குத் தேவல்ல... இஞ்ச நான் ஒரு நாளும் வரமாட்டன். என்ர மையத்தும் இனி, என்ர மகன்ட ஊட்ட இரிந்திதான் போகும். ஒங்கட சோத்தக் கறிய, நீங்க தின்னுங்க..." என்று எல்லோருக்கும் ஏசிக் கொண்டிருக்கிறா. 'என் வீடு அமைதியின் கைப்பொம்மையாகிக் கிடக்கிறது. எங்கள் வீட்டில் என் மாமியின் மேல் எல்லோருக்கும் பயமும், பாசமும், மரியாதையும் எப்பொழுதும் உண்டு. என் மனைவி, தாயின் சொல்லுக்கு என்றும் மரியாதை கொடுத்து நடந்து கொள்வாள். என் பிள்ளைகள் மீது மாமிக்கு நல்ல இரக்கம். அதிலும் என் மகள் ஹுஸ்னாவின் மீது ஒரு தனி விருப்பம். அப்படி இருந்தும் இன்று, என் மகளின் சொல்லையும் கேட்காமல் மகனின் வீட்டிற்கு போவதற்கு ஒத்தக் காலில் நிற்பது,எங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கிறது.

என் பேரப்பிள்ளைகள் மாமியின் பிடிவாதத்தைக் கணக்கெடுக்காமல், விளையாடிக் கொண்டிருக்கின்றனர். என் பேரப் பிள்ளைகளின் மேல் மாமிக்கு உயிர். இவர்கள் எந்தக் குறும்புகள் செய்தாலும் அதையெல்லாம் கணக்கெடுக்காமல் பொறுத்து, அவர்களோடு அன்பாக இருப்பா... இன்று, அவர்கள் மாமியைப் போகவிடாமல் தடுத்தும், கேக்காமல், மகனின் வீட்டிற்கு போவதற்கு துடிக்கிறா. என் பேரன் ஆசிம், கத்திக் கொண்டிருக்கும் பூனையைத் துரத்துகிறான். பேரனின் கரச்சல் பொறுக்க முடியாமல் பூனை கத்திக் கொண்டு வெளியில் ஓடுகிறது. அப்பொழுது, எங்களோடு வீட்டிலிருக்கும் ஹாய் எளயம்பி, கடற்கரைக்கு போய் வருகிறான். இவனைக் கண்ட நாய் பொட்டு ஊளையிட்டுக் கொண்டு ஓடுகிறது. 'கடல் சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரம். கடுமையாக உக்கலடிக்குது. இதால தோணி ஒன்டும் கடலுக்க தள்ளல்ல. எல்லாத் தோணிகளையும் கரையில ஏத்தி வெச்சிரிக்கானுகள்...' என்று சொல்லியபடி உள்ளுக்கு வருகிறான்.

எளயம்பியிடம் என் மனைவி "எங்களால இனி ஒன்டும் செய்ய ஏலா... நீதான இதப் பாத்து ஒரு மாதிரி சமார் புடிக்கனும். மகன்ட ஊட்ட போப்புறாவாம்" என்று கூறிவிட்டு ஓடிக் கொண்டிருக்கும் என் பேத்தியை பிடித்து, அதட்டிக் கொண்டிருக்கிறாள். எளயம்பி தீப்பந்தம் ஏந்தி நிற்கும் என் மாமியைப் பார்த்து "என்ர தாயே...! ஒன்ட பேய்க்கு மந்திரம் ஓத எனக்கேலா,வாப்பா... ஒங்கும்மா செய்ராப் போல செய்யட்டும், நீ ஒன்ட வேலய பாத்துக்கு இரி... முருங்க மரத்துல ஏறின பேய, எந்தப் பரிசாரியாலயும் எறக்குற கஷ்ரம்... நீங்கெல்லாம் பசியோட இரிக்காம, சோத்தப் போய் தின்னுங்க..." என்று சொல்லி விட்டு, மாமியடம் போகிறான். எளயம்பியிடம் மாமி கோபமாக "டே... எளயம்பி ஒன்ட லூசிக் கதய உட்டுப் போட்டு, என்னக் கொண்டு போய்,என்ர மகன்ட ஊட்ட உட்டுப் போட்டு வந்திரு. இந்த நரகத்துல ஒரு நிமிசமும், என்னால இரிக்கேலா... கெதியா என்னக் கூட்டிக்குப் போ..." என்று மாமி கூறுகிறா. மாமியின் கதயக் கேட்டு வெறுப்படைந்த என் மகள் ஹுஸ்னா.

"ஓங்கா.. இந்த ஊடு இப்ப ஒனக்கு நரகமாப் போச்சா...? இதுக் கெல்லாம் காரணம், எங்கு உம்மா வாப்பா ஒனக்குத் தந்த எளக்காரம்தான். இந்த ஊருக்க நடக்குறாப் போல ஒன்னயும் பார்த்திரிந்தா, ஒனக்கிந்த இட்டும, திமிரெல்லாம் வருமா? நிழலுக்க இரிந்து வெயிலுக்க நீ போனாத்தான் நிழல்ல அரும தெரியும்... ஒன்ட மகன்ட பொன்சாதிர குணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒனக்கென்ன தெரியாதா? ஒரு ஒகுத்து சோறு தாரத்திக்கே, ஆயிரம் கத கதைக்கிற ஒன்ட மருமகள். ஒன்ன எங்களப் போல வைச்சிருப்பாண்டா போற... வீணா எங்கு உம்மா வாப்பாட மனச இப்படிக் கசக்கிப் புழியாத... ஒன்னால அவகிட மனசி பர்ற பாட அந்த அல்லாஹ் தான் அறிவான். இப்படி இட்டும காட்ர ஒனக்கெங்க, புரியப் போகுது... மனிசனுக்கு வயசி போனா, எல்லாத்தையும் குறச்சிரணும்... இது வயசி போன காலத்திலதான் எல்லாம் கூடிரிக்கு..." என்று பேசி விட்டு ஹாய் எளயம்பியிடம், மூத்தம்மாவ கூட்டிக்குப் போய், அவவின் விருப்பப்படி மகன்ட வீட்டில் விட்டுப் போட்டு வா என்று சொல்கிறா. மகளின் பேச்சிக்குப் பின் வீட்டில் போர்க்களம் உக்கிரமடைகிறது.

மூத்தம்மாவின் கையிலிருந்த உடுப்பு பேக்கை என் மகன் பறிக்கிறான். சின்னப் பேரன் ஆசிம் மாமியின் கையைப் பிடித்து இழுக்கிறான். என் குடும்பமே ஒன்றுபட்டுப் போராடியும் மாமி எதையும் சட்டை செய்யாது.

தன் மகனின் வீட்டிற்குப் போகிறா. ஹாய் எளயம்பி பின் தொடர்ந்து போகிறான். மாமியும் எளயம்பியும் போவதைப் பார்த்து வாசலில் படுத்துக் கிடந்த நாய் பொட்டு ஊளையிடுகிறது.

தாயின் மீது அளவு கடந்த அன்போடும் பாசத்தோடும் இருந்த என் மனைவி அவள் முயற்சிகள் யாவும் ஊமையாகிப் போனதை எண்ணி, கண்களில் கசியும் கண்ணீர்த் துளிகளை, முந்தானையால் துடைக்கிறாள். சொல்லமுடியாத வேதனையில் என் மகள் ஹுஸ்னா, உம்மம்மா போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அப்பொழுது ரோட்டால் மீன் வியாபாரி தங்காள்ள மக்கீன் கத்திக் கொண்டு வருகிறான். வந்தவன் என் வீட்டுக் கேட்றடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று 'புள்ளே நம்முட பாலக்கட்ட மோத்துவாரத்துல வீசின கைமீன் இரிக்கி வேணுமாகா? கொறுக்காப்புளி வெச்சி ஆக்கினா, ஆணம் நல்லாரிக்கும். வெள்ளத்தண்ணில வந்த மீன் கறிக்கு ருசியா இரிக்கும். ரெண்டு துண்டப் போட்டு பொரிச்சாலும் சோக்காரிக்கும்...வாகா, நாலு இடத்துக்கு நானும் போகனும். என்ன வாறியாக' என்று கூப்பிட்டுக் கொண்டு பெட்டியிலிருந்து மீனைத் தூக்கி எடுக்கிறான். நாய் பொட்டு, மீன் பெட்டியைப் பார்த்து அனுங்கிக் கொண்டிருக்கிறது. மகள் ஹுஸ்னா மக்கீனிடம் வந்து மீனை வாங்கிக் கொண்டு போகும் போது பூனை பின்னால் கத்திக் கொண்டோடுகிறது.

"மக்கீன் மீனிரிக்கோ... கைம்மீன், செத்தல்... விடியச்சாமத்துல புடிச்ச மீன்... வேணுமென்டாக்கள் ஓடியாங்க... புள்ளேய்! நான் போயிற்று பின்னரம் வாறன் காச வைகா..." என்று சொல்லிக் கொண்டு போகிறான். வானம் வெளிக்காமல் மப்பும் மந்தாரமாகவே இருக்கிறது. உம்மா வீட்டை விட்டுப் போன துக்கத்தில் என் மனைவி சோர்ந்து போய் குந்திக் கொண்டிருக்கிறாள். தாயின் வேதனையைப் பார்த்து என் மகள்.

"நீ என்னத்துக்கு இப்படி இடிஞ்சி போய் குந்திரிக்காய்? எழும்புகா... அவ எங்க பெயித்தா...? அவட மகன்ட ஊட்டதானே போயிருக்கா. ரெண்டு மூனு நாள் சோட்டைக்கு அங்கயும் இருந்து போட்டு வரட்டுமே. ஒன்ட தம்பிதானே... அவர் என் என்ன உம்மாவ சும்மா உடுவாரா? லொகறாபெயித்து, எழும்புகா... வாங்கின மீன் சட்டிக்க கெடக்கு. லாவும் சோறு திங்கல்ல. எழும்பிக்கந்து மீன அறுகா..." மகளின் சொல்லைக் கேட்டு என் மனைவி எழுந்து போகிறாள். றகுமானியாப் பள்ளி வாசல் மோதின், லுஹர் தொழுகைக்கான வாங்கை விடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மூத்த பேரன் பள்ளிக்குத் தொழப் போக, றெடியாகி வந்து நிற்கிறான்.

அஸர் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வந்து, குந்திக் கொண்டிருக்கும் எனக்கு, மகள் ஹுஸ்னா அவித்த மையறு கிழங்கும் தேத்தண்ணியும் கொண்டு வந்து தந்து விட்டுப் போகிறா. பள்ளக்காட்டுக் கிழங்கு நன்றாக அவிந்து ருசியாக இருக்கிறது. எனக்குப் பக்கத்தில் கிழங்குக் கோப்பையோடு வந்து ஹாய் எளயம்பி இருக்கிறான். எங்களூர் பாடசாலைகள் எல்லாம் அகதி முகாம்களாகி விட்டதால் பாடசாலைகளுக்கெல்லாம் லீவு கொடுத்து விட்டார்கள். இதனால் என் பேரன்மார்கள் பாடசாலைகக்குப் போகாமல், வீட்டைப் பிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். தாய் வீட்டை விட்டுப் போன கவலையில் இருந்து விடுபடாமல் என் மனைவி வேதனையில் வெந்துருகிக் கொண்டிருக்கிறாள். மூத்தம்மாவின் பிரிவு என் மகளையும் வாட்டிக் கொண்டே இரிக்கிறது. பக்கத்தில் குந்திக் கொண்டிருந்த எளயம்பி இப்ப என்ன செஞ்சதுக்கு இந்த மனிசி இப்படிக் கோவிச்சுக்குப் போனா...? என்னரிந்தாலும் இப்படிக் கோவிச்சுக்கா போற...?" என்று சொல்லிக் கொண்டு அவித்த கிழங்கை சாப்பிடுகிறான். பூனை எளயம்பியின் பக்கத்தில் வந்து கத்திக் கொண்டிருக்கிறது.

அப்பொழுது வாசலில் அமைதியாக படுத்துக் கிடந்த நாய் பொட்டு எழும்பி, அனுகிக் கொண்டு என் வாசல் கேட்றடியில் ஓடுகிறது. அங்கே எங்களோடு சண்டை பிடித்துக் கொண்டு போன என் மாமியை மச்சினன் கூட்டிக் கொண்டு வருகிறான். வந்தவன் "என்றல்லாவே நடக்கேலாம தள்ளார்ர இந்த மனிசிட கோவத்தப் பாத்தா எனக்கு என்ன செய்றன்டே தெரியல்ல... என்ர ஊடு வளவெல்லாம் செரியான தண்ணி, மச்சான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்க லாவையில படுக்குறதே பெரிய கஷ்ரம் இதுககுல்ல இந்த வயசி போன மனிசிய எப்படி மச்சான் வெச்சுக்கிரிக்கிற... என்னரிந்தாலும் ஒரு பொம்புளைக்கு இவ்வளவு இட்டும இரிக்கப்புடா... வருத்தத்திக்கு மருந்து செய்யச் சொல்றது ஒரு பெரிய குத்தமா? ஊருக்க புள்ளயல் கவனிக்காம, உம்மா வாப்பா பர்ற கஷ்ரம்... இத உத்துணர்ந்து பார்க்கிறலயா? பெரிய பணக்காரனுகள்ள உம்மா வாப்பா,சோறு கஞ்சி இல்லாம, ஊடுடா பிச்செடுத்துக்குத் திரியுற தெரியிறல்லியா?" என்று சொல்லி உம்மாவைக் கூட்டிக் கொண்டு உள்ளுக்குப் போகிறான். மாமியைக் கண்ட என் பேத்தி, சந்தோசமாக ஓடிப்போக மாமி அவளை வாரித் தூக்கி எடுத்து கொஞ்சுகிறா. இதைப் பார்த்து என் மனைவி கவலையை மறந்து சிரிக்காள். ஊடே சிரிக்கிறது...!

## மண் வளச் சொற்களும் - விளக்கமும்

| | | |
|---|---|---|
| லாவு | - | இரவு |
| அறவ | - | முற்றாக |
| இட்டும் | - | கோபம பிடிவாதம் |
| மையத்து | - | சீவனில்லாத உடல் |
| உக்கல் | - | கொந்தளிப்பு |
| ஒகுத்து | - | நேரம் |
| லுகர | - | லொகர்-மதியம் - தொழும் நேரம் |
| பாங்கு | - | அழைப்பு |
| அஸர் | - | பின்னேரம் - தொழும் நேரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எஸ்.முத்துமீரான்

ஈழத்தின் முஸ்லிம் தமிழ் மீனவர்களின் வாழ்வியலில் மணம் கமழும் வார்த்தைகளில் அவர்தம் கதை சொல்லும் ஈழத்து கதை சொல்லிகளில் இவர் தனித்துவமானவர்.
இத்தொகுப்பில் அமைந்துள்ள புனைப்பிரதிகளில் கிழக்கு மண்ணின் முஸ்லிம் தமிழ் மீனவ மக்களின் வாழ்வியலில் மணம் கமழும்
வார்த்தைகளால் அவர்தம் கதைகளை சொல்லி இருக்கிறார் என்ற வகையில், நண்பர் முத்துமீரானின் இத்தொகுப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

-மேமன்கவி


450/- Short Stories ISBN 978-624-00-1083-2

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்
661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

9 786240 010832



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org